
# ஆண்டு மலர்

1952–'53

JHS

PRO BONO ET VERO



# புனித சூசையப்பர் கல்லூரி உயர்நிலைப்பள்ளி

திருச்சிராப்பள்ளி

# ST. JOSEPH'S COLLEGE HIGH SCHOOL,

TIRUCHIRAPALLI - 1-7-1952.




**Photo taken on the occasion of the Retirement of Messrs. R. S. RAMACHANDRA IYER**

**and**


**K. [illegible]ANDA[illegible]**

# ஆண்டு மலர் 1952-53



## புனித சூசையப்பர் கல்லூரி உயர்நிலைப்பள்ளி

## திருச்சிராப்பள்ளி



# உள் அடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| **கவிதை** | | |
| கடவுள் வணக்கம் | ... | 1 |
| பள்ளி வணக்கம் | ... | 1 |
| பதில் உரைப்பீர் | ... | 19 |
| பாட்டுக்கொரு கவிஞன் | ... | 28 |
| நாயனார் | ... | 33 |
| பெற்ற மனம் | ... | 41 |
| உதய கீதம் | ... | 56 |
| **கட்டுரை** | | |
| உலகின் விமோசனம் | ... | 8 |
| புனித சவேரியார் | ... | 10 |
| *The Smallest S ate* | ... | 20 |
| உழவன் | ... | 22 |
| மாணவர் கடமை | ... | 23 |
| *Let us go to the Moon* | ... | 24 |
| சிற்பத்தின் சீர்கேடு | ... | 25 |
| இளைஞர்கள் நகரம் | ... | 27 |
| மின்சாரம் | ... | 32 |
| *God's Country Vs. Man's Town* | | 34 |
| கோவைச் செலவு | ... | 35 |
| கொய்னா | ... | 42 |
| செவ்வாய் யாத்திரை | ... | 46 |
| நூற்றாண்டு வாழ்வு | ... | 53 |
| பிளாஸ்டிக் | ... | 55 |
| *Music on the Piano* | ... | 58 |
| *Pongal* | ... | 62 |
| நாகரிகம் | ... | 63 |
| பெற்றோர் ஒத்துழைப்பு | ... | 67 |
| *Man is Man* | ... | 69 |
| **கதை** | | |
| தேவ உதவி | ... | 9 |
| நினைவுச் சின்னம் | ... | 13 |
| போகாத வண்டி | ... | 18 |
| *My Pet* | ... | 29 |
| உயிரைக்காத்த உத்தமி | ... | 30 |
| ஏழை உள்ளம் | ... | 44 |
| *Is he a culprit?* | ... | 48 |
| பணப் பேய் | ... | 50 |
| *The cunning Fox* | ... | 52 |
| நாடோடி | ... | 57 |
| மறைந்த வாள் | ... | 60 |
| கள்ளமார்க்கட் | ... | 64 |
| எல்லாம் நன்மைக்கே | ... | 65 |
| *That's Life* | ... | 66 |
| **பிற** | | |
| இருளில் ஒளி | | |
| அணிந்துரை | | |
| ஆண்டு அறிக்கை 1951-'52 | ... | 2 |
| கழகங்களின் ஆண்டறிக்கைகள் 1952-'53 | ... | 70 |



பதிப்பாசிரியர், வெளியிடுவோர்: **சங். M. மரியநாயகம் சுவாமியார், புனித சூசையப்பர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.**

அச்சிடுவோர்: **K. A. ஊர்து சுவாமியார், மேற்பார்வையாளர்,**


**புனித சூசையப்பர் கைத்தொழிற்கூட அச்சகம், திருச்சிராப்பள்ளி.**



India's First Cardinal


HIS EMINENCE CARDINAL VALERIAN GRACIAS

Archbishop of Bombay




Rt. Rev. Mgr. P. MARIASELVAM,
S.D.B., D.D.
Bishop-Elect
of
Vellore.
(Old Student)

# வாழ்க பல்லாண்டு



Rev. Fr. I. THOMAS, S. J.,
Our old Headmaster
with novices,
our old students
From the Semi-boarding.


# இருளில் ஒளி



நாளுக்குநாள் நலிந்துவரும் இச்சமுதாயத்தைத் திருத்த வல்லவர் யாரோவென ஏங்குங்காலை "யாம் உளோம்," என எழுகின்றனர் ஒரு சாரார். யார் அவர்கள்? அணுக்குண்டு சகாப்தத்திலும்கூட ஆண்டவனின் அருள்நெறியைப் புகட்டி, அமைதிக்கு வழிகாட்டி, மக்களிடையே மருள்நீக்கும் அவர்கள் யார்? இருள் சூழ்ந்த உலகினுக்கு, அருள் என்னும் ஒளி பாய்ச்சி, அன்பென்னும் நீர்பாய்ச்சி வருபவர்கள் யார்? மக்களை மாக்களாகக் கருதும் கயவருக்குச் சவுக்கடி கொடுத்துச் சங்கநாதம் முழங்கும் அவ் வீரர்கள் யார்? இளைஞரின் மனதிலே, நல்லறிவைப் புகட்டி, நற்பாதை காட்டும் அவர்கள் யார்? இவற்றிற்கெல்லாம் ஒரே பதில். ஆம். ஒரே பதில்தான். அவர்கள்தான் கத்தோலிக்கக் குருக்கள்.

எதிர்ப்பக்கத்திலுள்ள படத்தில், 6 நவசந்நியாசிகளையும், அவர்களின் கண்காணிப் பாளராகிய ஓர் குருவையும் காண்கிறீர்கள். இடதுகோடியில் உள்ள அவர்தான் சங். தாமஸ் சுவாமிகள். நம் பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்து, நம் பள்ளியைப் பலதுறைகளிலும் முன்னேற நடாத்திச்சென்ற பெருந்தகை அவர். இப்போது, செண்பக னூரிலுள்ள சேசு சபைக் குருமடத்தில், நவசந்நியாசிகளின் கண்காணிப்பாளராகத் தொண்டாற்றி வருகின்றார். இப் பதவிக்குவரும் முதல் இந்தியர் இவரே என்பதைக் கேட்குங்கால், நாம் பெருமிதமடைகின்றோம். பொறுப்புவாய்ந்த இப் பதவியை அவர் ஏற்று நடத்தவல்ல நற்சுகத்தை அளிக்க ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

படத்திலே காணும், மற்ற அறுவரும் நவசந்நியாசிகள். இவர்கள் நம் பள்ளியின் பழைய மாணவர்கள். நம் பள்ளியின் பழைய தலைமையாசிரியரும், பழைய மாணவர் களும் ஒருங்கே கூடி, பெருந்தொண்டு ஆற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை.



# உயர்நிலைப்பள்ளி - - - - - ஆண்டு அறிக்கை 1951-'52

அறிவும் ஆற்றலும் அமைந்த அவைத் தலைவர் அவர்களே, பெருமைமிகு பெரியோர்களே, தாய்மார்களே, பேரன்பர்களே, எம் அழைப்புக் கிணங்கி ஈண்டு எழுந்தருளியுள்ள உங்களை உளமார வரவேற்கின்றோம்.

தங்கள் முன்னிலையில் எமது உயர்நிலைப் பள்ளியின் 1951—'52-ம் ஆண்டு அறிக்கையை வாசிக்க வாய்த்ததே எமக்குப் பெருமகிழ்ச்சியை உண்டாக்குகின்றது. சென்ற ஆண்டில் எமது பள்ளி எல்லாவகையிலும் வளர்ந்தோங்கிச் சிறந்த வெற்றியும் பெற்றிருப்பது எல்லோரும் அறிந்ததொன்றே. இதன்பொருட்டு எல்லாம் வல்ல எம்பிரானை மனமார வாழ்த்துவோமாக.

## ஆசிரியர் மாற்றம்

கடந்த மூன்று ஆண்டுகளாக, 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற கருத்துடன் உடல் நலம் பாராது தன்னலம் கருதாது ஆசிரியரும் மாணவரும் பெருமிதப்படும்படி சங். ஐ. தாமஸ் சுவாமிகள், சே. ச. தலைமையாசிரியராய்த் தொண்டு ஆற்றிவந்தார்கள். இப்போது, அவர்கள் செம்பகனூரிலுள்ள நவசந்நியாசிகளை ஞானவழியில், தெய்வ நெறியில் வீரமுடன் நடத்திச் செல்லும்படியான பொறுப்புவாய்ந்த பெரும்பதவிக்கு மாற்றப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் நம் பள்ளிக்குச் செய்துள்ள அரியபெரிய தொண்டிற்கு யாம் பெரிதும் நன்றி பாராட்டுவதோடு வாழ்த்தும் கூறுகின்றோம்.

சில ஆண்டுகளாக நம் பள்ளியில் உதவித் தலைமையாசிரியர் பதவியேற்றுச் சிறந்த பணியாற்றிய சங். பெஞ்சமின் நத்தார், சே. ச. சுவாமிகளுக்கு நாம் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

எமது உயர்நிலைப்பள்ளியில் 30 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளன்போடும் ஊக்கத்தோடும் மாணவர் நலங்கருதி உழைத்துவந்த ஆசிரியர்களாகிய திரு. R. S. இராமச்சந்திர ஐயர், B.A., L.T., திரு. நடேச வாண்டையார், திரு. சின்னத்தம்பிப் பிள்ளை ஆகியோர் தங்கள் அலுவல் காலம் முழுவதும் இப் பள்ளியிலேயே பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளனர். இவர்கள் இதுகாறும் ஆற்றி வந்த தொண்டிற்கு எமது உளங்கனிந்த நன்றி உரியதாகுக. செக்ரடேரியல் கல்விப் பகுதிக்கு ஆசிரியராக இருந்த திரு. S. ஆரோக்கியசாமி, B.Com. தம் பணியிலிருந்து விலகி மேற்படிப்பிற்குச் சென்றுள்ளார். அவரது சேவையைப் பாராட்டுகின்றோம். திரு. M. B. J. ஜானகிராம் என்னும் ஆசிரியர் தம் வேலையிலிருந்து விலகிவிட்டார்.

இவ்வாண்டில் சங். A. மரியதாஸ், சே. ச. அவர்கள் உதவித் தலைமையாசிரியர் பதவியேற்று ஊக்கத்துடன் உதவிசெய்து வருகின்றார்கள். திரு. R. சிவராமன், B. Com., திரு. S. ராமசுப்ரமணியன் என்போர் முறையே, செக்ரடேரியல் கல்விப் பகுதிக்கும் கீழ்வகுப்புக்கும் ஆசிரியர்களாக பணியேற்றுள்ளனர்.

## மாணவர் தொகை

இவ்வாண்டில் எம்பள்ளி மாணவர் தொகை 1420. சென்ற ஆண்டு அறிக்கையில், 'மாணவர் தொகை அடுத்த ஆண்டில் ஒரு 100 குறையலாம்' என்று குறித்திருந்தோம். எனினும், பெற்றோர்கள் எமது பள்ளியின்பால் கொண்டுள்ள அன்பு, இந்த ஆண்டு அவ்விதம் செய்யவிடவில்லை.

மாணவர்கள் பள்ளிக்கு வந்த சராசரி நாட்கள் 100-க்கு 97 ஆகும். இது போதாதென்பதே எமது கருத்து. பெற்றோர்கள் மிகச் சிறிய காரியங்களுக்கும் தங்கள் பிள்ளைகளை வீட்டில் நிறுத்திக்கொள்வதன்றோ இதற்குக் காரணம்? எனவே, பெற்றோரும் பாதுகாப்பாளரும் பள்ளிக்கூட விதிகளைக் கடைப்பிடித்து இக்குறையும் நீங்க எம்முடன் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகின்றோம்.

### பள்ளியிறுதித் தேர்வு

சென்ற ஆண்டில் 222 மாணவர் உயர் நிலைப்பள்ளி யிறுதி அரசாங்கத் தேர்வு எழுதினார்கள். இவர்களுள் 193 பேர் தேறி யுள்ளனர். எனவே, 87 சதவீதம் வெற்றி பெற்றுள்ளது பெருமகிழ்ச்சிக்குரியதே. முந்தின ஆண்டில் 82 சதவீதமும், அதற்கு முந்திய ஆண்டில் 77 சதவீதமும் வெற்றி கிடைத்தது. ஒவ்வொரு ஆண்டும் 5 சத வீதம் உயர்ந்து வந்திருக்கிறதென்பது குறிப் பிடத்தக்கது. எமது பள்ளியின் மதிப்பு எண்கள் எல்லாம் உயர்ந்திருப்பதும் கீழே யுள்ள அட்டவணையிலிருந்து புலனாகும்:—

| பாடம் | பள்ளியின் சராசரி | மாகாணத் துச் சராசரி | பள்ளியின் உயர்ந்த மதிப்பெண் |
|---|---|---|---|
| தமிழ் | 52 | 48 | 79 |
| வடமொழி | 50 | 50 | 65 |
| ஆங்கிலம் | 51 | 38 | 80 (இருவர்) |
| பொதுக் கணிதம் | 61 | 44 | 89 (இருவர்) |
| கலப்புக் கணிதம் | 68 | 54 | 97 |
| பொது விஞ்ஞானம் | 48 | 39 | 77 |
| சமூகக்கல்வி | 59 | 48 | 89 |

மொத்தத்தில் உயர்ந்த மதிப்பெண் 406— K. முத்துக்குமார்.

இவற்றிற்கெல்லாம் காரணம் சென்ற ஆண்டுகளில் தலைமை ஆசிரியராயிருந்த சங். ஐ. தாமஸ் சுவாமிகளின் விடாமுயற்சியே என்றால் மிகையாகாது. மற்றும் ஆசிரியர் களின் அயரா உழைப்பும் மாணவர்களின் ஒத்துழைப்பும் ஊக்கமும் இப்பெருமை களுக்குக் காரணமாகும் என்பதும் வெள் ளிடைமலை.

திருச்சி மாவட்டத் தமிழாசிரியர் கழகம் நடத்திய தமிழ்த் தேர்வு எழுதிய எமது மாணவர்கள் 160 பேரில் 159 பேர் தேறி யுள்ளனர். வெற்றி 99·4 சதவீதம் கிடைத் திருப்பது போற்றத்தகுந்தது. R. ரெங்க நாதன் மூன்றும் பரிசாகிய வெள்ளிப்பதக்கம் பெற்றது குறிப்பிடத்தகுந்தது.

அமரபாரதி வித்யா பீடம் நடத்திய வட மொழித் தேர்வில் கலந்துகொண்ட 11 பேரில் 10 பேர் தேறினார்கள். G. சுப்ர மணியனுக்குப் பரிசும் கிடைத்தது.

### நூல் நிலையம்

கடந்த ஆண்டில் 2956 புதிய புத்தகங்கள் எமது பள்ளி நூல் நிலையத்தில் சேர்க்கப்பட் டுள்ளன. ஆகமொத்தம் இப்பொழுதுள்ள புத்தகங்கள் 22,412 ஆகும். மாணவர்கள் மொத்தத்தில் 13,679 புத்தகங்களை எடுத்துப் படித்திருக்கிறார்கள். ஆங்கில பாடத்திற் குரிய வகுப்பு நேரமும், மாணவர்களின் ஆங்கில அறிவும் குறைந்திருக்கும் இக்காலத் தில், மாணவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் தகுதிக்கேற்ற புத்தகங்களைத் தாமாகப் படிப்பதன் மூலமாகவே ஆங்கிலத்தில் தேர்ச்சிபெறமுடியும் என்ற கருத்தினால், ஒவ்வொன்றிலும் 50 பிரதிகள் உள்ள 44 வகை ஆங்கிலச் சிறுகதைப் புத்தகங்கள் புதிதாக நூல் நிலையத்தில் சேர்க்கப்பட் டுள்ளன. மாணவர்கள் அவைகளை நன்கு பயன்படுத்தி அறிவு வளர்ச்சி பெறவேண்டு மென்பது எமது ஆவல்.

### குடிமைப் பயிற்சி

புதிய கல்வித் திட்டப்படி குடிமைப் பயிற்சியில் எமது மாணவர்கள் சீரிய பண்பும் நேரிய தன்மையும் எய்தி, நற்குடி மகனாய் நல்வாழ்வு பெறும்பொருட்டு ஊக் கத்துடனும் உற்சாகத்துடனும் வாரந் தோறும் பயிற்சி பெற்றுவருகிறார்கள். தன் னலமின்றிப் பிறர்க்கென வாழும் செவ்விய முறையைச் சிரமேற்கொண்டு நாட்டிற்கும் மொழிக்கும் தொண்டு புரிவதை நடை முறையில் காட்டக்கற்கின்றார்கள். தஞ்சை, சித்தன்னவாசல், பொன்மலை, புதுக் கோட்டை, கல்லணை, வனஸ்பதி உற்பத்தி சாலை, திருச்சி தொழிற்சாலை முதலிய சரித் திர விஞ்ஞான சம்பந்தமுள்ள இடங்களுக் குச் சென்று குறிப்பெடுத்து, மனத்தில் இறுத்திப் பண்பாடு எய்தி வந்துள்ளனர்.

அடிக்கடி எமது மாணவர்கள் யாவரும் பள்ளிக்கு முன்பு அமைந்துள்ள பசிய புல் வெளியில் அணிவகுத்து நின்று கொடி வணக்கம் செலுத்தி, அவ்வப்போது வேண் டிய அறிவுரைகளைக் கேட்டு ஒரு வழிப்பட்ட மனத்தினராய்த் திரும்பினது ஈண்டு குறிப் பிடத்தக்கது.

## மாணவர் பாராளுமன்றம்

மாணவர் பாராளுமன்றம், சென்ற ஜூலைத் திங்களில் ஒவ்வொரு படிவத்தி லிருந்தும் மாணவர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட தலைவர், துணைத் தலைவர், அமைச்சர் களைக்கொண்டு தொடங்கப்பட்டது. திரு. S. இராமச்சந்திர ஐயர், திரு. L. சற்பிர சாதம் என்னும் ஆசிரியர்களின் மேற் பார்வையில், மாணவர் அறிவு வளர்ச்சியின் பொருட்டு பலமுறைகூடி அவர்கள் ஊக்கத் திற்கும் விருப்பத்திற்கும் உகந்த முறையில் பல முடிவுகளைச் செய்துள்ளது. ஈண்டு எம் மாணவர் மன்றம் செய்துள்ள சேவைகளில் இரண்டொன்று குறிப்பிடத்தக்கவை. குடி யரசு ஆண்டு நிறைவு விழாவன்று, எமது மாணவர்கள் மாஹி மைதானத்தில் அணி வகுத்து நின்று தேசியக் கொடி ஏற்றி வந் தனம் செலுத்தி, செவிக்கினிய தேசிய கீதங் கள் பாடி நின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியேயாகும். பின்னர், யாவருக்கும் தேநீர் விருந்து வழங்கி மகிழ்வுறச்செய்தனர்.

## உல்லாசப் பயணம்

ஆண்டு இறுதியில் எம் பள்ளி மாணவர் கள் மேட்டூர், சென்னை, புதுவை, சிதம் பரம் முதலிய இடங்களுக்கு உல்லாசப் பயணம் செய்து பகுத்தறிவு பெறத் திட்டம் வகுத்து வெற்றியுடன் திரும்பிவர வேண்டு வன செய்தது பாராட்டற்குரியது. எமது பள்ளி உதவித் தலைமை ஆசிரியர் சங். பெஞ்சமின் நத்தார் சுவாமிகளின் தலைமை யின்கீழ் 4 ஆசிரியர்களும், 82 மாணவர் களும் அவ்வுல்லாசப் பயணம் செய்துவந் தனர். அவர்கள் 31—3—52 இரவு திருச்சி ராப்பள்ளியைவிட்டுப் புறப்பட்டு மேட்டூ ருக்குச் சென்று, மேட்டூர் அணை, இரஸா யனத் தொழிற்சாலை முதலிய இடங்களைக் கண்டு களித்தனர். பின்பு சென்னைக்குச் சென்று அவ்விடமுள்ள துறைமுகம், பொருட்காட்சிசாலை, மிருகக் காட்சிசாலை, அடையாறு, மரினு, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சைனு பஜார், சட்டசபை முதலிய முக்கிய இடங்களைப் பார்த்து மகிழ்ந்தனர். அங்கிருந்து புதுச்சேரிக்குச் சென்று அங்குள்ள பல முக்கியமான இடங் களைப் பார்த்தபின், சிதம்பரத்திலுள்ள அண்ணுமலை பல்கலைக் கழகத்தைப் பார்த்து விட்டு திருச்சிக்குத் திரும்பினர். இந்த உல்லாசப் பயணம் மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவியாக இருந்தது என்ருல் மிகையாகாது. இப்பயணத்தை வெற்றி யுடன் முடிக்க எமக்கு உதவிய சென்னை லொயோலா கல்லூரி அதிகாரிகளுக்கும், புதுவை, திருவாளர் சூசைராஜ் அவர்களுக் கும், அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பொறுப்பாளர்களுக்கும் எமது நன்றி.

## கையெழுத்து இலக்கிய மலர்கள்

சென்ற ஆண்டில் மாணவர் கையெழுத்து இலக்கிய மலர்கள் வகுப்புதோறும் ஒன்றி ரண்டாக வெளிவந்தன. இவைகளில் சிறந் தனவாகத் தலைமையாசிரியரால் தேர்ந்தெடுக் கப்பட்ட VI அ., III அ., வகுப்பு மலர்கள் இரண்டும் பல்கலைக் கழக ஆண்டு விழா வன்று பரிசு பெற்றன. இம்மலர்களிலிருந்து கதைகள், கவிதைகள், கட்டுரைகள் முதலி யன தேர்ந்தெடுக்கப்பெற்று, பள்ளி ஆண்ட றிக்கை, கழகங்களின் அறிக்கைகளுடன் ஆண்டு மலராக அச்சிட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு மலரில் பலவகைக் காட்சிகளைக்கொண்ட மிகுதி யான புகைப்படங்களை வழங்கிய சங். பெஞ் சமின் நத்தார் சுவாமிகளுக்கு எமது நன்றி உரியதாகுக.

## உடற் பயிற்சி

உளப் பயிற்சிக்குத் துணை புரிவது உடற் பயிற்சி. எனவே, எமது உயர்நிலைப் பள்ளி யில் உடற்பயிற்சிக்கு உரிய வாய்ப்புகள் நிறைய உண்டு என்பதை எவரும் அறிவர். தற்போது மாணவர்களது உபயோகத்திற் காக 8 ஏக்கர் பரப்புள்ள விளையாட்டு நில வசதியிருக்கின்றது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்ளுகின்ருேம். சென்ற ஆண்டில் மானேஜ்மெண்டார் மிகுந்த பொறுப்புடன் ரூ. 5000 செலவில் நிலம் சேர்த்துக்கொடுத்துள்ளனர். மற்றும் இவ் வாண்டிலும் ரூ. 2000 செலவில் விளையாடு மிடங்களைச் செம்மைப்படுத்தியும் கொடுத் துள்ளனர்.

இவ்வாண்டு திருச்சி மாவட்டப் போட்டிக் குழுவினரால் நடத்தப்பெற்ற போட்டிப் பந்தய ஆட்டங்களில் எமது பள்ளி Senior Football, Basketball team-கள் வெற்றி பெற்றன. Junior Football team-ம் வெற்றி பெற்றது. மாவட்டப் பள்ளிகள் விரவுப் போட்டி ஆட்டங்களில் முதல் வகுப்புப் போட்டியில் எமது Relay Race team முதற் பரிசு பெற்றது. 100 கெஜ தூரம் ஓட்டத்தில் எமது மாணவர் A. துரைராஜுக்கு இரண்டாம் பரிசு கிட்டியது.

பள்ளியில் போட்டி ஆட்டங்களில் மாணவர்களுக்கிடையே வழக்கமான உற்சாகம் இவ்வாண்டிலும் காணப்பட்டது. எரணுகுளம் அதிமேற்றிராணியார் Attipetty ஆண்டவரவர்கள், கல்லூரி ஆண்டுவிழாப் போட்டி ஆட்டங்களுக்குத் தலைமை தாங்கிப் பரிசுகள் வழங்கி ஆசிமொழிகள் கூறியருள் புரிந்தார்கள். பரிசுகள் பேற்றோர்க்கும் நன்கொடை வழங்கினோருக்கும் எமது வாழ்த்தும் நன்றியும் உரித்தாகுக.

சென்னையில் நடந்த 15-வது அகில இந்திய ஒலிம்பிக் விழாவுக்கு 19 மாணவர்களும் 2 உடற்பயிற்சிக் கல்வியாசிரியர்களும் சங். தலைமை ஆசிரியருடன் சென்று, பல்வேறு ஆட்டங்களையும் ஓட்டப் பந்தயங்களையும் கண்டு களித்து மகிழ்வுடன் திரும்பினர். இத்தகைய விளையாட்டுக் காட்சிகளால் நமது இளம் மாணவ வீரர்களது ஊக்கமும் உற்சாகமும் பெரிதும் வளர்ச்சியுறும் என்பதில் ஐயமில்லை.

## இலக்கியச் சொற்போர்க் கழகம்

இக்கழகத்தின் தொடக்கக் கூட்டம், ஆகஸ்டு 2-ம் நாள் நடைபெற்றது. அவ்வமயம் மதுரை புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் சேசுசபை சங். குழந்தை சாமியார் தலைமை தாங்கினார். இந் நகரத்துப் புகழ்மிகு வழக்கறிஞர் திருவாளர் கைலை அனந்தர் அவர்கள் B.A., B.L., 'சொல்வன்மை' என்னும் பொருள்பற்றி அரியதோர் சொற்பொழிவாற்றினர். அவையோர் அதனை ஆர்வத்துடன் கேட்டு மகிழ்ந்தனர். பின்னர் பல்வேறு படிவப் பிரிவுகளிலும் பலவகைப்பட்ட சுவைமிக்க பொருள்பற்றிய உரையாடல்களும், பேச்சுக்களும் சொற்போர்களும் நடைபெற்றன. இக்கழகத்தின் மற்றொரு சிறப்புக் கூட்டம் அக்டோபர் 26-ம் நாள் நடைபெற்றது. நமது கல்லூரி வரலாற்று நூல் விரிவுரையாளர் திரு. தாமஸ் சீனிவாசன் அவர்கள் தலைமையில் சினிமா நடிகரும் வழக்கறிஞருமான திரு. N. சீதாராமன் அவர்கள் "திரைப் படமும் பேச்சும்" என்னும் பொருள்பற்றிச் சிறந்த சொற்பொழிவாற்றினர். ஆண்டு இறுதியில் வழக்கம்போல் கட்டுரைப் போட்டிகளும் பேச்சுப் போட்டிகளும் நடைபெற்றன. அக்கூட்டத்திற்கு இந்நகராட்சி ஆணையாளர் திருவாளர் கி. இராமலிங்கம் அவர்கள் தலைமை தாங்கினர்; போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினர்; தமிழ்ச் சொல்லாக்கச் சிறப்பைப் பற்றியும், அதை வளர்க்கவேண்டியதன் இன்றியமையாமையைப்பற்றியும் அரிய சொற்பொழிவாற்றினர்.

## கல்விப் படக்காட்சிகள்

கல்விப் படக்காட்சிகளைக் காண்பதில் எமது மாணவர் கொண்டுள்ள உற்சாகம் குறிப்பிடத்தக்கது. சென்ற ஆண்டில் 27 காட்சிகள் நடைபெற்றுள்ளன. காட்சிகள் நடைபெறும்போது சங். பாலம் சுவாமிகள் தெளிவாகவும் சுவைபடவும் விளக்கிக்கூறி மாணவர்களை மகிழ்வித்துள்ளனர். இவர்கள் இப்பணியைச் செய்துவருவது மாணவர்பால் கொண்ட இயல்பான அன்பினாலேயாகும். எனவே, இவர்களுக்குத் தனிப்பட நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். மற்றும் நல்ல படங்களை வரவழைத்துத் திரையில் தோற்றுவித்த திரு. S. ஸ்ரீனிவாசன், B.A. (Hons.) அவர்களுக்கும் யாம் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். எமது பள்ளிக்கே சொந்தமாக 16 m.m. Sound Projector ஒன்று வாங்கியிருக்கிறோம் என்பதும் இங்கு குறிக்கத்தகுந்தது.

## தேசிய மாணவர் படை (N.C.C.)

சில ஆண்டுகளாக யாம் விரும்பி எதிர் பார்த்த தேசிய மாணவர் படை இவ்வாண்டின் தொடக்கத்தில்தான் எமது பள்ளியில்

நிறுவப்பட்டது. எமது ஆசிரியர்களில் இருவர்—திரு. K. S. சந்தியாகு இக்னேஷியஸ், B.A., B.T., அவர்களும், உடற்பயிற்சி ஆசிரியர் திரு. M. மரியசூசைநாதன் அவர்களும், —சென்ற கோடை விடுமுறையில் வெல்லிங்டனில் உள்ள சென்னை ரெஜிமெண்டின் பயிற்சிப் பள்ளிக்குச் சென்று இராணுவப் பயிற்சி பெற்று வெற்றியுடன் ஜூலை மாத ஆரம்பத்தில் பள்ளிக்குத் திரும்பினர். 28–7–'51-ல் எமது பள்ளியில் தேசிய மாணவர் படை ஆரம்பிக்கப்பட்டது. 200-க்கு மேற்பட்ட மாணவர்கள் இப்படையில் சேர முன்வந்தனர். ஆனால், அரசியலார் விதிகளுக்கிணங்கி 60 பேருக்குமேல் மாணவர்களைச் சேர்க்கவியலாமற் போனதுபற்றி மிகவும் வருந்துகின்றோம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு வாரம் இருமுறை இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது. எமது 'காடட்டு' களின் பயிற்சியையும் அணிவகுப்பையும் பார்வையிட்டுப் பரிசோதனை செய்த சென்னை Liaison Officer Captain Thakur Nagendra Singh அவர்களும், திருச்சி மாவட்டக் கல்வியதிகாரியவர்களும் 'காடட்டு' களிடையே காணப்படும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் மிகவும் பாராட்டியுள்ளனர். ஜனவரித் திங்கள் 2‌-ம் நாள் எமது கல்லூரியில் நடந்த குடியரசு விழாக் கொண்டாட்டத்தில் எமது தேசியப்படை ஆசிரியரும் மாணவர்களும் அணிவகுத்துச் சென்று தேசியக் கொடிக்கு வணக்கம் செலுத்திய காட்சி யாவருடைய கண்களையும் கவர்ந்தது.

புதிதாகத் தோன்றியுள்ள இவ்வியக்கம் எமது மாணவர்களிடையே ஒழுக்கம், நேர்மை, கட்டுப்பாடு, நாட்டுப்பற்று போன்ற உயரிய பண்புகளை வளர்க்க ஏதுவாக உள்ளது என்பதில் ஐயமில்லை.

**பாரத சாரணர்கள்**

சென்ற ஆண்டுகளைப்போலவே இந்த ஆண்டிலும் எமது பள்ளியில் மாணவர்களுக்குச் சாரணப் பயிற்சி அளிக்கப்பட்டது. 64 சாரணர்கள் பயிற்சி பெற்றனர். எமது பள்ளியில் நடந்த கல்லூரி விழா, பந்தய விளையாட்டு, சாரண விழா முதலியவற்றில் சாரணர் பங்கெடுத்துக்கொண்டனர். திருச்சி சாரணக் கமிஷனரால் வகுக்கப்பட்ட திட்டப்படி ஏகாதசி விழாவின் போது எமது சாரணர்கள் போக்குவரத்து மிகுந்த இடங்களில் நின்று பொதுமக்களுக்குத் தொண்டாற்றினர். குறிப்பாக எமது பள்ளியில் நடந்த குடியரசு விழாவில் தேசிய மாணவப்படை வீரர்களுடன் சாரணர் அணிவகுத்துச் சென்று கொடி வணக்கம் செய்தது பலராலும் புகழ்ந்துரைக்கப்பட்டது. மார்ச்சு மாத ஆரம்பத்தில் லால்குடிக்கு அருகிலுள்ள மணக்காலில் எமது சாரணர் தங்களது ஆண்டு இறுதிப் பாடி வாழ்க்கையைத் திறம்பட நடத்திக் களிப்புற்றனர்.

**குருளை மந்தை**

கடந்த ஆண்டுகளைப்போலவே, இவ்வாண்டிலும் எம் குருளை மந்தை, ஆசிரியர் திரு. R. பிச்சைபிள்ளை கண்காணிப்பில் வெகு சிறப்புடன் நடைபெற்று வந்திருக்கிறது. 24 குருளையர்கள் வாராவாரம் நடைபெறும் கூட்டங்களுக்குத் தவறாது வந்து பயிற்சி பெற்றனர். ஆடலிலும் பாடலிலும் பல் வேறு விளையாட்டுக்களிலும் எம் குருளையர் பயிற்சி பெறுவதுடன் பிற்காலத்தில் சிறந்த குடிமக்களாக விளங்குவதற்கு அடிப்படையான ஒழுக்கப் பயிற்சியையும் பெற்றுள்ளனர்.

**நாடகக் குழு**

எமது பாடசாலையில் நாடகக் குழு ஒன்று நடைபெற்று வருகிறது. அதன் தலைவர் இப்பாடசாலையின் தலைமை ஆசிரியரே யாவர். ஆசிரியர் திரு. பிச்சைபிள்ளை துணைத் தலைவராகவும், ஆசிரியர் திரு. மரிய ஜோசப் அன்னாருக்குத் துணையாகவுமிருந்து அரிய பெரிய சேவை புரிந்து வருகின்றனர். சென்ற ஆண்டில் 'பள்ளிக்கூட நாள்' கொண்டாடியபோது, இக்கழகத்தார் "புது ஜமீன்தார்" என்ற ஒரு நாடகத்தைத் திறம்பட நடித்துக்காட்டினர். ஆண்டு இறுதியில் நடைபெற்ற பல்கலைக் கழக ஆண்டு விழா வன்று இக் கழகத்தின் ஆதரவில் 'கதம்பக் காலட்சேபம்' ஒன்று சிறப்பாக நடத்தப்பட்டது. மேடையின்மேல் ஏறிப் பேசவும்


நடிக்கவும் பாடவும் பழகுவதோடு இசைக் கருவிகள் சிலவற்றைக் கையாளவும் எமது நாடகக் குழுவினர் பயிற்சிபெற்று வருவது மிகவும் பாராட்டத்தக்கதேயாகும்.

**முடிவுரை**

இந்த ஆண்டு அறிக்கையை முடிப்பதற்கு முன்னர், இவ்வறிக்கையில் குறிக்கப்பட்டுள்ள பல துறைகளிலும் யாவரும் பாராட்டத்தக்கவகையில் இக்கல்வி நிலையம் விளங்குமாறு, தோன்ருத் துணையாய் நின்று எம்மை வழிபடுத்திவரும் எல்லாம் வல்ல இறைவனை வணங்கி, முதற்கண் அவற்கு நன்றிசெலுத்துவோமாக. மேலும் இச் சிறப்புகளுக்கெல்லாம் துணைக் காரணராய் விளங்கிய தலைமையாசிரியருக்கும் அவருக்கு ஊறுதுணையாயிருந்து அவர் குறிப்பின்வழி யொழுகி, அவ்வப்போது மாறுதலுற்று வரும் கல்விச் சீர்த்திருத்தத் திட்டங்களுக் கேற்ப புதுமுறைகளைப் பின்பற்றி நமது பள்ளியின் பெருமைக்கேற்ற வகையில் பணிபுரிந்துவரும் ஆசிரியர்களுக்கும் இச் சமயம் நன்றிகூறுதல் இன்றியமையாத தன்ருே! மற்றும் இவ்வாண்டு பெற்ற பெருவாரியான வெற்றிக்குக் காரணரான மாணவர்களுக்கும் எமது பாராட்டுதல் உரியதாகும்.

அடுத்தபடியாக, தமது பல அலுவல் களுக்கிடையே இன்று எமது பரிசளிப்பு விழாவிற்குத் தலைமைதாங்கி இவண் வீற்றிருக்கும் திருச்சி மாவட்ட நீதிமன்றத்தின் உதவி நீதிபதியவர்களுக்குச் சிறப்பாக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். ஐயா, தாங்கள் குறைந்த கால அறிவிப்பில் நிறைந்த மனவுவப்புடன் ஈண்டு தலைமை ஏற்க இசைந்துள்ளீர்கள். இது, கல்வித்துறையிலும் மாணவர் அறிவு வளர்ச்சியிலும் தங்களுக்குள்ள பேரார்வத்தைக் காட்டுவதாகுமன்ருே! அன்றியும், தாங்கள் எமது கல்லூரியின் பழைய மாணவர் என்பதை யறிய, பெருமிதமடைகின்ருேம். மேலும், மாணவர் பரிசளிப்பு விழாவில் நீதிபதியாகிய தங்களைப்போன்ருர் அறிவுரைகள் மாணவர் களுக்குப் பெரிதும் பயனளிக்கும் என்று நம்புகின்ருேம். ஆக, தங்கள் அன்புடைமைக்கு யாங்கள் மீண்டும் ஒருமுறை நன்றி செலுத்துவதோடு, தங்கள் அலுவல்களை நலமுறச் செய்வதற்குரிய உடல் நலனையும் மனவலிமையையும் வேண்டும் ஆற்றலையும் நீண்ட வாழ்வையும் அளித்தருளுமாறு இறைவன் திருவடிகளை இறைஞ்சுகின் ருேம்.

இறுதியாக, எமது விழாவிற்கு எழுந் தருளியுள்ள பெரியோர்க்கும் பெற்ருேர்க் கும் மற்றும் பரிசளிப்பதற்கு உதவிபுரிந்த நண்பர்களுக்கும் நன்கொடையாளர்களுக் கும் எமது மனமார்ந்த நன்றி உரியதாகுக. அன்பு, மகிழ்ச்சி, வணக்கம்.



கார்டு—(ரயிலில் உள்ளவர்களைப் பார்த்து) கதவடை! கதவடை!!
பையன்—அப்பா! எனக்கொரு கதவடை வாங்கித்தாப்பா.

—த. இருதயராஜ், 4 இ.

# உலகின் விமோசனம்

ஆசீர் அடிகள்

நிலைகுலைந்துநிற்கும் நவீன உலகிற்கு விமோசனம் இல்லையா? இரண்டு உலக யுத்தங்களால் புண்பட்டு, வேதனையால் துடிக்கும் இவ்வுலகிற்கு விமோசனம் இல்லையா? யுத்த அரக்கனுக்கு, மூன்றாவது மகா யுத்தத்திற்கு, பயந்து நடுநடுங்கும் உலகத்திற்கு விமோசனம் இல்லையா? பகை, கொலை, பொய், புரட்டு, ஆகிய இருளின் சக்திகளெல்லாம் உருக்கொண்டுள்ள கம்யூனிசத்திலிருந்து உலகம் தப்பித்துக்கொள்ள விமோசனம் இல்லையா?

பாட்டாளி மக்களின் குறையை, ஏழை மக்களின் வறுமையைப் போக்கிவிடுவதாகச் சொல்லிக்கொண்டு கம்யூனிசம் 1917-ல் உதித்தது. கடவுளை நாடுகடத்தியது. அவர் பக்தர்களைப் பரகதிக்கனுப்பினது. மனிதனையே கடவுளாக்குவதாகப் பிதற்றினது. பகைமை என்னும் ஆயுதம் பூண்டு, வஞ்சகம், பொய், சூது, வாது பொய்ப்பிரச்சாரம் முதலியவற்றால் ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்போல் ஒவ்வொரு தேசத்திலும் காலூன்றிற்று. இன்று உலகத்தையே பயமுறுத்தி ஆட்டிவைக்கிறது. 35 வருடம் ஆகியும் கம்யூனிசம் வாக்களித்திருந்த பூலோக சுவர்க்கம் எங்கே? உரிமையையிழந்த சுதந்தரத்தை இழந்த லட்சக்கணக்கான பாட்டாளி மக்கள், பொது மக்கள் எலும்புகள் சிதறிக்கிடக்கும் சைபீரியாவே அப்பூலோக சுவர்க்கம். பாட்டாளி மக்களால் நடத்தப்படும் அரசாங்கம் எங்கே? ரகசியப்போலீஸ் படையைக்கொண்டு பாட்டாளி மக்களைப் பயமுறுத்தி ஆண்டுவரும் 'ஸ்டாலின் கோஷ்டி'யின் அரசாங்கமா, பாட்டாளிகளின் அரசாங்கம்? மனிதன் கடவுளாவது எங்கே? சைபீரியாவிலும் மற்றுமுள்ள ரஷ்ய நகரங்களிலும் உள்ள அடிமை வேலை ஸ்தலங்களைப் பார்த்தால் பாட்டாளி மக்களுடைய மனுஷத் தன்மையே பார்க்கமுடியாது. அப்படி இருக்கையில் தெய்வீகத்திற்கு எங்கே போவது? இன்று உலகமுழுவதும் இரு சேனைகளாகப் பிரிந்துநிற்கின்றது. இதை நிறுத்துவதற்கும், அதிலிருந்து சமாதானம் பெற்று சுபிட்சம் அடைவதற்கும் வழியே இல்லையா?




கடவுளின் போதனைகளையும் கட்டளைகளையும் ஏன், அவரையும்கூட மறந்து அவரை நிராகரித்த இவ்வுலகிற்கு விமோசனம் இல்லை. உலகம் அதனுடைய பலனை அனுபவித்துக்கொண்டிருக்கிறது. ஆயினும் புத்தி இன்னும் வந்தபாடில்லை. ஒழுக்கத்தையிழந்துவிட்ட உலகின் ஊழல்கள் புழுத்து நாற்றம் எடுத்துக்கொண்டிருக்கின்றன. மண்டைக்கர்வத்தால் கடவுளை எதிர்த்த உலகத்தில் பலம் படைத்தவன் வைத்தது சட்டமாயிருக்கிறது. கடவுளை மறுதலித்த உலகம் எதையும் மறுதலித்து எதற்கும் துரோகம் செய்யத் தயாராயிருக்கிறது. கடவுளை எதிர்ப்பவனுக்கு மற்ற மனிதர்கள் எம்மாத்திரம்? இவ்வுலகத்தில் உள்ளவர்கள் சொத்து, சுதந்திரம், சுகம் முதலியவற்றை யிழந்துவிடாமல், நிம்மதியாய் வாழ வழி ஒன்றே உள்ளது. அதுவே கிறிஸ்துபிரான் போதித்த அன்பு வழியாகும்.

அன்பிலா வாழ்க்கை நரகமாகும். அன்பினுல் ஆகாதது ஒன்றுமில்லை. தற்சமயம் கம்யூனிசக் கொள்கைகளால் பரப்பப்படும் பகையாகிய தீயை அணைக்கவல்லது அன்பு ஒன்றே. பகையால், ஆணவத்தால், காய்மகாரத்தால் கஷ்டப்படும் உலகிற்கு விமோசனம் அன்பு ஒன்றே. உலகை ஒன்றித்துக் கரை சேர்க்கக்கூடியது அன்பே. அன்பு பகையை அழிக்கும், ஒழிக்கும். 'உங்கள் பகைவர்களை நேசியுங்கள்' என்ற கிறிஸ்துவின் போதனையைக் கேட்காததினுல் அல்லவா பற்பல தேயங்களில் குழப்பம்? உலகம் உய்யும் வழியைக் கிறிஸ்து தம் மலைப் பிரசங்கத்தில் வெளிப்படுத்தி இருக்கிருர். அதை மிகவும் போற்றிப் புகழ்ந்த காந்தி அடிகள் அதன் சாராம்சத்தை அகிம்சை கொள்கையாய் உலகிற்கு வழங்கினர். அகிம்சாமூர்த்தி, கிறிஸ்து, காந்தியடிகளுக்கு முன்னுலேயே தன் அகிம்சா கொள்கையைச் சிலுவைச் சிம்மாசனத்திலிருந்து பிரகடனம் செய்தார். "பிதாவே, இவர்களை மன்னியும், ஏனெனில் தாம் செய்வதின்னதென்று அறியாமற்செய்கிருர்கள்." கிறிஸ்து அகிம்சா கொள்கையின் சிகரத்தையடைந்தார் என்பதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? "தீமை செய்தவர்களுக்கு நன்மை செய்யுங்கள்" என்ருர். அதைச் செயலிற்காட்டத் தன் உயிரையே தியாகம் செய்தார். மனமுவந்து செய்தார்.

ஆதலின் உலகம் விமோசனம் பெற வேண்டுமாயின் அன்பை அடிப்படையாகக் கொண்ட மலைப்பிரசங்கத்திலிருந்து எடுக்கப்பட்ட அகிம்சையைப் பின்பற்றவேண்டும். நன்மையைச் செய்யவும், தீமையை எதிர்க்கவும் ஒன்றித்து நிற்கவேண்டும். கிறிஸ்துவைப் பின்பற்ருமல் உண்மையான அகிம்சையைக் கடைப்பிடிக்க முடியாது. ஆதலால், உலகமே! உன் விமோசனம் கிறிஸ்துவினிடம் உளது! அவரடி பணிவாய்!

# தேவ உதவி

A. S. ஜெயராஜ், 3 அ.

ஒரு ஊரில் ஜோசப் என்ற ஒரு பையன் வசித்துவந்தான். அவன் மிகவும் நல்லவன். கடவுள் பக்தி நிறைந்தவன்.

ஒரு நாள் ஜோசப் ஒரு வேலையின் பொருட்டு அடுத்த ஊருக்குச்சென்ருன். வரும் வழியில் பலத்த மழை, இடி, மின்னல் காற்றுடன் பெய்தது. ஜோசப் மழைக்காக ஒரு மரத்தினடியில் ஒதுங்கினுன். சிறிது நேரத்திற்கெல்லாம், சிறிது தூரத்திலுள்ள ஒரு குடிசையில் இருந்த ஒரு முதியவள் அவனைக் கூப்பிட்டாள். ஜோசப் அவளிடம் சென்று என்ன வேண்டுமெனக் கேட்டான். அதற்கு அவள் "நான் உன்னைக் கூப்பிடவில்லை. அதோ! என் மகன் ஆடு மேய்த்துக்கொண்டிருக்கிருன். அவனையல்லவா நான் அழைத்தேன்" என்ருள். அப்போது ஜோசப் முன்பு நின்றுகொண்டிருந்த மரத்தின்மேல் ஒரு இடி விழுந்து மரம் கருகியது.

ஆ! என்ன ஆச்சரியம்! கடவுள் ஜோசப்பைக் காப்பாற்ற எண்ணி மறைமுகமாக அந்த முதியவள் வழியாகவே அவனுக்கு உதவிசெய்திருக்கிருர். ஜோசப் கடவுளை வாழ்த்தினுன். அந்த முதியவளும் தனக்குத் தெரியாமலேயே கடவுளால் ஜோசப்புக்கு உதவி செய்யப்பட்டதை எண்ணிக் கடவுளை வாழ்த்தினுள்.

# புனித சவேரியார்

த. ஜேசு சௌந்தரராஜ், 5 ஆ.

அர்ச். பிரான்சிஸ் சவேரியார் 1506-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ந்தேதி, ஸ்பெயின் தேசத்தில் நாவார் நாட்டில் சேவியர் மாளிகையில் பிறந்தார். அவருடைய முன்னோர் நாட்டிற்கு ஆற்றியுள்ள அரிய சேவையின்பொருட்டு சேவியர் மாளிகை அவர்களுக்கு அரசரால் வழங்கப் பட்டது. அம்மாளிகையின் பெயரே அவர்களுக்குக் குடும்பப் பெயராக அமைந்தது.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைச் சிறந்த போர்வீரர்களாகப் பழக்கினார்கள். ஆனால் சவேரியார் இளமையிலேயே நன்றாகக் கற்றுப் பெரிய கலைஞரானார். இவர் பாரிஸில் படித்துக்கொண்டிருந்தபொழுது இவருடைய தகப்பனார் இவரை பள்ளியிலிருந்து நிறுத்த எண்ணங்கொண்டார். ஆனால் மதலேன் என்னும் சகோதரி அதைத் தடுத்தாள்.

1528-ம் ஆண்டு இஞ்ஞாசியார் என்னும் உயர்குல மகான் உலக இன்பசுகங்களை வெறுத்து சேசுசபையை ஸ்தாபிக்க எண்ணி அதற்குத் தகுந்த வீரர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு பாரிஸ் வந்தார். பாரிஸில் சவேரியாரிடமும் அவருடைய நண்பர் பீட்டர் பேபெர் என்பவரிடமும் தம் எண்ணத்தை வெளியிட்டார். பீட்டருக்கு உலகப்பற்று அதிகமில்லாதிருந்ததால் உடன் இணங்கினார். ஆனால் சவேரியார் சிறிது இறுமாப்புடன் எதிர்த்தார். இஞ்ஞாசியாருடைய அயரா உழைப்பாலும், அரிய உதவிகளாலும் சவேரியார் உண்மையை நன்குணர்ந்து அவரைப் பின்பற்றினார். 1534-ம் ஆண்டு ஆகஸ்டுமாதம் 15-ம் நாள் இவ்விருவரும் இன்னும் ஐந்துபேரும் மோன்மார்த்ர் என்ற குன்றிலிருந்த கோவிலில் தங்களின் முழுப்பணியையும் ஒப்புக்கொடுத்தனர்.

1537-ம் ஆண்டு ஜனவரிமாதம் 8-ம் நாள் எல்லோரும் ரோமாபுரிக்குச்சென்று கீழ்நாடுகளுக்குச்செல்ல பாப்பானவரின் உத்தரவையும் ஆசீரையும் பெற்றனர். ஆனால் யுத்தத்தின் காரணமாக பிரயாணம் தடைபட்டது. அவ்வருடம் ஜூன்மாதம் 24-ந் தேதி சவேரியார் குருப்பட்டம் பெற்றார். பிறகு பதுவா, விசென்யா, பொலோகு முதலிய நகரங்களுக்குச் சென்று சத்தியவேதத்தைப் பிரசங்கித்தார்.

1538-ம் ஆண்டு இஞ்ஞாசியார் பாப்பானவருடைய அநுமதியின்பேரில் ரோமாபுரியில் சேசுசபையை ஸ்தாபித்தார். 1498-ம் வருடம் வாஸ்கோடிகாமா இந்தியாவிற்கு வழி கண்டுபிடித்ததிலிருந்து போர்த்துக்கல் தேசத்தார் இந்தியாவோடும், மற்ற கிழக்



கிந்தியத் தீவுகளோடும் வியாபாரம் செய்யத் தொடங்கினர். போர்த்துக்கல் அரசராகிய 3-ம் ஜான் அந்நாடுகளில் கிறிஸ்துமதத்தைப் பரப்ப எண்ணி இஞ்ஞாசியாருக்குக் கடிதமெழுதி இரண்டு குருக்களை வரவழைத்தார். அவர்களிலொருவர் நோய்வாய்ப்பட்டதால் சவேரியாரை அனுப்பினார். சவேரியார் சந்தோஷமாகப் பாப்பானவருடைய ஆசீரைப்பெற்று 1540-ம் ஆண்டு மார்ச்மாதம் 15-ம் தேதி ரோமாபுரியிலிருந்து புறப்பட்டு

ஜூன் மாதக் கடைசியில் லிஸ்பன் நகரம் வந்துசேர்ந்தார். அவர்கள் இந்தியாவிற்குப் பிரயாணமாகும்வரை அங்குள்ள மருத்துவ விடுதிகளில் நோயாளிகளுக்குவேண்டிய பல உதவிகளைச் செய்தார்கள்.

1541-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 7-ம் தேதி ஸெயிண்ட் ஜேம்ஸ் என்ற கப்பலில் சவேரியாரும் மற்றும் பலரும் பிரயாணம் செய்தனர். ஆகஸ்டுமாதக் கடைசியில் மொஸம்பிக் நாட்டை அடைந்தனர். கப்பலில் இருந்தவர்களில் பலர் நோயுற்றிருந்தமையால் பிரயாணம் தடைபட்டது. சவேரியார் அவர்களுக்கு இரவும் பகலும் உதவி செய்தார். அதனுல் அவரும் காயச்சலில் படுத்தார். பிறகு ஆறுமாதங்கள் கழித்து கப்பல் புறப்பட்டு 1542-ம் ஆண்டு மே மாதம் 6-ம் தேதி கோவா கடற்கரையை வந்தடைந்தது. சவேரியார் பாப்பானவருடைய நிருபத்தை அங்குள்ள மேற்றிராணியாராகிய ஜாண் டி அல்புகர்க் என்பவரிடம் காட்டி ஆசீர்பெற்றுத் தமது திருப்பணியை ஆரம்பித்தார். தினமும் காலையில் மருத்துவ விடுதியில் இருப்பவர்களுக்கும் சிறைக்கூடத்தில் இருப்பவர்களுக்கும் நல்ல புத்திமதிகளைக் கூறுவார். மாலையில் தெருத்தெருவாய்ச் சென்று சிறுவர்களுக்கும் பெரியோர்களுக்கும் புத்திமதி கூறுவார். எல்லோரும் அவருடைய புத்திமதிகளைக் கேட்டு சன்மார்க்கத்தைத் தழுவினர். செப்டம்பர் மாத மத்தியில் புறப்பட்டு அக்டோபர் மாதக்கடைசியில் கன்னியாகுமரி வந்தடைந்தார். அங்குள்ள இந்துக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். அவரது ஜெபமாலையையாவது, பாடுபட்ட சுரூபத்தையாவது தொட்ட நோயாளிகள் குணமாவதைக்கண்டு சிலர் மனந்திரும்பினர். போர்த்துக்கீஷிய மொழியையும், தமிழையும் நன்குணர்ந்த சிலரின் உதவியால் வேத சத்தியங்களைத் தமிழில் எழுதி ஒவ்வொரு ஊரில் கொடுத்துக்கொண்டே சென்றுர். 1543-ம் வருடம் சில வாலிபர்களைக் குருத்துவ அறநிலைக்குப் பயிற்றுவிப்பதற்கென கோவைக்கு அழைத்துச்சென்றுர். இந்திய மாணவர்களைக் குருத்துவ அறநிலைக்குப் பயிற்றுவிக்க அமைக்கப்பட்டிருந்த புனித சின்னப்பர் குருமடத்தை விசாலமாக்கினுர்.

1544-ம் வருடம் சவேரியார் திருவிதாங்கூருக்குச் சென்றுர். அங்கு ஒரு மாதம் தங்கியிருந்து அனேகம்பேரை மனந்திருப்பினுர். முத்துக்குளித் துறையிலிருந்த கிறிஸ்தவர்கள் வடுவர்களால் துன்பப்படுவதைக்கேட்டு அங்கு சென்று சிலுவையின் உதவிகொண்டு அவர்களை விரட்டினுர். கொல்லம் என்ற ஊரில் ஒரு இறந்தவனை உயிர்ப்பித்து அங்குள்ளவர்களை மனந்திருப்பினுர். மன்னுர் என்னும் தீவிலுள்ளவர்கள் சவேரியாரைத் தங்களிடம் அழைத்தனர். அதனுல் அவர் தனக்குப்பதிலாக இன்னொரு குருவானவரை அனுப்பினுர். அக்குருவானவர் அத்தீவில் அனேகம்பேரை மனந்திருப்பினுர். அதனுல் அத்தீவு அரசன் எல்லோரையும் கொன்றுபோட உத்தரவிடவே ஆகாயத்தில் பொன்மயமான சிலுவை ஒன்று தோன்றியது. அதைக் கண்டு முன்னிலும் பலர் மனந்திரும்பினர்.

சவேரியார், அர்ச். தோமையாரின் பாடுபட்ட இடத்தை தரிசிக்க எண்ணி 1545-ம் வருடம் மார்ச் மாதம் 29-ம் தேதி புறப்பட்டு ஏப்ரல் மாத இறுதியில் மைலாப்பூர் சென்று அங்கு பலரை மனந்திருப்பி, மலாக்கா சென்று அங்கும் பலரை மனந்திருப்பி 1546-ம் வருடம் அம்பாய்னு, சேரம் முதலிய தீவுகளுக்கு பிரயாணமானுர். சேரம் தீவுக்கு போகும்போது அவருடைய சிலுவை கடலில் விழுந்துவிட்டது. மறுநாள் அவர் கரையோரம் செல்ல, ஓர் நண்டு அவருடைய சிலுவையைத் தன் கொடுக்குகளில் இடுக்கிக்கொண்டு வந்தது. சவேரியார் அதை எடுத்து, ஆண்டவருக்கு நன்றி செலுத்தினுர்.

மோர் என்னும் தீவில் அநேகம்பேரை மனந்திருப்பியபின், மலாக்கா சென்று, அங்கு தன்னிடம் அடைக்கலம் புகுந்த ஓர் ஜப்பானிய வாலிபன் ஆன்ஜருடன் இந்தியா வந்தடைந்தார். 1549-ம் ஆண்டு அந்த ஜப்பானிய வாலிபனுடன் ஜப்பான் சேர்ந்தார். ஜப்பானியர்களுக்கு வேறெந்த பாஷையும் தெரியாததால் ஜப்பானிய மொழியைக் கற்று காகோஸிமா, அமங்குஷி, மியாகோ, பிரண்டோ முதலிய நகரங்களில் அனேகரை மனந்திருப்பினுர். பொங்கோ


அரச சபையில் புத்தமதத்தினரை வெட்டும்படி செய்தார்.

1551-ம் ஆண்டு ஜப்பானிலிருந்து புறப்பட்டு இந்தியா வந்தடைந்தார். அங்கு தாம் செய்யவேண்டிய அலுவல்களை முடித்துவிட்டு சீனாவுக்குப் பயணமானார். வழியில் மலாக்காவில் இறங்கி அங்கு பெருவாரிக் காய்ச்சலால் நலிந்தவர்களுக்கு அரிய உதவி செய்து பலரைக் காப்பாற்றினார். சில நாட்களில் அவருடைய வேண்டுதலின் பயனாக கொள்ளைநோய் அகன்றது. பிறகு ஸான்ஸியன் தீவிற்கு பிரயாணமானார். வழியில் சரியாக காற்று வீசாததால் மரக்கலம் நடுவழியிலேயே நின்றுவிட்டது. அப்போது மக்கள் குடிதண்ணீர் கிடைக்காமல் துன்புறவே கடல் தண்ணீரை குடிநீராக மாற்றினார். ஆகஸ்டு மாத கடைசியில் ஸான்ஸியன் தீவையடைந்தார். வெளிநாட்டார் சீனாவுக்குள் நுழையக்கூடாதென்ற சட்டமிருந்ததால் அவர் சீனாவுக்குப் போக இயலவில்லை. நவம்பர் மாதம் 20-ந் தேதி காய்ச்சலாகப் படுத்தார். சில நாட்கள் அதிக வேதனையடைந்து 1552-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ம் தேதி வெள்ளிக்கிழமை தமது 46-வது வயதில் மண்ணுலகை நீத்து விண்ணுலகையடைந்தார்.

அவருடைய திருச்சரீரத்தை மலாக்காவிற்குக் கொண்டுபோக எண்ணி, அதிக நாள் பிரயாணம் செய்யவேண்டியிருந்ததால் ஓர் சுண்ணாம்பு நிறைந்த பெட்டியில்வைத்து ஒரு சிறு குன்றின்மீது அடக்கம் செய்தனர். சாந்தாக்ரூஸ் என்ற கப்பல் மலாக்காவிற்கு செல்லவிருந்தது. அதில் சவேரியாருடைய சரீரம் அழிந்திருந்தாலும் எலும்புகளையாவது எடுத்துச் செல்லலாம் என்று சிலர் பெட்டியைத் திறந்து பார்க்க அயர்ந்து நித்திரை செய்பவரைப்போல முகம் ஜோதி பிரகாசத்துடன் விளங்கிற்று. அந்த உண்மையை கப்பல் தலைவனிடம் தெரியப்படுத்த சிறிது தசை எடுக்க ஒருவன் கால்மாட்டில் கீறினான். அதிலிருந்து இரத்தம் கசிந்தது. இவ்வற்புதத்தைக் கண்டு எல்லோரும் முழந்தாளிலிருந்து தங்களின் மரியாதைக்குறைவுக்கு மன்னிப்புக் கோரினர். பிறகு அவ்வுடல் மலாக்காவிற்கு கொண்டுபோகப்பட்டது. 1553-ம் வருடம் மார்ச் மாதம் 22-ந் தேதி சரீரம் மலாக்கா வீதிகளில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. பிறகு ஓர் கோயிலில் தக்க மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது. ஆகஸ்டு மாதம் கல்லறையை திறக்கவே திருமேனி முன்போல் அழியாதிருப்பதைக்கண்டு கோவா நகருக்கு எடுத்துச்செல்ல ஒழுங்குபடுத்தினர். 1544-ம் வருடம் மார்ச் மாதம் 15-ந்தேதி திருவுடல் கோவா நகரின் பல வீதிகளில் பவனி வந்தது. ஊர்வலத்தின்போது பல புதுமைகள் நடந்தன. சவேரியாரின் திருச்சரீரம் ஆலயத்தின் பீடத்திற்கு சமீபத்தில் வைக்கப்பட்டது. இன்றளவும் அதை வேறிடத்துக்கு மாற்றவில்லை. 3-வது ஜான் என்ற போர்த்துக்கல் அரசர் சவேரியாரின் அற்புதச் செயல்களை தொகுத்து வெளியிட்டார். 1662-ம் ஆண்டு 15-ம் கிரகோரியார் அவருக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் கொடுத்தார்.

1686-ம் ஆண்டுவரை திருச்சரீரம் ஆண்டுதோறும் பொதுஜனங்களின் தரிசனைக்காக திறந்து வைக்கப்பட்டது. பிறகு 1782, 1859, 1878, 1890, 1900, 1910, 1922, 1931 இவ்வாண்டுகளில் திறந்துவைக்கப்பட்டது. திரளான ஜனங்கள் அவருடைய பாதத்தை முத்தி செய்து திரும்பினர்.

இவ்வருடம் (1952) டிசம்பர் மாதம் மறுபடியும் அவருடைய திருச்சரீரம் திறந்து வைக்கப்பட்டது. 400 ஆண்டுகள் அழியாமலும் ஒளி குன்றாமலும் விளங்கும் அவருடைய திரு உடலை பல ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு முத்திசெய்து திரும்பினர். இவரைப்போல் பல சவேரியார்கள் இந்தியாவில் தோன்றுவார்களாக!



# நினைவுச் சின்னம்

**பழனூர் செல்வன், 5 அ.**

[முடிமன்னன் ஷாஜஹான் தன் காதல் கிழத்தி மும்தாஜ் பேகத்திற்கு கலைக்கோவில் கட்டினன். பேனு ராணி பிரேமா தன் அக்கா, செந்தாமரைக்கு நூல்வடிவம் சமைத்தாள். இரண்டும் ஈடு இணையில்லா நினைவுச் சின்னங்களாகத் திகழ்ந்தன.]

1

**அன்று** மணிபுரத் தமிழர் கழகத்தின் ஏழாவது ஆண்டுவிழா. மாலை நெருங்க நெருங்க விழா மண்டபத்தில் மக்கள் திரள் குவிந்துகொண்டேயிருந்தது. தமிழ்ச்சங்கத்தால் நடத்தப்படும் 'மனச் சான்று' என்ற நாடகம்பற்றியே எங்கும் பேச்சாகயிருந்தது. பேச்சுத் திறமையிலும் எழுத்தோவியத்திலும் சிறந்து பரிமளித்த சீராளனையே "**தமிழர்களுக்கு எதிர் காலமுண்டு**" என்று பேச அழைத்திருந்தனர். ஏற்கனவே, பலமுறை ஒத்திகை செய்து தயார்செய்து வைத்திருந்த கருத்துக்களை கச்சிதமாக சொல்லிவிட்டு உட்கார்ந்தான் சீராளன். தலைமை வகித்த முதலியார், அரைமணி நேரம் பேசினர். அவரது குரல் கணீரென்று ஒலித்து விழா மண்டபத்தையே எதிரொலிக்கச் செய்தது. பாரதியாரின் கவிதைவரிகள் இடை இடையே வந்து இன்பமூட்டின. பேச்சுப்போட்டிகளும், எழுத்துப் போட்டிகளும் அத்தோடு முடிந்தன. நாடகம் ஒன்றுதான் பாக்கி. அது துவக்குமுன்னே கையெழுத்துப் படையெடுப்புகளையெல்லாம் ஒருவிதமாக முடித்துவிட்டு வெளிக்கிளம்பினர்கள், சீராளனும் முதலியாரும்.

"என் மகளுக்கு கதையென்ருல் உயிர். அதை அவள் படித்துவிட்டு கொடுக்கும் அரங்கேற்றமே, புது மெருகாயிருக்கும்" என்ருர் முதலியார்.

"அப்படியா! அவர்களையும் இங்கு அழைத்துவந்திருக்கலாமே," என்ருன் சீராளன்.

"அழைத்துவந்திருக்கலாம். பெண்ணுக்கு பெருமைதந்த தமிழர், கல்வியை கலைமகள் என்றும், செல்வத்தைத் திருமகள் என்றும், கற்பனைசெய்த தமிழர், ஆக்கவழிப்பட்ட கலைகளையெல்லாம் பெண்மை வடிவில் கண்டு பெருமையடைந்த தமிழர், இன்று பெண்மைச் சமுதாயத்திற்கே உரிமை தராமல் உழன்றுகொண்டிருக்கும்போது... அஃதிருக்கட்டும் இப்போது உங்களுக்கு வேறு எங்கும் வேலையில்லையே, சாயங்கால நேரந்தானே? என்னுடன் வீட்டிற்கு வந்து திரும்புவதற்கு அவகாசமிருக்குமா?" என்ருர் முதலியார்.

"இன்னொருமுறை வருகிறேன்."

"வேலை ஏதும் இல்லாவிட்டால் இப்போது வாருங்கள் சீக்கிரம் திரும்பிவிடலாம்."

பெரியோரது பேணலுக்கு மறுத்துக்கூற இயலாத நிலையிலிருந்த சீராளன், வேண்டுகோளுக்கிணங்கி இல்லம் சென்ருன்.

2

கார், முதலியார் வீட்டு வாயிலை அடைந்ததும், முதலியாரும், சீராளனும் தோட்டத்தை நோக்கி நடந்தனர். தோட்டத்தின் நடுவேயிருந்த 'சிதம்பரனர்' சிலைக்குப் பூச்சூட்டிக்கொண்டிருந்தாள் ஒரு பெண்.

"இவள்தான் என் மகள் செந்தாமரை. நான் உங்களிடம் சொன்னேனல்லவா, அந்தக் கதைப்பைத்தியம். பாராட்டி கூறுவதிலும் பழித்துக்கூறுவதிலும் கெட்டிக்காரி" என்ருர் முதலியார். அவள் மௌனமாகத் திரும்பி கரம்கூப்பிவிட்டுத் தன் வேலையை தொடர்ந்தாள்.

"இதோ ஒரு நிமிடத்தில் வந்துவிடுகிறேன்" என்று கூறிவிட்டு உள்ளே நுழைந்தார் முதலியார். சிறிது நேரம் நிசப்தம் நிலவியிருந்தது. தனிமையான

அமைதி ஓர் பயங்கர சூழ்நிலையை உண்டாக்கியது. அந்த அமைதியை கலைக்க வேண்டும் என்றிருந்ததோ என்னவோ செந்தாமரை பேசத் தொடங்கினாள்.

"உங்களது கதைகளை நான் தொடர்ந்து படித்துவருகிறேன். நீங்கள் எழுதுவதெல்லாம் எனக்கு நிரம்ப பிடித்திருக்கிறது" என்றாள் அவள்.

"பிடிக்கவேண்டுமென்பதற்குத்தானே எழுதுகிறேன்."

'அப்படியென்றால்'

"அழகுக் கலை செய்பவர்கள் எல்லோரும், மற்றவர்களை மகிழ்விக்கத்தான் விரும்புகிறார்கள்."

"எங்கள் கல்லூரியில் ஒருத்தி படிக்கிறாள். அவளுக்குமட்டும் உங்கள் கதை கொஞ்சமும் பிடிக்காது."

"ஒருத்தியென்ன பலபேர் இருக்கலாம். அழகை ரசிக்க விரும்பாதவர்கள், ரசிக்கும் நிலையில் இல்லாதவர்கள் இவர்களுக்காக நான் எழுதவில்லை. சமூகத்தின் நோய் தீர்க்கும் வைத்தியனல்ல நான். நோய்தீர்க்கும் வைத்தியர்கள் வேறே, வேதனையைக் குறைக்கும் அன்புக் கலைஞர்கள் வேறே."

"அஃதிருக்கட்டும் 'தெருவிலே பிணம்' என்ற கதையில் பிச்சைக்காரர்களுக்கு உதவி செய்வதை ஏன் அவ்வளவாக வெறுக்கிறீர்கள் ?"

"ஓ அதுவா? இருக்கிற சாதிகள் போதாதென்று பிச்சைக்காரர் என்ற தனி வகுப்பினரை உண்டாக்க நான் எப்போதும் விரும்புவதில்லை."

"நிரம்ப அழகாய்த்தானிருக்கிறது. இப்படியே எல்லோரும் இருந்துவிட்டால், ஏழைகள் பிழைப்பதுதான் எப்படி? அவர்களுக்குத் தொழில் கொடுத்துக் காப்பாற்ற அரசாங்கமும் இல்லை. பிச்சை கொடுத்து காப்பாற்றக் குடிமக்களும் இல்லையென்றால் அவர்களின் கதிதான் என்ன ?"

"பாம்புகள் தங்களை விழுங்கி வாழ வேண்டும் என்பதற்காகத் தவளைகள் பிழைத்திருக்க வேண்டுமா? என்ன? இப்படித்தான் ஒருசில அணுக்களைப் பிச்சைக்காரர்களுக்கு கொடுத்துவிட்டு நாடே நலம்பெற்றுவிட்டதாக எண்ணி ஏமாந்துபோகிறோம். நாளைவரும் மாறுதலை வரவேற்று அதுவரையில் நடப்பது நடக்கட்டும் என்று பொறுத்திருந்து பார்க்கவேண்டும். அந்த மாறுதல் விரைவில் வர வழிதெரியுமா? ஏழைகளுக்கு உதவாமல் அவர்களை பொல்லாதவர்களாக்கி தூண்டிவிடுவதுதான்."

'அப்படியென்றால்'

"அவர்களின் புரட்சியைக்கண்டு பயந்தாவது இந்த அரசாங்கம் அவர்களுக்குத் தொழில் கொடுத்துக் காப்பாற்றட்டும். தொழிலில் ஈடுபடமுடியாத நோயாளிகளை விடுதியில்வைத்துக் காப்பாற்றட்டும். அப்போது முதலியார் அங்கு வந்தார். அவருடனேயே சிற்றுண்டியும் வந்தது. எல்லோருமாகச் சேர்ந்து பக்கத்திலிருந்த மண்டபத்திலமர்ந்து சிற்றுண்டி அருந்தினார்கள். அதற்குப்பின் உலக விவகாரங்களைப்பற்றிய உரையாடல் ஆரம்பமாயிற்று. முடிவாக, சீராளன் விடை பெற்றுக்கொண்டான்."

"நீங்கள் அடிக்கடி இங்கு வந்து போங்கள், உங்களைப் போன்றவர்களிடம் பேசிக்கொண்டிருப்பதே பெருமகிழ்ச்சியாக நான் எண்ணியுள்ளேன். நான் எப்போதும் வீட்டில்தான் இருப்பேன்" என்று சொல்லி கரம் கூப்பினார் முதலியார். செந்தாமரையும் கரம் கூப்பினாள்.

## 3

முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பிய முழுமதிபோல் துன்பத்தைத் துளைத்து இன்ப உலகில் இடம் பெற்றவள்போல் திகழ்ந்தாள் செந்தாமரை. அழகு, அறிவு, அந்தஸ்து, அலங்காரம், அபிநயம், அடங்காத ஆசை இவைகள் அத்தனையுமே அவளிடம் குடிகொண்டிருந்தது. செல்வத்திலும், சிறப்பிலும் வளர்ந்த அவள் சீராளனின் கதைகளிலும், காவியங்களிலும் உயிரையே வைத்திருந்தாள்.

சீராளனின் சொந்த ஊர் தூத்துக்குடி. வறுமையில் பிறந்த அவன் வறுமைப்

போராட்டத்திலேயே கல்லூரி வாழ்வை முடித்தான். பட்டம்பெற்ற அவன் சர்க்கார் வேலைக்குப் படையெடுக்கவில்லை. பல பத்திரிகைகளுக்கு பணியாற்றினான். சிறந்த எழுத்தாளனாக பரிமளித்தான். இந்தச் சமயத்தில்தான் முதலியாரின் நட்பு சீராளனுக்குக் கிடைத்தது. அன்று நடந்த மணிபுரத் தமிழர் கழகத்தின் ஆண்டுவிழாவின்போது, அவனைத் தன் வீட்டிற்கே அழைத்துவந்தார் முதலியார்.

முதலியாருடன் நட்புக்கொண்ட ஒரு மாதத்தில் நாலைந்து மாலைப்பொழுதுகளை அவருடைய வீட்டில் கழித்துவிட்டான் சீராளன். அடிக்கடி முதலியார் மகள் செந்தாமரையைத் தோட்டத்தில் சந்தித்துப் பேசிப்பேசி மகிழ்ந்தான். அந்தச் சந்திப்பிலே திரண்ட, கற்பனையில் புது மெருகுடன் பல கதைகள் சிருஷ்டித்துவிட்டான். சீராளனின் இதயத்தில் புதுவிதக் கற்பனைத் தீபமே ஏற்றிவிட்டாள் செந்தாமரை.

அவளது தந்தை பிரபாகர முதலியார், பெரிய சீர்திருத்தவாதி முற்போக்கு எண்ணங்கொண்டவர். பெரிய பணக்காரர், பொதுத்தொண்டில் ஈடுபட்டவர், ஆரம்பக் காலத்தில் பத்திரிகை ஒன்றுகூட நடத்தினார். தாழ்ந்த குலத்தில் ஒரு பெண்ணை அவர் காதலித்து மணமுடித்தார். அவருக்குப் பிறந்த ஒரே பெண்ணையும் சிறந்த முறையில் வளர்த்து குலத்தைப் பாராது சீர்திருத்த வாலிபனுக்கே மணமுடிக்க எண்ணியிருந்தார்.

இந்தச் சமயத்தில் சீராளன்—செந்தாமரை இருவரிடையே வளர்ந்த அன்பைக் கண்ட முதலியார் இருவரையும் வாழ்க்கையில் ஒன்றுசேர்த்து வைத்தார். கண்ணீரும், சிரிப்பும் வாழ்வில் ருசிப்பதுபோல், கலைஞனும், ரசிகையும் கலையுலகம் ரசிக்க வாழ்வில் ஒன்றுகலந்தனர். செந்தாமரையின் தந்தை பிரபாகர முதலியார் காதல் தம்பதிகளைக் கூட்டிய பெருமையில் அவருக்கு ஆனந்தமே தாளமுடியவில்லை. புதுத் தம்பதிகளுக்குப் புதுப் பங்களா வாங்கிக் கொடுத்தார். பெரும் மூலதனம்போட்டுப் புதுப் பத்திரிகை ஒன்று சீராளனுக்கு ஆரம்பித்துக்கொடுத்தார். செந்தாமரை—சீராளன் கலைவாழ்வின் இன்பக் குழந்தையாக 'தீப்பொறி' என்ற அவர்களின் மாதப் பத்திரிகை தமிழகத்திலே பொலிவுற்றுத் திகழ்ந்தது.

## 4

மாதத்திற்கோர்முறை 'பொறி' ஏராளமான பணத்தை ஏப்பமிட்டு வெளிவந்துகொண்டிருந்ததேயன்றி 'அங்காடியில்' லாபத்தைக் காட்டவில்லை. நாட்டில் கணக்கற்ற பத்திரிகைகள் முட்டி மோதிக் கொண்டிருப்பதைப்போன்று சீராளனின் 'பொறி'யும் முட்டி மோதிக்கொண்டிருந்தது. 'பொறி'யின் வளர்ச்சியில் நஷ்டம் வந்தது. அதை ஈடு செய்ய செந்தாமரையின் ஏராளமான நகைகள் பலியாயின. சீராளனின் வற்புறுத்தலுக்கிணங்கி இருமுறை தன் தந்தையிடம் சென்று பெருந் தொகை வாங்கிவந்தாள் செந்தாமரை. மறுமுறையும் சீராளன் தொகை வாங்க வற்புறுத்தவே, தன் தந்தையிடம் அடிக்கடி கைநீட்டி யாசிக்க அவள் விரும்பவில்லை. பல காரணங்கள் யெடுத்துச்சொல்லி தந்தை வீடு போக மறுத்தாள்.

அன்றையிலிருந்து அன்பாக வைத்திருந்த செந்தாமரையை அலட்சியமாக நடத்தத் துவக்கினான். அவன் குணம்கூட மாறிவிட்டது. 'பணக்காரக் குடும்பத்தில் அவள் பிறந்த செருக்குத்தான் தன்னை அவமதிக்க வைக்கிறது' என்ற விகற்ப எண்ணம் அவன் மனதில் தலைதூக்கிவிட்டது. இதுவரை உயிருக்குயிராக நேசித்துவந்த அவளிடம் வெறுப்புக் காட்டத் துவக்கினான். 'மமதை செருக்கு' என அடிக்கொருமுறை, வெறுப்பாகக் கூறியவண்ணமாகவே யிருந்தான். பண்புவின் உள்ளம் நொருங்கிவிட்டது. அவள் வாழ்வின் வஸந்தத்தைப் பற்றிய கனவொளியும், இன்பமும், பூரிப்பும் அந்தோ அஸ்தமித்துக்கொண்டிருந்தன. மிதமிஞ்சிய கவலை அவளைப் படுக்கையில் வீழ்த்திற்று. அதைக்கூட அவன் கவனித்தானில்லை. கணவன் சுகமே தன் சுகமாக எண்ணி ஒவ்வொரு நிமிடமும் உழைத்த தன் ஆசை மனைவியைப்பற்றிக் கவலை கொள்ளாது தன் பத்திரிகையே கதியென்று

உழைத்தான், ஓரளவு வெற்றியும் கண்டான்.

5

பத்திரிகைக் கவலை ஒழிந்ததும் தன் மனைவியைப்பற்றிய சிந்தனை ஏற்பட்டது சீராளனுக்கு. நல்ல வைத்தியர்களைக் கொணர்ந்து மருத்துவம் செய்தான். விழலுக்கு இறைத்த நீர் ஆகிவிட்டது அவன் முயற்சி. இறுதி மூச்சு எல்லையில் சீராளனை அருகே அழைத்தாள் செந்தாமரை. அவள் கண்களில் நீர் மல்கியிருந்தது.

"நான் இனிப் பிழைக்கமாட்டேன். உங்களைவிட்டுப் பிரியவேண்டுமே என்றுதான் தத்தளிக்கிறேன். இன்றாவது நான் செருக்கற்றவள் என்பதை உணர்ந்தீர்களா? என்னை என்றும்போல் ஏற்றுக்கொள்ளுங்கள்." அதற்குமேல் அவளால் பேசமுடியவில்லை.

"ஆ நான் பாவி, சண்டாளன், என் ஆசைக் குலக்கொடியை அழித்தேன். நான் ஒரு நச்சுப்பாம்பு, என்னை மன்னித்துவிடு செந்தாமரை!"

"என் மனம் மகிழ்ந்தது. உங்களோடேயே ஒன்றித்து, வாழக் கொடுத்து வைக்கவில்லை. நான் மறைந்ததும் நீங்கள் அவசியம் மறுமணம் செய்துகொள்ளவேண்டும். என் இடத்தைப் பூர்த்திசெய்யும் மங்கையின் அருளால் 'பொறி' நாட்டில் நற்கருத்துச் சொட்டப் பணியாற்றட்டும். இதனை வரவிருக்கும் என் தங்கையின் கழுத்தில் போடுங்கள்" என்று ஒரு தங்கச் சங்கிலியை அவனிடம் கொடுத்தாள் செந்தாமரை.

"வீணாக உடம்பை அலட்டிக்கொள்ளாதே, செந்தாமரை, நீ இறக்கமாட்டாய், என்னைவிட்டு உன் ஆவி பிரியாது."

"இந்த அன்பு தக்க காலத்தில் என்னை அரவணைக்க மறுத்துவிட்டது. இனி மூச்சு தடுமாறும் நான் . . . . ."

"இல்லை, நீ பிழைக்கத்தான்வேண்டும். முடியாது. முடியவே முடியாது." இவை போன்ற அர்த்தமற்ற வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வெளிவந்தன.

அப்போதுதான் அந்த குடும்ப விளக்கு அணைந்து எங்கும் இருள் சூழ்ந்திருப்பதை உணர்ந்தான். மண்டியிட்டபடியே அவள் ஆத்ம சாந்திக்காக வேண்டிக்கொண்டான். எழுந்தான்.

6

பண்பு மறைந்தபிறகு தன் காரியாலயத்திற்கு அருகே, தன் அலுவலக அறையை மாற்றிக்கொண்டான். அந்த கட்டிடத்தில் பல குடும்பங்கள், குடியிருந்தன. ஹோட்டல் சாப்பாடு, உடலுக்கு ஒத்துவராததினால், அந்த கட்டிடத்திலேயே, உள்ள ஓர் அம்மாளிடம், பணம்கொடுத்து சாப்பிட்டுக் கொண்டுவந்தான். அந்த அம்மாளின், அன்புருவமான வாஞ்சை, அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது அக்கட்டிடத்திற்கு அவன் வந்த ஒரு வாரத்திலேயே கவலையற்று தன் அறையைச் சரியாகக்கூடப் பூட்டாமல் போய்விடுவது வழக்கம்.

அன்று தன் வெளியீட்டுக் காரியாலயத்தில் அதிக வேலையிருந்ததால் ஏழு மணிக்குத்தான் வந்தான் சீராளன். சீராளன் வந்த போது தன் அறையினுள் இருந்த பெண் "மன்னித்துவிடுங்கள் ஏதாவது புத்தகம் எடுத்துப் படிக்கலாம் யென்றுவந்தேன்" என்று கூறிவிட்டு ஓடிவிட்டாள். மேஜை மீது கிடந்த புத்தகங்களையெல்லாம் எடுத்து ஒழுங்குபடுத்தி வைத்துவிட்டதும், தன் நாட்குறிப்பு மாறுபட்டிருப்பதைப் பார்த்தான் சீராளன். வந்தவர்தான் இதை தவறி செய்திருக்கவேண்டும் என நினைத்துக் கொண்டு நாட்குறிப்பை புரட்டினான்.

17--3—42

"இன்று என் வாழ்விலோர் திருநாள். பொன் விழா. திருமணம் முடிந்தது. அலுவலகத்தின் ஆணையை நிறைவேற்றும் பொருட்டு திருச்சிசென்ற அவர் ஆகஸ்டு புரட்சியில் கலந்துகொண்டதன் பயனாக போலீஸாரால் தடியடிபட்டு மாண்டார்" என்ற செய்தியை மறுவாரமே கேட்டேன். அவர் முகத்தைக்கூட நான் சரியாகப் பார்க்கவில்லை. இருந்தாலும் பிறருடைய சுதந்திரத்தைப் பறிப்பதன்மூலம் முன்னுக்கு

வந்துள்ளவர்கள், பெற்றுள்ள ஆயிரக் கணக்கான புகழ்மாலையைவிட தன் நாட்டின் உரிமைக்காக போராடி வீர மரண மடைந்த அவரின் கல்லறை எனக்கு மகிழ்ச்சியூட்டுகிறது. —பிரேமா

14—5—43

என்னைவிட என் தாய்தான் அதிகம் வருத்தப்படுகிறாள். நான் போனபிறகு நீ எப்படி வாழ்வாய்? என்கிறாள். உண்மையே. பற்றிப் படர இடமின்றிக் காற்றில் அசையும் கொடிக்குக் கோல் தேவைப்படுவது போல் கணவனையிழந்து கவலையால் துடி துடித்துக் கண்ணீர் சிந்தும் விதவைக்கு மறுமணம் அவசியம்தான். ஆனால், என்னை ஏற்றுக்கொள்வார் யார்? —பிரேமா

12—1—45

மணமுடித்து மனைவியை இழந்த எந்த எழுத்தாளனாவது இருந்தால் . . . . . நானும் ஏதோ கொஞ்சம் எழுதத்தெரிந்தவளாக இருப்பதால் அவருடைய எழுதும் சக்திக்கு தூண்டுகோலாய் இருக்கலாம் என எண்ணுகிறேன். விதவையின் கணவன் இறந்து விட்டால் அவள் உள்ளமும் உணர்ச்சியும் இறந்தாவிடும்? இதை ஏன் இந்த சமூகம் தெரிந்துகொள்ளவில்லை. —பிரேமா

பிரேமா உத்திரவின்றி ஓர் ஆடவனது அறையில் புகுந்ததை நினைத்து வருந்தினாள். கையிலிருந்த நாட்குறிப்பை கவனித்தபோது திடுக்கிட்டாள்; ஏடுகளைப் புரட்டினாள்.

13—9—35

நல்லவர்களாக ஒரு சிலர் இந்த உலகத்தில் கிடைத்தால் போதும். பலருடைய பழக்கமும் அறிமுகமும் வேண்டியதில்லை. அப்படிப்பட்ட சிலருக்கு இடையில் வாழ்ந்து செத்துப்போவதே மேல். —சீராளன்

4—7—38

"எழுத்தாளனாக எங்கோ திரிந்த எனக்கு முதலியார் வீட்டில் தொடர்பு ஏற்பட்டது. அவரது அன்புச் சீதனமாக 'பொறி' என்ற பத்திரிகையை நடத்தும் பேறுபெற்றேன். 'பொறி' யின் முன்னேற்றத்திற்காக உழைக்கிறேனென்று என் ஆசைக் குலக் கொடியை வீண் பணத்தாசையால் அழித்தேன். நான் பாவி. என் வாழ்வில் மறக்க முடியாத நாள் அதுதான்." —சீராளன்

4—9—45

'பொறி'க்கு உறுதுணையாகவும் என் எழுத்தாற்றலுக்கு அருந்துணையாகவும் இருக்கும் ஓர் பெண்ணை மறுமணம் செய்து கொள்ளுமாறு வேண்டிச் சென்றிருக்கிறாள் அந்த பெண்? என் வாழ்க்கை என்றுமே சோலைகாணாப் பாலையாகத்தான் யிருக்கவேண்டுமா யென்ன? —சீராளன்

நாட் குறிப்பைப் படித்த பிரேமாவுக்குத் தன் எண்ணம் ஏதோ ஓர் முடிவுக்குவருவது போல் தோன்றிற்று. மறுநாள் 'நாட் குறிப்பை' எடுத்துக்கொண்டு சீராளன் அறைக்குச் சென்றாள்.

உங்கள் 'நாட்குறிப்பை' தவறி . . . . . . எடுத்துபோய்விட்டேன் என்றுதானே சொல்லுகிறீர்கள். பரவாயில்லை என்றான் சீராளன்.

"மன்னித்துவிடுங்கள்" என்று கூறி விட்டு திரும்பினாள் பிரேமா.

அன்றுமுதல் இருவர் உள்ளத்திலும் அன்பு பெருகிற்று. தன் மகளுக்குத் தக்க துணைவன் கிடைக்கவில்லையே என்று வருந்திய தாய் அவர்கள் இருவரையும் ஒன்றுசேர்த்துவைத்தாள்.

## 7

'இதோ பார் உனக்கொரு சங்கிலி' என்றான் சீராளன்.

"ஏது எனக்குச் சொல்லமாட்டீர்களா?" என்றாள் பிரேமா.

"உனக்குச் சொல்லாமலா?"

'உன் தங்கை தந்த பரிசு' என்று செந்தாமரையின் கதையைக் கூறினான் சீராளன்.

"அக்கா கொடுத்த பரிசா? அவளுக்குநான் நித்தம் கடமைப்பட்டிருக்கிறேன். இதோ வருகிறேன்" என கூறிவிட்டு உள்ளே சென்றாள் பிரேமா. சற்று நேரத்தில் **நினைவுச் சின்னம்** என்ற தலைப்பில் செந்தாமரை சீராளன் வாழ்க்கையைச் சித்தரித்த கதையொன்று எழுதிக்கொண்டுவந்தாள். மறுவாரம் பொறியில் வெளியாகியது **நினைவுச் சின்னம்.** வெளிவந்த இதனைப்படித்த சீராளனின் கண்களில் நீர் வடிந்தது. அப்போது

> "பாலைவனம் சோலைவனமாக வேண்டும்
> பசுங்கிளிகள் அங்கிருந்து பாடவேண்டும்
> சாலைகளில் பல தொழிலும் பெருகவேண்டும்
> சபைகளிலே தமிழெழுந்து முழங்கவேண்டும்

என்ற 'கவிமணி'யின் பாட்டு எங்கிருந்தோ ஒலிபெருக்கிமூலம் காற்றில் மிதந்து வந்தது.

# போகாத வண்டி


**அற்புதராஜ், 6 இ.**


ஜெயராஜ் B.A. பட்டம் பெற்று, வேலை விஷயமாய் சென்னை செல்ல திருச்சி சந்திப்பை அடைந்தான். ஆனால் வண்டியில் ஈகூட நுழையமுடியாத கூட்டம். அவன் மூளை வேலை செய்தது. கடைசி வண்டியில் தடபுடலாய் ஏறி, அதிகார தோரணையில், "இந்த வண்டியில் ஏறக் கூடாது. இதை அவிழ்த்துவிடுவார்கள் என்று எத்தனை தடவை சொல்லுகிறது. இறங்குங்கள். ஹூம்...சீக்கிரம்." வண்டி உடனே காலியாயிற்று. ஜெயராஜ் சிகரட்டைப் பற்றவைத்துக்கொண்டு ஸ்டைலாகப் படுத்திருந்தான்.

வண்டி புறப்பட மணி அடித்தது. விஸில் ஊதிவிட்டது. வண்டி புறப்பட்டுவிட்டது. ஜெயராஜின் காரேஜ் அசைந்தபாடில்லை. எட்டிப் பார்த்தான். வண்டி கைகாட்டியைத் தாண்டிவிட்டது.

ஜெயராஜுக்குப் பகீர் என்றது. தன் வினை தன்னைச் சுடும். கீழே இறங்கி அருகிலிருந்த ரயில்வே அதிகாரியிடம் தான் இருந்த வண்டி ஏன் போகவில்லை என்று ஆத்திரமாய்க் கேட்டான். அதுவே வழக்கம் என்றார் அதிகாரி. நின்ற காரேஜிலிருந்து முன் காரேஜுக்கு சென்ற மக்கள் அவனை மகராஜன் என்று போற்றிப் புகழ்ந்து சென்றார்கள். கஷ்டப்பட்டு அடுத்த வண்டியில் பிரயாணம் செய்து சென்னையை அடைந்தான்.

எப்படி நம் ஜெயராஜின் யுக்தி என்று பாருங்கள்...





# பதில் உரைப்பீர்!

த. பத்திநாதன், பி. காம்,

*பழைய மாணவன்*

★

உதிர்கின்ற உரைமலரால் உளத்தின் இன்ப
உணர்ச்சியினைக் கிண்டிவிட்டு ஓங்கெழில் சீர்
மதுகொழிக்கும் பைந்தமிழே! மாந்துந் தோறும்
மறையாத மனவெழுச்சி தந்து கால
முதுமையிலும் இளமையொளி மூழ்கி நிற்கும்
புதுமையினைக் கேட்டறிந்த இடமும் ஏதோ?
அதிர்வுதரும் இனிமையினால் எங்கள் உள்ளம்
அலர்விக்கும் அருந்தமிழே! பதில் உரைப்பாய்!

கடைப்பார்வை ஒளிவீச்சில் அம்பின் கூர்மை
கலந்தென்றன் இரும்பான உள்ளந் தன்னை
உடைத்தெறியும் சிறுபெண்ணே! நின்றன் முல்லை
உருவொக்கும் சிறுசிரிப்பில் உலகத் தோர்கள்
படித்தறியும் காவியத்தின் பரப்பைக் காட்டி
பரவசத்தின் எல்லையினைத் தொட்டு நீட்டி
சடைநெளிவில் கவிபுனையும் வித்தை எந்தச்
சாத்திரத்தில் படித்தறிந்தாய் பதில் உரைப்பாய்!

தித்திக்கும் பேரழகால் நெஞ்சில் இன்பத்
தேன்பாய்ச்சும் தொழிலுடைய இயற்கை அன்னாய்!
புத்திக்கும் மற்றெல்லாப் புலன்க ளுக்கும்
பொருளுரைகள் பலகூறித் திருத்து கின்ற
வித்தையினை எங்குகற்றாய்? மூங்கில் தோகை
விரித்தாடும் மாமயிலே கூத்தும் பாட்டும்
ஒத்துவரும் பெருங்கலையால் உளத்தின் துன்பம்
ஓட்டுகின்ற மந்திரத்தை எங்கே கற்றாய்!


குக்கென்னும் குயிலே! உன் குரல் எடுத்துக்
கூவுகையில் இசைவெள்ளம் கொப்பு ளித்துக்
கக்குகின்ற சூத்திரத்தை எங்கே கண்டாய்!
கதிரவனின் முத்தத்தால் மலர்ந்து வாசம்
திக்கெட்டும் தருகின்ற மலரே! வண்டுத்
திருடர்களை யுன்பக்கம் ஈத்துப் போதைச்
சோக்கத்தில் ஆட்டிவைக்கும் சுகம்தான் என்னே?
சொல்லுவீர் விடையெமக்குத் தோன்று மாறே!

# The Smallest State - - -

**Xavier Amalraj,** V

NOW we are all in a world in which might has become right. Importance and prestige of a nation is measured according to its material resources and fighting power. Small nations and still less nations without any army, have no place in the modern world. Yet I am going to speak about the smallest State, the unarmed State and nevertheless the State with the greatest influence in the world. That State is the Vatican.

Rome! How many pictures come before the mind when that word is mentioned! One is reminded of the city of the Popes, the centre of the Catholic world. Looking back into history, we can see Rome as the centre and source of civilisation and learning. Further back we recall the city of the Caesars which was preceded by that of the Roman Republic, with its Senate hallowed by the memory of orators like the great Cicero. But let us not stop here, but go further back until we come to the humble beginnings of this great city.



In 753 B.C. two twin brothers were building a new city. Each of them wanted to name the city after him. So a quarrel arose in which Romulus killed Remus and finished the building of the city, which he named after him—Rome. That was the humble beginning of the great city of Rome.

After a number of wars Rome soon became the centre of a very powerful state. The Roman people got rid of their kings and became a Repuplic. The Roman Senate is well known in history. World renouned orators like Cicero made it famous all over the world.

With Julius Caesar began the era of the Roman emperors. The neighbouring countries were conquered and Rome became the centre and capital of the then known world.

With Augustus Caesar as the emperor at Rome Christ was born in Bethlehem. No one might have thought that this humble babe in the manger would become the founder of a new religion which would one day conquer Rome itself.

Under the reign of Nero St. Peter and St. Paul were martyred in Rome. Thus was begun the era of persecutions which at the end resulted in the triumph of christianity over paganism.

The emperor Constantine saw a vision of Christ and he received the cross as the sign of Victory. In the end he became a christian and allowed Christians to practise their religion freely.

Then began the building of beautiful churches and vast cathedrals and magnificent basilicas. Everywhere the old pagan temples gave place to Christian churches. That was the beginning of Christian Rome. When Constantine built the new city Constantinople, the seat of imperial government was shifted there. From that time Rome became exclusively the city of the Popes.

Rome, as we all know, is built on the banks of the Tiber. Vatican is one of the seven hills which constitute Rome. Vatican is the city of the Popes. It is built on the tomb of St. Peter. The great Basilica of St. Peter is one of the wonders of the world. Built by the great artist Michael Angelo, it is remarkable for its size, beauty and appearance. It is a sight to see when it is illuminated. On festival days, people from all over the world come to Rome to see these marvels of art and beauty.

For many centuries the Popes held a strip of Italian territory, stretching across the entire width of the country and covering 15000 square miles. Of this he was deprived at the unification of Italy in 1870. The Pope remained a voluntary prisoner in the Vatican palace, steadily maintaining his right to hold territory as a sovereign independent of any one State. Then by a Concordat of 1929 between the Pope and the Italian government the Pope again became the independent ruler of the Vatican city, the smallest state in the world. Its area is just over 108 acres, having a population of a little above a thousand. Yet it is the most important State in the world because it is the centre of Christianity and so governs the millions of Catholics throughout the world. That is why all governments send their ambassadors to the Vatican. It is in fact the centre of culture and civilisation.

The library of the Popes is the biggest in the world. It contains so many millions of books and especially old and rare books that students of history often go there to consult these. The Vatican library has one of the best manuscript collections in the world, numbering 50,000 as well as 400,000 printed books; the Vatican archives contain 60,000 volumes.

The Sistine chapel in the Vatican contains some of the world's finest art including Michael Angelo's last judgment and many frescoes by Raphael; works of Angelico, Leonardo da Vinci, Titian and others. In this chapel, the Papal ceremonies are held.

The great museum of the Vatican is rich with the master-pieces of great artists. Statues and pictures of great beauty and value are seen there. Some of the finest collections of antiquities are to be found. In the Vatican garden is the important Vatican observatory.

Indeed the whole of the Vatican can be called a big library or museum, because it has so many things to teach us and so many sights to show us. Even the very streets of the Vatican are so neat and beautiful—with marble pavements that foreign travellers hesitate to use them as ordinary roads. Beautiful fountains are seen to add to the beauty of the scene.

The Vatican, though so small, has got its own railway system, post office, radio, newspapers, coinage and all other arrangements. It has diplomatic relations with many countries. The Pope is the king of the Vatican. But he has appointed a governor in his stead.

Thus we see the Vatican as one of the oldest cities in the world. It is at once a great centre of culture and civilisation and religion and learning. For the millions of Catholics it is the seat of the Popes. For others also it ought to be dear as it contains so many master-pieces of art, as it is so rich with the wonders of architecture as it preserves so many works of great men of learning and talent. Indeed rightly has it been called the Eternal City.

# உழவன்

அ. ச. வெற்றிக்கோள், 6 அ.

*பலகுடை நிழலும் தங்குடைக்கீழ் காண்பர்*
*அலகுடை நிழ லவர்.*

உலகத்திலே சிறந்த தொழிலை மேற்கொண்டவர்கள் உழவர்கள் ஆவர். இவ்வாறு நெல்வளம் நிரம்பப் பெற்ற உழவர்கள் தன் குடையின்கீழ் பல வேந்தர்களின் குடையின் நிழல்களைக் காண்பர். அதாவது உழவர்கள் அரசர்களைவிடச் சிறந்தவர்கள். உழவனின் கலப்பைதான் கொற்றவனைக் கொற்றவனுக்குகின்றது; நாட்டை நலம்பயக்கச் செய்கின்றது; மாக்களை மக்களாக்குகின்றது.



உழவர்கள் வேலைசெய்யாமல் இருந்தால் பற்றற்ற துறவிகளுக்கும் வாழ்வு இல்லை.

*உழவினர் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்*
*விட்டேம் என்பார்க்கும் நிலை,*

என்று நாயனர் நயம்பட நவின்றுள்ளார். நாட்டின் உயிர்நாடி உழவர்களே. உடலைப் போன்ற நாட்டிற்கு உயிரூட்டும் இருதயம் போன்றவர் உழவர்கள்தான். உழவன் உழைப்பை நிறுத்தினல் நாட்டில் கேடுகள் அதிகரிக்கும்.

ஆதலால் நாட்டிலே—ஏன்? உலகத்திலேயே சிறந்தவர்கள் உழவர்கள்தான். அரசன் உழவர்களை ஓம்பவேண்டும், அவர்களுக்குத் தீங்குநேராமல் காக்கவேண்டும்.

சோழன் குறமுற்றத்துஞ்சிய கிள்ளிவளவனைப் புகழப் போந்த வெள்ளைக்குடி நாகனர் உழவர் உயர்வைக் காட்டுகின்ருர். அதாவது :—

*பொருபடைதரு உங்கொற்றமும் உழுபடை*
*ஊன்றுசால்மருங்கின் ஈன்றதன் பயனே*

என்பதாம். போர்வீரர்கள் போரில் அடையும் வெற்றியானது உழவர்களின் கலப்பையினின்றும் வந்ததன் பயன்தான் என்பதே மேற்கூறியதன் பொருளாம்.

மேலும், உழவர்களின் பலத்தைக் கூறப் போந்த அவர்,

*பகரு புறந்தரு நர் பாரம்ஓம்பிக்*
*குடி புறந்தரு இவையாயினின்*
*அடி புறந்தருவர் அடங்காதோரே.*

ஏர்பிடிக்கும் உழவர்களைக் காத்தால் அடங்காத எதிரிகளும் அடங்குவர் என்று பாடினர் அந்தக் காலத்து வெள்ளைக்குடி நாகனர்; அன்றியும் ஔவையார் சோழ அரசனிடம் வந்தபொழுது வரப்பு உயர என்று பாடியிருக்கிருர்.

இந்த இருபதாம் நூற்றுண்டிலே உழவன் என்ற பதத்திற்கு உரிய அர்த்தம் காண முடியாது. உரிமையற்றவனுய் இருக்கின்றவன் உழவன்; நாட்டிற்கு உணவளிப்பவன் உழவன்; ஆனல் உணவின்றித் துன்பம் அனுபவிப்பவனும் அந்த உழவன்தான்; மாடுபோல் உழைக்கின்றவன் உழவன்தான்; தேய்மதிபோல் தேய்பவனும் அதே உழவன்தான். உழவனுக்குத் தன் உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் அடைய வழியில்லை.

இந்நிலைமைக்குக் காரணங்கள் பல உள. அரசாங்கம் மீதும் உழவர்மீதும் குற்றத்தைப் போட்டு வாளாவிருந்தால் ஒன்றும் சித்தி பெருது. வருங்கால சமுதாயத்தின் தூண்களாகிய மாணவர்கள் தங்கள் கடமையை உணர்ந்து உழவர், கிராமங்கள் நிலையைமாற்றி முன்னேற்றம் காணப் பாடுபடவேண்டும்.

# மாணவர் கடமை

ரா. நடராசன், 6 ஈ.

ஒவ்வொரு மாணவனும் தன் நாட்டிற்கு தன்னாலான சேவைகளைச் செய்ய வேண்டும். பல மாணவர்கள் ஒன்று சேர்ந்து 'சமூக சேவைச் சங்கம்' என்னும் ஒரு சங்கத்தை ஏற்படுத்தி அதன்மூலம் ஒவ்வொரு மாணவனும் தன் நாடு முன்னேற்றமடைய ஆவன செய்தல்வேண்டும்.

நம் நாட்டின் முன்னேற்றம் கிராமங்களின் முன்னேற்றத்திலேயே இருக்கின்றது. "இந்தியாவின் ஜீவன் அதனுடைய ஏழு லட்சம் கிராமங்களில்தான் இருக்கிறது, என்றும் இக்கிராமங்கள் பிறர் கையை எதிர்பாராமல் தன் தேவையை எப்பொழுது தாமே பூர்த்தி செய்துகொள்ளும் சக்தியும் தகுதியும் பெற்றிருக்கின்றனவோ அன்றுதான் நம் நாடு சுதந்திரம் பெற்ற நாடாகும்," என்று காந்தி அடிகள் கூறியுள்ளார். இவ்விதம் கிராமங்கள் பிறர் உதவியை நாடாமல் செய்ய மாணவர்களாகிய நாம் உதவிபுரிய வேண்டும்.

கிராமங்களில் முக்கியமாகக் கல்வியறிவு இல்லாமையால்தான் அவைகள் பிற்போக்கு அடைந்துள்ளன. ஒவ்வொரு மாணவனும் தனது விடுமுறைக் காலங்களில் தன் கிராமத்திற்குச் செல்லக்கூடும். அவ்வமயம் அம் மாணவன் தன் கிராம மக்களுக்குக் கல்வியைப் போதிக்கவேண்டும். அக்கிராம மக்களின் பிற்போக்கான நிலமையை எடுத்துக் காட்டி அவர்கள் தங்களுடைய நிலமையை உணரும்படியாக பல மாணவர்கள் கூடி நாடகங்களும் சொற்பொழிவுகளும் ஆற்றி அவர்கள் நடைமுறைகளின்படியே நடத்தல் வேண்டும். இவ்வாறு செய்வதால் கிராமங்களில் உள்ள மக்கள் ஒற்றுமை அடையவும் அவர்கள் முன்னேற்றம் அடையவும் ஏதுவாகும். கிராமங்கள் ஒவ்வொன்றும் இவ்வாறு முன்னேற்றம் அடைவதால் உண்டாகும் பலனை நம்மால் கூற இயலுமோ?

கிராமங்களில் விவசாயம் சீர்கெட்டுள்ளது. அதற்கு அரசாங்கம் மாத்திரம் காரணமல்ல. இதற்கு வேறு பல்வகையான காரணங்கள் உண்டு. இதற்கு முக்கியமான காரணங்கள் இரண்டுதான் என்று நாம் அறியமுடிகின்றது. முதலாவது இடம்பெற்ற காரணம் என்னவெனில் மழையின்மையாகும். இரண்டாவது காரணம் பொருளாதார சிக்கலாகும். இவைகளினால் பல விவசாயிகள் கிராமங்களைவிட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு சர்க்காரும் பல திட்டங்களை ஏற்படுத்தியுள்ளனர். ஆனால் கல்வியறிவு இல்லாத விவசாயிகளுக்கு இவை தெரியாமலிருக்கலாம். இவ்வித செய்தியை மாணவர்களாகிய நாம் விவசாயிகளிடத்தில் எடுத்துச்சொல்லி அவர்களுக்கு அவ் உதவியை நாமே சர்க்காரிடமிருந்து வாங்கிக்கொடுத்து உதவவேண்டும். இவ்விதம் செய்வதால் விவசாயிகள் உற்சாகம் குன்றாமல் விவசாயத்தைப் பெருக்க ஏதுவாகும்.

இப்பொழுது பல நவீன விவசாயக் கருவிகள் வந்துள்ளன. ஆனால் விவசாயிகள் இவ்வித நவீன சாதனங்களை உபயோகிப்பதால் நிலம் கெட்டுவிடும் என்று பயப்படுகிறார்கள். ஆனால் மாணவர்களாகிய நாம் நவீன சாதனங்களை அறியமுடிகின்றது. அவர்கட்கு அச்சாதனங்களின் அரிய பெரிய சிறப்புக்களையும் பயன்களையும் எடுத்துக் கூறுதல்வேண்டும். ஆனால் இவ்வித சாதனங்களை ஏழை விவசாயிகளால் வாங்க பொருளாதார நிலை குறுக்கே நிற்கின்றது. இப்பொழுது கிராமங்களில் உள்ள கூட்டுறவு ஸ்தாபனங்கள் விவசாயிகளுக்கு பொருள் கொடுத்து உதவுமாறு செய்தல் வேண்டும். இவ்விதம் செய்வதால் கிராமங்களில்மட்டும் அன்றி நகரங்களிலும் உணவுப் பஞ்சம் நீங்கலாம்.

இவ்விதம் ஒவ்வொரு மாணவனும் தன் கிராம முன்னேற்றத்திற்குப் பாடுபடவேண்டும். இவ்விந்தியாவில் உள்ள ஒவ்வொரு கிராமமும் முன்சொன்னபடி முன்னேற்றம் அடைந்தால் நம் நாடும் நம் அண்ணல் கூறியதுபோல் சுதந்திரமடைந்த நாடாகும். பயிர்த் தொழில்களைத் தவிர பலவகைத் தொழில்களையும் விவசாயிகளுக்குக் கற்றுக் கொடுக்கவேண்டும். ஏனெனில் பயிர்க் காலங்களில் தவிர மற்றக் காலங்களில் அவர்கள் கைத்தொழில்கள் மூலம் வருவாய் அடைதல்கூடும்.

# Let Us Go to the Moon

J. Antonysamy, V.

WHEN the night is dark and there are no clouds in the sky, we can see the moon shining like a silver ball among the stars. The moon is bright because the sunlight is shining on it for the moon has no light of its own; the light which we see on the moon is sunlight shining on the moon's surface.

Nobody has ever been to the moon for it is too far away. If we could jump off the earth and start running to the moon, it would take us five years to get there, running night and day. Even a fast aeroplane would take four months to do the journey. The moon is 2,38,000 miles away and that is why it looks so small. If it were only 1000 miles distant from us it would cover nearly one half of the sky and we should be able to see very clearly all the mountains and valleys on its surface.

The ground on the moon is nothing but rock and stones and dust. There are no trees or grass because there is no air or water. There are no seas or rivers and no clouds or rain. Everywhere there is only dry, dusty rock. When the sun shines on the moon, the rocks are burning hot, much hotter than the hottest desert on our earth; and when the moon is in darkness, the rocks are very cold, much colder than the coldest places on the earth.

Although there is much dust on the moon, it does not blow about for as there is no air, there is no wind at all. For the same reason, there is no noise or sound in the moon. Everything is perfectly silent. You cannot make a noise in the moon because sound is carried by the air and air is absent in the moon.

Let us pretend to go to the moon. The first thing we notice is that we can run and jump much more easily, than we can on earth. It is easy for us to step twenty yards in one step. That is because a person who weighs 80 lbs. on the earth weighs only 15 lbs. on the moon. The second thing we notice is the terrible heat of the sun, which shines much more firecely than it does on the earth. The ground is so hot that water will boil on it. But as soon as the sun sets, the ground atonce gets very cold, colder than the North Pole.

We are still on the moon and it is night. We see in the sky the same stars that we see from the earth, but of course there is no moon in the sky, for we are standing on it. Instead of the moon, we see the earth. The earth looks like a big moon and it shines with a beautiful silver light, just like the moonlight. The silver earth-light shines much brighter on the cold dry moon than moonlight shines on the earth.

Let us return to the earth. Go out one clear night when the moon is young and if you look carefully you will be able to see the dark part of the moon dimly lit up by earth-light while the bright piece of the moon is shining in the Sunlight.





Jahan Mohan Palace, Mysore

*A. Susainathan, VI C.*




Police Station in Malaya

*Adiseshan*




Gateway of India, Bombay

*S. B. Arulappan, V A*



St. Mary's Pro-Cathedral, Madura

*A. Susainathan, VI C.*




Church in Goa

*P. Augustin, VI A.*



Meenakshi Temple–Madurai
*A. Susainathan VI C.*

அக்காலத்து இந்தியர்,
தமிழர் சிற்பக்கலை
தலைசிறந்து விளங்கினது.



Moore Market–Madras
*K. Ganesan IV D.*


**ஆதாரம்...**



Samundisvaran–Mysore
*P. Augustin VI A.*

**...சுற்றி**

**நோக்குங்கள்**




College Church
*Louis Clement VI A.*



Tanjore Palace
*Mr. Sethu Rethinam, B.A., L.T.*

இக்காலத்து இந்தியர்,
தமிழர் சிற்பக்கலை
எவ்வளவு சீர்கெட்டிருக்
கிறது ?...ஏன் ?

“சிற்பத்தின் சீர்கேட்டை”
வாசியுங்கள்.




Gate of Palace—Mysore
*P. Augustin VI A.*

# சிற்பத்தின் சீர்கேடு

S. S. மாணிக்கம், 6 அ.

பழந் தமிழ்க் காலத்தே நம் நாட்டில் இன்பக் கலைகள் இணையற்று விளங்கின. இவற்றிற்குச் சான்றாகத் தமிழ் நாட்டின்கண் உள்ள பழம் பெரும் கோவில்களும் குகைகளும் நிற்கின்றன. இச்சுவை மிக்க கண்ணுக்கினிய காட்சிகளைக்கண்டு களிப்புற்றுப் பல்லைக் காட்டுகிறான் இன்றைய தமிழன். ஆனால் பண்டைத் தமிழ் மகனே அவ்வின்பக் கலைகளைத் தன்னகத்தேமட்டும் கொள்ளாது வையகத்தோர் காணக்காட்டியுள்ளான். அவ்வின்பக் கலைகளாவன : இசை, சிற்பம், ஓவியம் என்பனவாம்.

அவற்றுள் சிறப்பாய் சிற்பம் என்னும் நுண்கலையைப்பற்றிச் சற்று ஆராய்வோம்.



'சிற்பம்'. இவ்வார்த்தையைக் கேட்டாலே எளிது என்னும் சொல் பிரதிபலிப்பதுபோல் நம்முள்ளத்தே தோன்றுகிறதல்லவா? அப்படி எண்ண வேண்டாம். மேற்கூறிய மூன்று இன்பக் கலைகளுள் இணையற்றதும் எளிதற்றதுமானது சிற்பக்கலையேயாகும். சிற்பியின் கற்பனா சக்தி, கலைகளின் கரைகண்டதெனலாம். ஆகவே அவன் தன் கூரிய அறிவாலும், சீரிய திறத்தாலும் வியப்பூட்டத்தக்க பல சிற்பங்களைப் பிறப்பிக்கிறான். சிற்பியின் சீர்மிக்க ஆற்றலைக்காட்ட ஈண்டு ஓர் நிகழ்ச்சியைக் கூறுவோம். திருநெல்வேலியிலிருந்து கிழக்கே சுமார் ஐந்து கல் தொலையிலுள்ளது கிருஷ்ணாபுரம். அது பண்டைக்காலத்துச் சிவனடியார் யாத்ரீகத் தலமாய் அமைந்திருந்தது. அங்குள்ள ஓர் சிற்பத்தை உற்றுநோக்குவீர்களேயாயின், ஓரிடத்தில் கத்தியால் குத்தப்பட்டு இரத்தம் பாய்ந்தோடுவதுபோல் காட்சியளிக்கும். அது எவ்வாராயிற்று? வர்ணத்தைத் தீட்டினார்களா? அதுதான் சிற்பியின் சிறந்த ஆற்றல். என்னென்று தெரியுமா? தான் அதை உருவாக்கமுயன்றபோது, அக் கல்லின் ஓரிடத்தில் சிவப்புநிறம் தோன்றிற்று. சற்று யோசியுங்கள். நாமென்றால் யாது செய்திருப்போம்? வேறு கல்லொன்று பார்த்திருப்போமல்லவா? ஆனால் அச்சிற்பியோ அவ்வாறன்று.

தாம் அதனை உருவாக்கும்போதே தக்க முறையில் தன் ஆயுதங்களை உபயோகித்து, அந்நிறத்தை உபயோகப்படுத்திக்கொண்டான். அச்சிவப்பு நிறமுள்ள இடத்தை அச்சிலையின் மார்பாக அமைத்து, மார்பில் கத்தி பாய்ந்து இரத்தம் ஒழுகுவதுபோல் அமைத்தான்.

இவ்வாறு உச்சநிலையடைந்த சிற்பம் ஏன் இன்று தலைகவிழ்ந்து கிடக்கிறது? அத்தகைய சிற்பங்கள் உருவாகத் தக்க ஆயுதங்கள் இல்லையா? அல்லது பண்டுபோல் திறமிக்க மானிடரில்லையா? அவ்வாறு சொல்வதற்கிடமில்லை. காரணம் யாதென்று தெரியுமா? தான் பெற்ற ஆற்றலைத் தான் பெற்ற மகற்கு வமிசவழியாய்க் கற்பிக்காமையே காரணம் எனலாம். சான்று வேண்டுமோ? இதோ திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்ததும் சிவதலத்தைக் கொண்டுள்ளதுமான கழுகுமலை என்ற ஊரில் சிற்பத்திற்கிடமாகிய பல இடங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் மிக வனப்பு வாய்ந்தது ஓர் கல் ரதம். பாறையைக் குடைந்து ரதமாக அமைக்கப்பெற்றுள்ளது. அதன் உயரம் சுமார் ஐம்பதடி எனலாம். அதன் உள் அகலம் சுமார் பதினைந்து அடியும் வெளி அகலம் சுமார் இருபத்தைந்தடியும் இருக்கும். அதை எவ்வாறு குடைந்தனர்? அக் கல் ரதத்தை நம்மனோர் நோக்குங்கால் அதனை உருவாக்கியோர் தேவரோ மாந்தரோ, அல்லது பூதமோ என்று திகைப்புற நேர்கிறது.

மேற்கூறிய சிற்பம் அமைத்த சிற்பியின் அழிவைக் கேளுங்கள். ஒரு நாள் ஓர் சிற்பி அந்த ரதத்தை உட்புறமாக உளியின் உதவிகொண்டு குடைந்துசென்முன். அப்போது அவனது ஏக மகன் அவனுக்கு ஆகாரம் கொண்டுவந்தான். உணவை ரதத்தின்மேல் ஏறி ஓரிடத்தில் வைத்துவிட்டு தானும் ஓர் உளி சுத்தியல் எடுத்துத் தந்தைக்குத் தெரியாமல் ரதத்தின் மேலமைந்த சிற்பங்கள் அனைத்தையும் அமைத்தான். எவ்வாறு தந்தைக்குத் தெரியாமல் அமைக்க முடியும்? அவனுடைய சுத்தியல் சப்தம் தந்தைக்குக் கேட்கவில்லையா என்று கேட்பீர்கள். கேட்கவில்லை; ஏன் தெரியுமா? அவன், தான் அடிக்கும் சப்தத்தைத் தன் தந்தை அடிக்கும் சப்தத்துடன் சேர்த்துத் தந்தைக்குக் கேளாதவாறு செய்துகொண்டான். தந்தை ஓரடி அடித்தால் அச்சப்தத்துடன் கூடியே மகனும் ஓரடி அடித்தான். இவ்வாருக தந்தை குகையைக் குடைந்தெடுப்பதற்குள், மகன் குகையின் மேல் உள்ள கரடுமுரடான கற்களால் கவர்ச்சிகரமான சிற்பங்கள் பல உருவாக்கிவிட்டான். கடைசியாய்த் தந்தை தன் சுத்தியலை நிறுத்தவே மகன் அதிகமாய் ஓரடி அடித்துவிட்டான். அதைக்கேட்ட தந்தை மேலே யாரோ ஒருவன் வேலை செய்கிருன்போல்த் தோன்றுகிறதே என்று எண்ணி வெளியே ஓடிவந்து பார்த்தான். தன் மகன் தனக்கு மேலாய்த் தேர்ச்சியடைந்துவிட்டானே என்று மனம் புழுங்கி மகனைக் காலால் மிதித்துக் கொன்முன். பார்த்தீர்களா சிற்பத்தின் வளர்ச்சி யழிவை? இவ்வாறு கொன்றதை ஞாபகமூட்ட பின்னுல்வந்த ஓர் சிற்பி, அவ்வாறு தந்தை தன் மகனை மிதிக்க, மகன் குடல் சரிந்து மாண்டு கிடப்பதுபோல் ஒரு சிற்பம் அமைத்தான் என்பது வரலாறு. இவ்வாறு தனக்கு மேற்பட்டான் என்ற கருத்தால் அவனைத் தொலைப்பது நாட்டின் இன்பக் கலைகளின் அழிவுக்குக் காரணம் என்பதற்கையமுண்டோ? ஆகவே தமிழ்த் தாய் தவம் பெற்றீன்ற தவப் புதல்வர்களாகிய நீங்களேனும் நுண் கலைகளைப் புத்துயிர்பெறச் செய்ய அரும்பணி புரிவீர் எனக் கருதுகிறேன்.

வாழ்க தமிழ்க் கலைகள்!



மாணவன்—(தோட்டவேலை உபாத்தியாயரை நோக்கி) தோட்டத்திலே ஆடுங்க சார்!

உபாத்தியாயர்—தோட்டத்திலே என்னை ஆடச் சொல்ல உனக்கு என்ன அவ்வளவு திமிரு?

மாணவன்—உங்களை ஆடச் சொல்ல என்ன வந்தது சார். தோட்டத்திலே ஆடு மேய்துன்னு சொன்னேன் சார். அவ்வளவுதான்.

—நா. எதிராஜுலு, 5' இ.

# இளைஞர்கள் நகரம்

**R. ராஜ்குமார் 4 இ.**

“ அந்நியர் நம்மை ஆண்டது அந்தக் காலம் நம்மை நாமே ஆண்டு கொள்வது இந்தக் காலம் ”

இன்றைய உலகில் பேசுபவர்கள் பலர். செய்பவர்கள் சிலர். பேச்சு செயலில் இல்லை. செயலாளர்கள்தான் அதிகம் இருக்கவேண்டும். தற்போது சூழ்நிலைகள் உலகில், பெருகிக்கொண்டே வருகின்றன. செயலாளர்கள் இருந்தால்தான் மக்கள் அவரைப் பின்பற்றி நடப்பர். சில தலைவர்கள் தன்னலவாதிகளாகவே இருக்கின்றார்கள். எல்லோரும் தங்கள் சொந்தக் காரியங்களில் கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர். ஆகவே, உலகம் சுயநலவாதிகள் பெருத்த குப்பையாகிவிட்டது. தற்போது எவ்விடத்திலும் அமைதியும், சுபிட்சமும் தென்படாததின் காரணம் தன்னலமே. ஆகவே மக்கள் முக்கியமாகச் சிறுவர்கள், சிறு பருவத்திலிருந்தே பொதுநல நோக்கமுள்ளவர்களாயும், சமாதானப் பிரியர்களாயும் இருத்தல் அவசியம். நாடு செழிக்க, நாட்டில் பொதுநலவாதிகள் பெருகவேண்டும். மக்கள் மகிழ்வர், அப்பொழுதுதான் உண்மையான மக்கள் ஆட்சி (குடியரசு) நாட்டில் நிலவும். ஒவ்வொருவனும் தனது கடமையை உணர்ந்து ஆற்றுவராயின், நாட்டில் பஞ்சம், பசி, பட்டினி, பிணி இவையெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும். இவற்றிற்கெல்லாம் மேற்கோளாகப் பிற்கால பிரஜைகளான இளைஞர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். அதற்காக இளைஞர் நகரம் அவசியம் இந்தியாவின் பல இடங்களிலும் நிர்மாணிக்கப்படவேண்டும்.

இளைஞர்கள் தங்களைத் தாங்களே தற்காலத்தில் ஆண்டுகொள்கின்றனர். இதற்கென்றே அமெரிக்காவில் ஒரு நகரம் உள்ளது, இதனால் இளைஞர்களும் தங்களைத் தாங்களே ஆளமுடியும் என்று சங். பிளானகன் என்னும் சுவாமிகள் நிரூபித்துக் காட்டியுள்ளார். தமிழ் நாட்டில் பிறந்த நாம், அதாவது தமிழ் இளைஞர்கள் ஏன் அதைப் பின்பற்றிச் செய்யக்கூடாது? நடைமுறையில் அதைக் கொண்டுவரவேண்டுமானால், நாம்தான் முன் வந்து செய்யவேண்டும்; முடிக்கவேண்டும்.

இளைஞர்கள் நகரை முதன்முதலில் டிசம்பர் திங்கள் 12-ம் நாள், 1917-ம் ஆண்டில் சங். பிளானகன் அடிகள் அமெரிக்காவில் துவக்கினர். ஒரு காலத்தில், அமெரிக்காவில், ஏழைகள் தங்கள் மக்களை இளமையிலேயே ஊர் சுற்ற விட்டுவிட்டனர். இதனால் என்ன நடக்கிறது? அவர்கள் சகல துர்ப்பழக்கவழக்கங்களையும் கற்றுக்கொள்கின்றனர். அக்குடும்பங்கள் சீர்குலையவே, அச்சிறுவர்கள், கொலை, களவு முதலிய பாதகங்களில் ஈடுபட்டுத் தண்டனைக்கு ஆளாகின்றனர். இல்லையேல் திருத்தப்படும் இடத்திற்கு அனுப்பப்படுகின்றனர். சிறுவர்களுக்கு முக்கியமாக வேண்டியது அன்பு, ஆதரவு, இரக்கம். அன்பினால் எதையும் சாதிக்கலாம்; ஆதரவு நட்புக்கு வழியாகும்; இரக்கம் புகழ்ச்சிக்கு உரியது. இவற்றை ஆயுதங்களாகக் கொண்டுதான் சங். பிளானகன் அடிகள் சிறுவர்கட்கென்று ஓர் இல்லத்தைக் கட்டினர். அவரது முயற்சியால் வெற்றிமேல் வெற்றி கிடைத்தது. தர்மத்தின் மூலம் அவர் அந்த இல்லத்தை நடத்தி வந்தார். அவர் சிறுவர்களை, அன்பு, தனிக் கல்வி முறை, விளையாட்டுக்கள், தன் கடமை மனப்பான்மை, யாவரும் நல்லவர்கள் என்ற எண்ணம் ஆகிய இவற்றால், நன்முறையில் நடத்தி வரலானர். “உலகத்தில் கெட்ட பையன்களே இல்லை” என்பதுதான் அவரது விருது வாக்கு. (motto) இதனால், சின்னாட்களில் சிறுவர்கள் சகல துறைகளிலும் முன்னேறி நாட்டிற்கு நன்மையானவர்களாக, மாறினர். அதாவது, ஒருவன் நற்குடிமகனாக ஆகி பொதுநலத் தொண்டாற்றி, மக்களின் பேராதவரால், அவர்களை நீதியுடன் நடத்துவதற்கு அங்கு பயிற்றுவிக்கப் படுகிறது.

அங்குள்ள சகல காரியங்களும், சிறுவர்களால்தான் நடத்தப்படுகிறது. சகல நிர்வாகிகளும் அவர்களே. அங்கு ஓர் நகராண்

மைக் கழகம் உண்டு. அது தேர்தல் மூலம் அங்கத்தினர்களைப் பொறுக்கி எடுக்கும். அவர்களினின்று தலைவனும், கமிஷனரும், சேர்மனும், நியமிக்கப்படுவர். குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை கொடுக்க அங்கு மாணவர்களால் நியமிக்கப்பட்ட ஓர் நீதிபதியுண்டு. அவர்கள் இடும் தண்டனைகள் :

1. விளையாட்டு நிறுத்தம், 2. விருப்பம் நிறைவேருமை, 3. அதிக நேரப் படிப்பு இவைகளே. இதை நிறுவிய சங். பிளானகன் சுவாமியார் ஜெர்மனியின் நிலையை ஆராயச் சென்றபோது பெர்லினில் மே 15, 1948-ல் உயிர் நீத்தார். அவரது சடலம் இளைஞர்கள் நகருக்கு கொண்டுவரப்பட்டு மகா பூச்சிதத்தோடு, அடக்கம் செய்யப்பட்டது.

அவரது கல்லறையில் பொறிக்கப்பட்டிருக்கும் எழுத்துக்களாவன :—

✠

சங். பிளானகன் அடிகள்
இளைஞர்கள் நகரை நிருவியவர்.
கிறிஸ்துவையும் மனிதரையும்
நேசித்தவர்.
ஜூலை 13—1886, மே '5—1948.

ஓங்குக இளைஞர்கள் நகரங்கள்.

# பாட்டுக்கொரு கவிஞன்

P. M. ஜோசப், 6 அ.

பாட்டுக் கொருகவிஞன் பாரதியடா—அவன்
பாட்டுக்கள் பலபாடும் பாவலனடா.
ஏட்டைப் புரட்டிக்கவி பாடினனில்லை—இறை
ஈந்த அருளினலே பாடினனடா.

நாட்டுச் சுதந்திரத்தை நாடினனடா—நந்தம்
நாட்டுப்பெண் நிலையினை கூறினனடா—நந்தம்
வாட்டத்தைப் போக்கவழி காட்டினனடா—தமிழ்
கூட்டம் தலைநிமிர கூறினனடா.

கல்லாமை கண்டுமனம் நொந்தவனடா—மக்கள்
எல்லோரும் ஒன்றெனவே ஓதினனடா.
இல்லாமை யால்வருந்தி வாழ்ந்தவனடா—பாரில்
இல்லாதவர்க் கிரங்கும் இயல்பினனடா.

தமிழர்க்குத் தமிழுணர்ச்சி ஊட்டினனடா—அந்தத்
தமிழ்ப்பற்றுத் தான்கொண்டு திகழ்ந்தானடா.
தேசியக் கவிசுப்ர மணியனடா—அவன்
மாசில் பணியை நாடு மறவாதேயடா.

# MY PET

**Simon Rodrigo, V**


ONE day my father came home after his work, with a beautiful dog. It was given to my father by one of his friends. My father used to go to work at about 9 o'clock in the morning and come back late at night. I liked dogs very much; so I treated it as well as I could. The dog was black. So I called it Blackie. It was fat and short. It looked beautiful indeed.

The first day it looked very sad. It lay quiet in the garden. I gave it milk and biscuits; but it did not eat anything. Perhaps it was thinking about its mother throughout the day. By and by it forgot its mother and it was happy to live in our house.

I used to give it food only three times a day. I gave it biscuits, bones, meat and even soup. Besides I gave it a bath daily.

When there was no work I would play with it. If I threw a ball it used to run after it and bring it back in its mouth. Some times it would play alone with the ball. One day I took it with me to the sea-shore. It saw the sea and the rolling waves which came towards the shore. It was the first time Blackie saw the sea. It was frightened at the sight and ran home. I caught it and brought it back to the beach. Again and again it ran back. Soon it got over the fright. From that time I often went to the beach with the dog. It got accustomed to get into the water without any fear. On class days at the time of my leaving home for school it would accompany me to school and in the afternoon it used to come to the gate of the garden to receive me.

It was not only beautiful but also very clever. At night it used to roam about our garden and if it saw any stranger come, it would take the life out of him. One day a thief came into the garden and climbed upon the roof of our house to get into the house. When the dog saw the thief instead of barking, as other dogs would have done, it came to the front door and scratched the door till my father heard the noise and came out. He saw the dog which went before my father and came under a tree and looked at the roof. My father saw the thief and caught him. Thus our dog saved us from many a similar danger . . . No wonder that I considered Blackie as my pet, companion and friend.



உபாத்தியாயர்—டேய் ராமு. ரஸக்கலவை என்றால் என்ன? அதில் அடங்கிய பொருட்கள் எவை?

ராமு—ரஸக்கலவை என்றால் சாதத்திற்கு ஊற்றிக்கொள்ளும் ரசம். அதில் அடங்கிய பொருட்கள்; மிளகாய், புளி, உப்பு, எண்ணைவித்துக்கள்.

—A. ராஜு, 5. ஆ.

# உயிரைக் காத்த உத்தமி

S. ஜோசப் லூர்துராஜ், 6 ஆ.

**உ**லகத்தை இருள் மூடிக்கொண்டிருக்கும் நேரம், எங்கும் சுடுகாட்டு அமைதி. தென்றல் காற்று இனிமையாகச் சில் என்று வீசிக்கொண்டிருந்தது. கடற்கரையிலே சிறு அலைகள், கரையுடன் கொஞ்சி விளையாடி முத்தமிட்டுக்கொண்டிருந்தன. வானிலே, வைரக் கற்களை வாரி இறைத்தாற்போல் விண்மீன்கள் கண் சிமிட்டிக்காட்சி அளித்துக்கொண்டிருந்தன. அவைகளின் ஊடே வெண்ணிலா தன் குளுமை ஒளியைக் கொப்பளித்துக்கொண்டு அந்த நிர்மானுஷ்யமான வான வீதியிலே பவனி வந்துகொண்டிருந்தாள்.

திடீரெனக் கடலில் பெருங்கொந்தளிப்பு! கடற்காற்றின் கர்ணகடூரத்தால் கடல் நீர், திவலைகளாகச் சிதறி அடிக்கப்பட்டது. சூராவளியும் சுழன்றடிக்க ஆரம்பித்தது; மின்னல் வானைக் கிழித்துக் கொண்டு மின்னியது. இடி தன் பயங்கர கர்ஜனையை முழக்க ஆரம்பித்தது. வானமே பொத்துக் கொண்டதுபோல் மழை பெய்ய ஆரம்பித்தது. மழைத் தாரை ஒவ்வொன்றும் ஓர்வெள்ளிக் கம்பியைப்போல் காட்சி அளித்தது. இப்பொழுது கடல் நீர் மலை போல் எழுந்து மடுபோல் இறங்க ஆரம்பித்தது. கடற்கரை ஓரத்தில் ஆங்காங்கே உள்ள சிறு குடிசைகள் மின்னல் வெளிச்சத்திலே சிறு குன்றுகளைப்போல காட்சி அளித்தன. அக் குடிசைகளைச் சூறுவளி எப்போது தன் ஆருப் பசிக்கு ஆளாக்கலாம் என்று காத்துக்கொண்டிருந்ததோ தெரியவில்லை!......?




அச் செம்படவக் குடிசையிலே ஒன்று. அவ்வீட்டிலிருந்து அடிக்கொரு தடவை யாரோ விம்மும் சப்தம் அச் சந்தடியிலும் தெளிவாய் கேட்டது. அவ் வீட்டின் உள்ளே சூசையின் தாய் ஓர் மூலையிலே முடங்கிக்கிடந்தாள். அவள் பக்கத்திலே அவளுடைய கண்மணி சூசையும் படுத்துக் கொண்டிருந்தான். இருவரும் ஒட்டி உலர்ந்துகிடந்தனர். சாவு தன் கோரக் கரங்களை அவர்மீது நீட்ட முஸ்திப்புசெய்து கொண்டிருந்தது.

சூசையின் உலர்ந்துபோன உதடு "அம்மா குளிருது" என்று அசைந்தது. அவன் தாய் தனக்கு பக்கத்தில் இருந்த கந்தல் சீலையை எடுத்து அவன்மீது போத்திஞள்.

"அம்மா பசி தாங்கலம்மா"

"கொஞ்சம் பொறுத்துக்கடா, கண்ணு. சாயங்காலம்தான் கால்படி அரிசி சமைக்கலாம் என்று வாங்கிவந்தேன். ஆனால் அதை சமைக்க முடியாமல் பாழாய்ப்போன புயல் வந்து கெடுத்துவிட்டது. நான் பெத்த மாணிக்கமே கொஞ்சம் பொறுத்துக்கடா. புயலடிச்சு ஓஞ்சதும் கண்டிப்பா சமைத்துத்தரேன்" என்றுள் துக்கம் தொண்டையை அடைக்க.

"அப்பா வருவாராம்மா"?

"நிச்சயம் வருவாரு. உன்னை விட்டு தனியே ஒரு நிமிஷம் கூட இருக்கமாட்டாரு."

"போம்மா வெளியிலே ஓரே காத்தும் மழையுமா அடிக்கிது. இந்நேரத்திலே மீன் பிடிக்கப் போனுரு. கடல்ல என்ன பாடுபடுகிருரே?........."

"அப்படி எல்லாம் சொல்லாதேடா கண்ணு. ஆபத்தில் அபயமளிக்கும் அன்பு தாய் நமது வேளாங்கண்ணி மாதா இருக்க நம்ம அப்பாவுக்கு ஒரு குறையும் வராது நீ கொஞ்சம் நிம்மதியா தூங்குடா கண்ணு", என்றுள் சூசையின் தாய்.

சூசையும் தன் முழு நம்பிக்கையை அந்த அன்புத் தாய்மேல் வைத்துவிட்டு இலேசாக இமைகளை மூடினன். நேரம் ஆயிற்று. இரவும் மெல்ல, மெல்ல ஊர்ந்து சென்று

கொண்டிருந்தது. இயற்கையின் ஆவேசம் தணியவில்லை.

மறுநாள், வானத்தை பொத்துக்கொண்டு விடிவெள்ளி தோன்ற ஆரம்பித்தது. வெண்ணிலா மேகங்களுக்கிடையே மறைந்து, மறைந்து போய்க்கொண்டிருந்தது. நக்ஷத்திரங்களின் மங்கின வெளிச்சம் உறைந்த பனியைப்போல் அந்த மணல் பரப்பில் காட்சி அளித்துக்கொண்டிருந்தது.

வாதுகொண்டாம் வட்டாரத்தில் உள்ள செம்படவர்கள் தங்கள் வலையுடன் மீன் பிடிக்க மரக்கலமேறிச் சென்றார்கள். அன்றாடம் உழைத்து ஊதியம் பெறும் அச் செம்படவர்களுக்குத்தான் என்ன சந்தோஷம்!........

சூசை இன்னும் தூங்கிக்கொண்டு இருந்தான்......!

"டேய் சோம்பேறி எழுந்திரு இன்னும் என்ன தூக்கம்?"

"போம்மா...... தூக்கமா வருது" என்று புரண்டு படுத்தான்.

"டேய் சூசை! அதோ உங்கப்பா படகிலே வந்துகிட்டு இருக்காங்க. வா போய் பார்க்கலாம்".

"ஆ......! அப்பாவா?......" சூசைக்கு உலகமே சுழல்வதுபோல் இருந்தது. ஆனால் அதை சிறிது நேரத்திற்குள் சமாளித்துவிட்டான்.

"எங்கம்மா அப்பா?"

"அதோ பாரு," என்று கடலை சுட்டிக் காட்டினாள். ஆம்! கரையோரத்தில் ஓர் பாய்மரப் படகு அப்போதுதான் கரையோரம் வந்து நின்றது. அதிலிருந்து சூசையின் அப்பா வலைகளை கீழே வீசி எறிந்துகொண்டிருந்தார்.

சூசைக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அளவுகடந்த ஆனந்தத்தால் அவனது இருதயம் ஒரே தாவலில் வாய்க்கு வந்துவிடும்போல் இருந்தது. நெஞ்சைப் பிடித்துக்கொண்டு அப்பாவிடம் ஓடினான்.

அப்பா என்றலறி அவரை இருகக் கட்டிக்கொண்டான். சூசை தன் அப்பாவை தடவித் தடவிப் பார்த்தான். தன் அப்பா தான் என்று சந்தேகமில்லாமல் தெரிந்துவிட்டது. "வாங்கப்பா. அம்மா கூப்புடுறாங்க. வீட்டுக்கு போகலாம்."

அவரும் சூசையைத் தன் கரங்களில் தூக்கிக்கொண்டு வீட்டைநோக்கி நடந்தார். அவருடைய மனைவியும் தன் கணவனை அன்புடன் வரவேற்றாள். சிறிது கஞ்சி கொண்டுவந்து கொடுத்து தன் கணவனின் களைப்பைத் தீர்த்தாள்.

"ஏண்டா சூசை நான் திரும்பி வருவேன்னு நிச்சயமா ஒனக்கு தெரியுமோ?"

"பின்ன என்னுப்பா. கடலிலே திசை தவறியவர்களுக்கு வழிகாட்டி நம் மாதா இருக்க நாம் ஏனப்பா பயப்படணும்?"

"சூசை நாங்ககூட முதலில் நம்பிக்கையே இழந்துவிட்டோம். அப்புறம் திடீரென மாதாவின் ஞாபகம் வந்தது. கப்பலிலே இருக்கிறவங்களெல்லாம் முழங்காலிலே நின்று உருக்கமா வேண்டிகிட்டோம். எங்கள் உருக்கம் நிறைந்த மன்றாட்டு மாதாவை இரங்கும்படி செய்தது. அப்புறம் நாங்க பத்திரமா கரைவந்து சேர்ந்துவிட்டோம்."

அச்சமயம் மாதாகோவில் மணி பூசைக்கு நேரமாகிவிட்டது என்பதைத் தெரிவித்தது.

"அப்பா நம்ம மாதாவுக்கு மெழுகுவர்த்தியும் பூவும் வாங்கிவைக்கலாம்பா.....? ஆபத்தில் சிக்கியோர்க்கு அபயமளிக்கும் அன்பு தாய்க்கு, கஷ்டப்படுவோரின் கண்ணீரைத் துடைக்கவல்ல கன்னிமரிக்கு அந்த நன்றிகூட நாம் செலுத்தாவிட்டால் அப்புறம் என்ன?"

"சரி சூசை, பூசைக்கு நேரமாச்சு வா சீக்கிரம்" என்று சூசையை அழைத்துச் சென்றார் அவன் அப்பா.

அவர்களை வரவேற்பதுபோல் மாதா கோவில் மணி ஒலித்துக்கொண்டிருந்தது... .........?.........!


# மின்சாரம்

T. ஜோசப், 5 ஆ.

தற்கால உலகில் மின்சார உதவியின்றி மக்கள் யாதொரு சௌகரியமும் பெற இயலாது. விளக்குகள் எரியவும், விசிறிகள் சுழலவும், யந்திரங்கள் இயங்கவும், ரேடியோக்கள் பாடவும் செய்வது மின்சார சக்தியே. மனித பலத்தால் செய்யமுடியாத காரியங்கள் மின்சார சக்தியால் எளிதில் முடிகின்றன. நவீன நாகரீகத்துக்கு அடிப்படை மின்சார சக்தியே என்றால் மிகையாகாது. மேனாடுகள் முன்னேற்றமடைந்ததற்கு காரணம் நீராவி இயந்திரங்களும் அவைகளின் உற்பத்தி சக்தியுமாம். அதன் பின்னர் மின்சாரம் அந்நாடுகளைப் பல துறைகளிலும் உயர்த்தி விட்டது.

நம் ஊரில் (திருச்சிராப்பள்ளி) நாம் நமக்குவேண்டிய மின்சாரத்தை "தென் மதறாஸ் எலக்டிரிக் ஸப்ளை கார்ப்பொரேஷன்" இடமிருந்து பெற்றுக்கொள்கின்றோம். இக் கம்பெனியை பலபேர் பங்குகள் போட்டு நடத்திவருகின்றனர். இதனுடைய மூலதனம் சுமார் 1½ கோடி ரூபாய். இக்கம்பெனியால் 39,686 பேர் மின்சாரவசதி பெறுகின்றனர். இக்கம்பேனி ஜனங்களிடமிருந்து வசூலிக்கும் தொகை வருடத்திற்கு சுமார் 37 லக்ஷம் ரூபாய். இக்கம்பெனி விநியோகம் செய்யும் மின்சாரம் 15,235 கிலோவாட் (K. W.) மக்களால் வருடத்திற்கு உபயோகப்படுத்தப் படும் யூனிட்கள் 638·5 லக்ஷம். சர்க்கார் அநேக கம்பேனிகளை தேசிய மயமாக்கி விட்டனர். தேசீய மயமாக்கப்போகும் கம்பேனியில் நமது தென் மதறாஸ் எலெக்டிரிக் ஸப்ளை கார்ப்பொரேஷனும் ஒன்று.

தற்பொழுது சென்னை ராஜ்யத்தில் பைகாரா, மேட்டூர், பாபநாசம் என்ற மூன்று மின்சார உற்பத்தி நிலையங்கள் உள்ளன. இவை தண்ணீர் சக்தியைக்கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்கின்றன. இவைகளுக்கு "ஹைட்ரோ மின்சாரசக்தி நிலையங்கள்" (Hydro Electric Power Station) என்று பெயர். மேலும் சென்னை மின்சார உற்பத்தி நிலையம், நெல்லூர், சமயநல்லூர், மற்றும் பல உப நிலையங்களும் உள. மொத்தம் சென்னை ராஜ்யத்தில் 7500 மைல் நீளம் மின்சார விநியோக கம்பிகள் அமைத்திருக்கின்றனர்.



பைக்காரா திட்டத்தின் மூலம் 42,000 (K. W.) கிலோவாட் மின்சாரசக்தி கிடைக்கின்றது. அத்துடன் மோயாற்றையும் இணைத்தால் 1,00,000 (K. W.) கிலோவாட் மின்சாரம் அதிகம்கிடைக்கும். நம்முடைய சென்னை ராஜ்யத்தில் 1600-க்கு மேற்பட்ட கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கப் பட்டிருக்கிறது. சென்னை ராஜ்யத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தில் 80 சதவீதம் கைத்தொழிலுக்கும், விவசாயத்திற்கும் உபயோகப்படுகின்றது. விவசாய சம்பந்தமாய் சென்னை ராஜ்யத்தில் சுமார் 17,000 பம்பு செட்டுகளுக்கு மின்சாரசக்தி அளிக்கப் படுகிறது.

வானிலுள்ள நட்சத்திரங்களை எண்ணினாலும் எண்ணிவிடலாம், ஆனால் மின்சாரத்தின் உபயோகத்தை கணக்கிட்டுச் சொல்ல முடியாது. மின்சாரத்தை உபயோகித்து பஞ்சாலைகள், சிமெண்டு தொழிற்சாலைகள் ரயில்வே தொழிற்சாலைகள், கப்பல் கட்டும் தொழிற்சாலைகள், முதலியவை இயங்குகின்றன. மின்சாரம் இல்லாவிடில் இன்றுள்ள நவீன கருவிகளாகிய ஆகாயவிமானம், டெலிபோன், வானொலி, சினிமா காட்சி இவைகளை நாம் கண்ணால் பார்க்க முடியுமா? இதனுடைய உபயோகத்தை சுருங்கக்கூறின் "ஆகாயத்திலே பறப்பது முதல் அடுப்பு புகைகின்றதுவரை" மின்சார சக்தியினாலேயே ஆகின்றது.

மின்சாரத்தின் தீமையை நோக்குமிடத்து மின்சாரமில்லாமல் நாம் நம்முடைய வாழ்க்கையை நடத்தமுடியாதா என்று பலர் வினவக்கூடும். நெருப்பு நமக்கு சில சமயத்தில் தீமையை விளைவிக்கிறதே என்று நெருப்பை உபயோகிக்காமல் இருக்க முடியுமா? இரண்டாம் உலக மகாயுத்தம் முடிந்ததற்கு ஒரு காரணம் மின்சாரமே எனலாம். ஏனெனில் விஞ்ஞான வளர்ச்சியானது அமெரிக்கர்களை அணுகுண்டிலே வந்து நிறுத்திற்று. அந்த அணுகுண்டை இயங்கச் செய்வது மின்சாரமே. தீமையை சுருங்கக் கூறினால் பிற்காலத்தில் உலகம் அழிவதற்கு மின்சாரம்தான் காரணமாயிருக்கும்போல் தோன்றுகிறது. அது அவ்விதமே இருந்தாலும் நாம் மின்சாரத்தை நல்வழியிலேயே உபயோகப்படுத்த முயற்சிக்கவேண்டும் என்பது என் அவா.

அணுவிலிருந்து மின்சாரத்தை தயாரிக்க அமெரிக்கர்கள் முயற்சி செய்துவருகின்றனர். இதனால் இன்னும் மின்விளக்குகள் ஏற்றப்படாத கிராமங்கள் இம்முயற்சி வெற்றிபெற்றவுடன் ஜெகஜோதியாய் திகழுமென்பதில் சற்றேனும் ஐயமில்லை.

மின்சார சக்தியை மக்களின் க்ஷேம நலத்துக்கும், இதர அபிவிருத்திகளுக்கும் தக்கபடி பயன்படுத்த மக்கள் சர்க்கார் ஏற்பாடு செய்துள்ளனர். மேலும் நமது சர்க்கார் மின்சக்தியை பெருக்குவதில் அதிக கவனம் செலுத்திவருகின்றனர். முன்னேற்ற பாதையில் செல்லவேண்டுமானால் நாமும் அன்றாட வாழ்க்கைக்கு மின்சாரத்தை உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

# நாயனர்

**M. ஜெயராஜ்**

இமிழ்கடல் வேலித் தமிழக மதனில்
ஆதி பகவன் அன்பினில் தோன்றி
அமிழ்தினு மினிதாய் அள்ளிப் பருக
அருந்தமிழ்த் தேனால் திருக்குறள் பனுவல்
நயமுடன் யாத்து நந்தமிழ்த் தாய்க்கு
என்றும் குன்ற இன்னிசை பரவ
இன்புடன் நல்கினர் அன்புறு நாயனர்
செந்தமிழ் வளர்த்த எந்தம் பாண்டியநாட்
டரசன தவையில் அமைச்சரா யிருந்து
தாய்நாட் டிற்கே தனிவழி காட்டினன்
நெய்யுந் தொழிலை வையகத் தியற்றி
பொய்யுடல் ஒரீஇப் புகழுடல் எய்திய
பொய்யில் புலவனெம் ஐயனே என்று
வையகம் போற்றும் வள்ளுவர் வாழ்கவே.

# God's Country *Vs.* Man's Town

**I. Marcel,** VI

PERHAPS most people consider country life to be more pleasant than town life. India is a land more of villages than of towns. The wide open space all round you in the country gives you a sense of freedom, which you often miss in a town. There are pleasant walks, perhaps by streams and tanks and shady places where you can rest when you are tired. As you sit in the shade listening to the music of the birds and the song of men at work in the fields you feel as if you were in another world. In the country one can admire the beauty of God's creation in its virginity. It is there that man respects the dignity of labour and is not ashamed to earn his daily bread by the sweat of his brow.

Though many of the houses in villages are built close together, there are others which stand in their own grounds. Perhaps in cool coconut groves or in gardens where the sweet aroma of flowers comes to you floating on the breeze. In the country, man is satisfied with an average of food and clothing and thus he is able to live on what he earns.

Now Let us consider the advantages of town life. The great advantage is that you keep in touch with the outside world more easily in a town than in a village. There is the newspaper to keep you informed of what is going on in other places, and there are men who have travelled, and who can tell you about other countries and their people. There are big shops where you can get whatever you want. There are good schools and of course there are post and telegraph offices. For the sick, there are hospitals, where the poor can get medicine and the attention of specialized doctors free. There is generally a good water supply; the streets are well lit and kept clean, and it is easy to get about from place to place in buses or trams. All this is very different from the country, where you often feel cut off from the rest of the world.

Though there are some advantages of town life, in the long run country life perhaps may be better. In the town one can frequently spoil one's health due to the stuffy atmosphere and the heat. In the town the beauty of nature which God has created is destroyed and everything is artificial and all the work is done mechanically. In towns very often epidemics like cholera, plague, break out and hundreds of people perish in it.

Besides this, man wastes his money in order to move with the tide of fashion, in cinemas, entertainments, dances and luxurious hotels etc. Thus the standard of living is above his income. What wonder is there, then, if the masses of India are still poor, badly fed and clothed? By means of all these comforts, man becomes lazy, unwilling to work; but he needs money for his luxurious life. The only way open to him is to get money from other unlawful means.

The town has its own advantages but perhaps more disadvantages than the country. Of course it is for individuals to decide which suits them best. I for one would never exchange my sweet home in the country for anything in the town.

God made the Country, Man made the Town.

# கோவைச் செலவு

S. சந்திரன், I U.C.
P. M. தேவதாசன், I U.C. } பழைய மாணவர்கள்

### கனவும் நனவும்!




**கார்த்திகைத்** திங்களிலே ஓர் நாள். எங்கள் வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள். பூரிப்பு ஊறிப்போன எங்கள் உள்ளத்திலே களிப்பு வெள்ளம் அலைமோதிக் கொண்டிருந்தது. தேர்வு எழுதி, எழுதி, சோர்ந்துபோன எங்கள் நரம்புகளிலே புத்துணர்ச்சி ஊற்றெடுக்க ஆரம்பித்துவிட்டது. எதிர்கால இன்ப நினைவுகள் மனக்கண்முன் நர்த்தனமாடின. முயற்சியால் உயர்ச்சியடையும் தனி மனிதனின் இன்ப வாழ்விலே மண்ணை வாரிப் போட்டு, அவர்களின் கண்ணீரைக் கண்டு கைகொட்டிச் சிரித்து, துன்பத்திலே பங்கு கொள்வதாக பாசாங்கு செய்து நீலிக் கண்ணீர் வடிக்கும் இச்சமுதாயம்போல, இயற்கையன்னை எங்கள் இன்பத்தைக் கண்டு இறுமாப்படைந்தாள். பொறுமை கொண்ட அவள் புயலை ஏவினாள். புறங்காட்டி ஓடவில்லை. செங்குட்டுவன் மரபில் செறிந்திலங்கிய வீரர்களல்லவா நாங்கள்? எதிர்த்து நின்று வெற்றி கண்டோம். புயலுக்குப் பின் புனிதத் தென்றல் வீசியது. தேர்வு எங்களுக்குத் தெவிட்டாத் தெள்ளமுதாகத்தான் இருந்தது. எல்லாம் முடிந்துவிட்டது. உணர்ச்சி உந்த, அந்த நாள் வராதோ என ஆவலோடு காத்திருந்தோம். இதோ அதுவும் வந்துவிட்டது. குறிப்பாக கோவை செல்லப்போகும் நாங்கள் "கொடுத்து வைத்தவர்கள்" என்று சொல்லவும் வேண்டுமோ?

குறித்த நாளிலே கூட்டம் கூட்டப்பட்டது. திட்டங்கள் பல உருவாயின. புறப்படவேண்டிய நாளும் வரையறுக்கப்பட்டது. கனவு நனவாகப் போகும் எங்கள் இளம் உள்ளங்களிலே மகிழ்ச்சி மதுக்குடமெனப் பொங்கியது.

'பெரியாரைத் துணைக்கோடல்' என்ற வள்ளுவன் வாக்கொப்ப விடுதி விசாரிக்கும் தலைமைத் தம்பியடிகள், மதிப்பிற்குரிய மரியநாயகமடிகள், உடற்பயிற்சி ஆசிரியர் சூசைநாதன் ஆகிய இம்மூவரின் துணை கொண்டு 13 பேர்களடங்கிய எங்கள் கும்பல் கோவை செல்வதாகத் தீர்மானிக்கப்பட்டது. தேர்வு முடிந்த அந்த மாலையே எங்கள் பிரயாணத்துக்குத் தேவையான சாமான்களை பாரதிதாசனின் பாடலை நினைவுகொண்டு சரிப்படுத்திக்கொண்டோம்.

### பிரிவும் பரிவும்

இரவு 9 மணிக்கெல்லாம் தாயைப் பிரிந்த சேய்போல இவ்விடம் விட்டு திரிசிரபுரம் சந்திப்பையடைந்து தாக சாந்தி செய்து கொண்டோம்.



சென்னை செல்லும் வண்டி, சிறகு முளைத்த சிட்டுக் குருவி கூட்டை விட்டு பறக்க முயற்சி செய்வதைப்போல், புறப்படும் சமயத்திலிருந்தது. எங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட கூண்டுகளிலே நாங்கள் ஏறிக் கொண்டோம். "திருடர்கள் ஜாக்கிரதை" என்ற விளம்பரத்தைப்பார்த்த எங்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது. பழங்காலத் தமிழகத்தின் சிறப்பும், இன்றுள்ள சீர்கேடும் எங்கள் மனக்கண்முன் நின்று பழிப்பது போல் இருந்தது. ஆகவே முதற்கண் சாமான்களை வைக்கவேண்டிய இடங்களில் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டோம். வண்டி நகர்ந்தது. இரவு இதமாக இருந்தது. தென்றல் எங்களை தேறுதல் கூறுவது போன்று வருடிக்கொண்டிருந்தது. துயில் எங்களை தூண்டிய போதிலும், சூழ்நிலை எங்களை சூள்கொட்டி மகிழ்ச்சிக் கடலிலே

ஆழ்த்தியது. வானத்தின் மோனத்திலே எங்கள் கண்கள் லயித்திருந்தன. மேற்பரப்பிலே மின்னிக்கொண்டிருந்த நட்சத்திரக் கூட்டங்கள், போரில் வெற்றிகண்டு பரிமேலேறி ஊர்வரும் வீரனுக்கு மக்கள் வாண வெடிகள் விடுத்து வரவேற்பது போல எங்களை வரவேற்கும் நோக்குடன் விட்டு விட்டு பிரகாசித்துக்கொண்டிருந்தன. முகிலைக் கிழித்து முழுமதி கிளம்புவது போல வண்டி சென்னைநோக்கி சீறிக் கொண்டு சென்றது. இதற்கிடையே உள்ள இரவு சீட்டாடுதல், பாட்டுப் படித்தல், இன்னோரன்ன களியாட்டங்களில் கழிந்தது. விடிவெள்ளி முளைத்தது. வண்டி தாம்பரம் நிலையத்தில் வந்து நின்றது. சூரியனின் செங்கதிர்கள் எங்கள் முகத்திலே பொன் முலாம் பூசியது. சிறிது நேரத்துக்குப் பிறகு வண்டி அவ்விடம் விட்டு நகர்ந்தது.

சுயம்வர மண்டபத்தில் மணப்பெண், கூடியிருந்த அரசிளங் காளைகளை ஆண்டிகளென மதித்து, நாடி நின்ற மணாளனை தேடி, ஓடிச் செல்வதைப்போல எங்கள் வண்டி வழியிலேயுள்ள சிறு நிலையங்களை மதியாது தன் நோக்கமாகிய சென்னை நோக்கியே சென்றுகொண்டிருந்தது. பறந்தது என்றுகூட சொல்லலாம்.

## சென்னை நகரத்திலே !

வண்டி சென்னை நிலையத்தில் வந்து நின்றது. எங்களை வரவேற்கும் நோக்குடன் லொயோலா கல்லூரி உந்து வண்டி தயாராக இருந்தது. எல்லோரும் ஏறிக்கொண்டு கல்லூரியை அடைந்தோம். இரவு முழுதும் கண்ணயரா காரணத்தால் களைப்பு தட்டியது. விழிகள் கழிவிரக்கம் வேண்டியது' ஆனால், காரியத்தை முடிக்கும் கருத்துடையவர்கள், ஊண், உறக்கம் இவைகளைக் கவனியாது, காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வதுபோல வந்த காரியத்தின்மேல் கருத்தைச் செலுத்திக்கொண்டிருந்தனர்.




எங்கள் கூட்டத்திலே வந்தவர்களில் சிலர் சென்னைக்குப் புதிதாகையால் கண் விருந்துண்ண விரும்பினர். சென்னை, செழிப்பில்லா பூமியானாலும் சிறந்த நகரம் என்பது அங்குள்ள முக்கியத்துவங்களால் அறியலாம். காலையுண்டி உண்ட பிறகு சாவகாசமாக நகரைச் சுற்றினோம். சிறந்து விளங்கும் உயர்நீதிமன்றம், கலங்கரை விளக்கு, கத்தோலிக்கப் பொது மன்றம், ஜார்ஜ் கோட்டை, தாமஸ் மேற்றிராசனக் கோவில், மெரினா கடற்கரை இவைகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு குறிப்பெடுத்துக்கொண்டு இருப்பிடம் திரும்பினோம். இவ்விதமாக ஒரு நாளை சென்னை லொயோலா கல்லூரியில் செலவழித்தோம்.

அன்றிரவே, கல்லூரிக்கு நன்றியைத் தெரிவித்துவிட்டு பூனாவுக்குச் செல்லவிருக்கும் புகைவண்டியில் ஏறினோம். சென்னைக்கும் பூனாவுக்கும் வெகு தூரமாகையால் புகையை கக்கிக்கொண்டு வண்டி நகர ஆரம்பித்தது. இடைவெளிக் காட்சிகளை கண்குளிரப் பார்க்கமுடியாவிடினும் இயற்கையன்னை எங்கள் கண்களுக்கு விருந்தளிக்க சிறிது இரக்கம் காட்டினாள். புகைவண்டி ரெய்ச்சூரை நெருங்கிக்கொண்டிருந்தது. அதனருகே கட்டப்பட்டிருக்கும் கற்கோட்டை எங்கள் கவனத்தைக் கவர்ந்தது. பழங்காலத் தமிழ் மன்னர்களின் போர் வீரம் எங்கள் மனத் திரையிலே காட்சியளித்தது. பட்ட மரங்களையும் பாழடைந்த தோட்டங்களில் சீரழிந்து சிறகொடிந்து காய்ந்து கருகிக் கிடக்கும் நாட்டுப்புறங்களின் செடிகொடிகளைப்போலல்லாமல் கண்ணுக்கெட்டிய தூரம்வரை காட்சிவிருந்தாகத்தான் இருந்தது.

## பூனாவின் புதுமைகள் !

புகைவண்டி பூனாவில் வந்து நின்றது. கடந்த ஆண்டில் எங்கள் விடுதிகளை விசாரித்துவந்த சங். ஆன்செல்ம், தேவஸி அடிகள் எங்களை வரவேற்க வந்திருந்தனர். அவர்களுடன் சென்று வின்சென்ட் உயர்நிலைப் பள்ளியில் தங்கினோம். பூனாவிலே காணவேண்டிய விநோதங்கள் பல இருந்தன.

ஆனுல், குறிப்பாக ஒரு சில சரித்திரப் பிர சித்தி பெற்ற இடங்களைத்தான் எங்களால் காணமுடிந்தது. பூனுவுக்கு 40 மைல் (கல்) தொலைவிலுள்ள 'கார்லா' குகையைப் பார்க்கும் நோக்குடன் சென்ருேம். அதைப் பார்த்தவுடன் அஜந்தா குகை எங்களுக்கு ஞாபகத்தில் வந்தது. ஒரே கல்லால் கட்டப் பட்ட அக்குகையின் அமைப்பைப் பார்த்துத் தமிழர்களின் கைத்திறமையைக் கணிக்க முடிந்தது. முனிவர்கள் வதிந்த அக்குகை யினுள் ஒவ்வொருவருக்கும் தனியறை தடுக்கப்பட்டிருந்தன. எல்லோரும் ஒன்று கூடுவதற்கெனத் தனி இடம் ஒன்று அமைக் கப்பட்டிருந்தது. அம்மன்றத்தில் 500 பேர் அமர நன்ருக வசதியிருந்தது. தலைவர் அமருவதற்கென தனி மேடையும் இருந்தது. மற்றும் புதை சாக்கடை தங்கு தடையின்றி செல்ல வசதிகள் அமைக்கப்பட்டிருந்தன. கற்களில் செதுக்கப்பட்ட சிற்பங்கள் எங்கள் கருத்தைக் கவர்ந்தது. மற்றும் தேசீயப் படை ஸ்தாபனத்தைக் கண்டோம். இது ஆசியாவிலேயே சிறந்து விளங்குவது என் பதை அறிந்து, இறும்பூதெய்தினேம். மற்றும் இரசாயன ஆராய்ச்சி சாலைகளையும், ஆண்டுக்கொருமுறை சேசுவின் சேவைக் காக, அறிவு நிறையப்பெற்ற, பல குருக்களை அனுப்பும் தே நோபிலி கல்லூரியையும், அதன் கட்டிட அமைப்பையும் இமை கொட்டாது கண்டோம். கடைசியாக எங் களுக்கு உறு துணையாக இருந்து எங்கள் குறிப்புகளுக்கு மெருகேற்றித் தந்த சங். ஆன்செல்ம், தேவஸி, அடிகளுக்கு உள மார்ந்த நன்றியைத் தெரிவித்துவிட்டுப் பூனுவுக்கு எங்கள் புன்னகைப் பரிசளித்து பம்பாய் செல்லும் மின்சார வண்டியில் ஏறினேம்.



**பம்பாய்க் காட்சிகள்**

மின்சார வண்டி மலையைக் குடைந்த குறுகிய குகையினுள் வெகு வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. அருவி அல றல்போல் குரலெழுப்பி எங்களை மருளச் செய்தது. ஜன்னல்களில் தலையை நீட்டி இயற்கையன்னைக்கு எங்கள் முகத்தைக் காண்பித்தோம். பாறைகளினின்று அருவிய நீர்த்துளிகளும், அதனோடு கலந்த தென்ற லும் எங்களை முத்தமிடத் துணிந்தன. இடையே அகன்றும், ஆழ்ந்தும் காணப் பட்ட பள்ளத்தாக்குகள், அதைப் பழித்து அதன் அருகே வீறுடன் நிற்கும் குன்றுகள், உயர்ந்து, அடர்ந்து வளர்ந்திருந்த பசுமை படிந்ததுமான மரங்கள், அவைகளின்மேல் அன்பால் பிணைக்கப்பட்டுச் சுற்றிக் கிடந்த கொடிகள். இவைகளை வருணிக்க வார்த் தைகள் அகராதியிலேயே இல்லையெனலாம். மலைகளையும், பள்ளத்தாக்குகளையும் முக மூடிபோல் மறைத்துநின்ற மரங்களடர்ந்த காடுகள் கம்பளம் விரித்தாற்போன்றிருந் தது. அவைகளினூடே பூத்துக் குலுங்கிய மலர்கள் அக்கம்பளத்துக்குப் பூ வேலை செய்தது. மரங்களிலே மகிழ்ச்சியுடனும், சுறுசுறுப்புடனும் இங்கு மங்கும் குதித் தோடும் குரங்குகளின் கவலையற்ற இன்ப வாழ்வு எங்கள் சிந்தனையிலிருந்து இன்னும் சிறகடித்துக்கொண்டுதான் இருக்கின்றது.

நடுப்பகல், பைகுல்லா நிலையத்தில் இறங்கி னேம், பல ஆண்டுகள் பம்பாய் நகரைப் பற்றிப் படித்துப் படித்து, படம் போட்டுப் போட்டு, பைத்தியம பிடித்துப்போன எங் கள் கண்முன் பம்பாய் நகரம் நின்றது. கனவு நனவானதைக் கண்டு மனம் பூரித் தோம். அங்கிருந்து மரியன்னை உயர்நிலைப் பள்ளியை அடைந்தோம். சிறிதுபோழ்து களைப்பாறிவிட்டு நகரின் முக்கியமான இடங் களைக் காண்பதற்குத் துணையழைத்துச் சென்ருேம். அரபிக் கடலின் கரையிலே, வந்தாரை வாவென்றழைக்கும் பரந்த மனப் பான்மையுடன் உயர்ந்து விளங்கும் "இந்தி யாவின் வாயில்" (Gateway of India) தான் நாங்கள் முதற் கண்ட இன்பக் காட்சி. இது 1911-ம் ஆண்டு, ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும், அரசி மேரியும் இந்தியாவுக்கு வந்தகாலை

எழுப்பிய நினைவுச் சின்னம். சற்று தூரம் சென்ற பிறகு எங்கள் கண் புலனுக்கு இந்தியப் பிரசித்திபெற்ற தாஜ் மஹால் ஹோட்டல் காட்சியளித்தது. முதலில் தூரத்திலிருந்து பார்த்த நாங்கள் அதைப் பற்றிப் பலவாறாக எண்ணினோம்—சொல்லியும் கொண்டோம். இதில் எங்களுக்குள் தர்க்கம் யார் வெற்றி என்பதில். பக்கத்தில் சென்று ஹோட்டல் என்று அறிந்த நாங்கள் ஒருவரொருவரின் முகத்தை ஏறெடுத்துப் பார்க்காது தோல்வியின் அறிகுறியாகத் தொங்கப்போட்டுக்கொண்டோம். ஆனால் அம் மாபெரும் கட்டிடம் தான் பெற்ற வெற்றிக்காக எங்களைப் பார்த்து சிரிப்பது போன்று இருந்தது. அப்படியானால் அதன் சிறப்புபற்றி விவரிக்கவேண்டிய அவசியமில்லை எனலாம். எனினும் ஒரு உதாரணம். தென்னிந்தியாவில் இரண்டணாவுக்கு விற்கும் காப்பி ஆங்கு 8 அணா!

அடுத்து 84000 ச.கெ. பரப்பளவுகொண்டு 40,000 மக்களைத் தன்னகத்தேகொள்ளக் கூடிய உலகில் சிறந்தவைகளில் ஒன்றான "Brabourne Stadium" என்ற விளையாட்டு மைதானத்தைக் கண்டோம். அதன்பின் மலபார் குன்றுகள் (Malabar Hills) மேலுள்ள தொங்கும் பூங்காவைப் பார்வையிட்டோம். அதன் மேற்பரப்பிலிருந்து பம்பாயின் பறவைக் கண்காட்சியைக் (Bird's eye-view) கண்டோம். அங்கிருந்து "மெட்ரோ" படக்காட்சி மன்றத்துக்குச் சென்றோம். "Quo Vadis" என்ற 90,000 டாலர்களில் தயாரிக்கப்பட்ட அதி உன்னதப் படம் எங்கள் கண்களுக்கு மாத்திரமல்ல, கருத்துக்கும் விருந்தளித்தது. அப்படம் ஈண்டுவரின் கண்டுகளியுங்கள்.

மறுநாள் பம்பாய் "விக்டோரியா டெர்மினஸ்" புகைவண்டி நிலையத்தைப் பார்வையிட்டோம். எதிரில் பம்பாயின் நகராண்மைக் கழகக் கட்டிடம் (Municipal buildings) நடுவே 255 அடி உயரமுள்ள கோபுரத்துடன் காட்சியளித்தது. அதன்பிறகு பழங்காலச் சின்னங்களை பாதுகாத்து வைத்திருக்கும் "Prince of Wales" பொருட் காட்சி சாலையைப் பார்வையிட்டோம். குறிப்பாக அங்குள்ள தமிழ் எழுத்துக்கள் கொண்ட "மூதாதையர் காலம் காட்டும் கருவி" (Grandfather's clock) பண்டைத் தமிழன் சிறப்பைக் பளிங்கெனக் காட்டியது. அதன் பிறகு நாங்கள் கண்டது 8,90,904 ரூ. செலவில் கட்டப்பட்ட மீன் காட்சிசாலை மற்றும் சென்னை மூர்மார்க்கட்டையொத்த "Crawford Market" உலகிலுள்ள எல்லாப் பொருட்களையும் தன்னகத்தேகொண்டு வழங்கிக்கொண்டிருப்பதைக் கண்டோம். இரவில் எல்லோரும் கூடுமிடமாகிய, அழகிய அமைப்பைக்கொண்ட மெரினா கடற்கரையைக் கண்டோம். நெருங்கிய மின் விளங்குகளை மருங்கிலேகொண்டிருந்த அக்காட்சி, தெம்ஸ் நதிக்கரையில் லண்டன் மாநகரம் இருப்பதை நினைப்பூட்டியது.

இதைத் தவிர, உயர்ந்த கைக்கெடிகார கம்பெனிகள், மேற்றிராசனக் கோவில், அகன்ற தெருக்கள் அதன் மருங்கே அழகாகவும், ஒழுங்காகவும் அமைந்திருக்கும் கடைகள், "Times of India" அச்சகம், இன்னோரன்ன காட்சிகளையும் கண்டோம்.


பம்பாய் தென்னிந்தியர் பழக்கவழக்கத்தை ஒத்திருந்ததாயினும் பசியால் பதறித் துடித்தழும் காட்சியை இங்குபோல் அங்கு காணமுடியாது. ஆனால் பாக்கட்டடிக்கும் போக்கிரிகள் பலருண்டு. உழைப்பாளிகள் என்றால் வாழமுடியாதவர்கள் என நாம் எண்ணுவதுபோலல்லாமல் ஆங்குள்ளோர் ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபட்டிருப்பார். இங்கு பட்டினிப் பட்டாளங்களின் துடிக்கும் குரல், அங்குத் தொழிலாளிகளின் உரிமைக் குரல், பணக்காரர்கள் அதிகமுண்டு. அதனுடன் இனப்பற்றும் உண்டும். நம் நாட்டைப்போல் இனப்பற்றின்றி உணர்ச்சியற்றுக் கிடக்கும் பிண்டங்கள் அல்ல அவர்கள். மொழியிலே வேறுபாடு. பணமிருந்தால் பம்பாயில் வாழமுடியும். ஆனால், நாம் நம் தாய்நாட்டை—தென்னாட்டை—பிறந்த பொன்னாட்டை புகழ்ந்துகொள்கின்றோம்.

## புனிதபூமி கோவா

கார்த்திகை 17-ம் நாள் பம்பாய் துறைமுகத்தை அடைந்தோம். எங்களைத் தாங்கி

செல்லுவதற்காக அந்தோணியார் கலம் தயாராக இருந்தது. இதுவரை இன்பக் காட்சிகளைப்பற்றி கனவுகண்டுகொண்டிருந்த எங்கள் மனதில் புனிதத் தன்மை புகுந்துகொண்டது. யாவரும் யாத்திரிகர்களாக மாறிவிட்டோம்.

எங்களுள் பலருக்கு கப்பல் பிரயாணம் புதிதாகையால் மயக்கம், வாந்தி, இவைகள் கண்டன. எனினும் விரைவில் சுகம் பெற்றனர். அந்திப்பொழுதில், அரபிக் கடலில், ஆதவன் அளித்த தோற்றம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. கடல் அன்னை ஆதவனை அணைத்துக் கொண்டிருந்தாள். சூரியன் மறைந்தான். அதை ஈடு செய்ய மதி தோன்றினன். நட்சத்திரக் கூட்டங்கள் அதற்குக் கோலமிட்டன. இவ்வியற்கை யழகை வருணிக்க கற்பனைக் கவிஞன் கம்பன்தான் வரவேண்டும். நீல வானுக்கடியில் மின்னும் நிலவொளியில் கலம் எங்களைத் தொட்டியில் போட்டு ஆராரோ பாடி தாலாட்டுவதுபோல் இருந்தது. இதுவரை உறங்கிக்கிடந்த எங்கள் கற்பனை உள்ளம் உணர்ச்சிபெற்று ஏதேதோ முணகிக்கொண்டது.



கார்த்திகை பதினெட்டாம் நாள் வெள்ளி முளைத்தது. பகலவனின் பொற்கிரணங்கள் பூமிக்குப் பொன்மெருகு கொடுத்தது. கலம் கோவாவை நெருங்கிக்கொண்டிருந்தது. அந்நாட்டின் கடற்கரைக் காட்சி எங்களுக்கு தென்னாட்டில் மலையாளக் கடற்கரைக் காட்சியை நினைவூட்டியது. கலம் "பஞ்சிம்" துறையை அடைந்தது. சரியாக மணி 7 இருக்கும். நாங்கள் யாவரும் சவேரியாரின் புண்ணிய பூமியில் பாதங்களை வைத்தோம். எங்களுக்கு என்றுமில்லாத ஒரு இன்பம் சூழ்ந்துகொண்டது. இந்தியாவில் வந்து சத்திய மறையைப் போதித்து, இம் மண்ணுலகை நீத்து, நானூறு ஆண்டுகளாகியும் அழியாமலிருக்கும் அப் புண்ணியரின் புனித உடலைப் பல்லாயிரக் கணக்கான அகில உலக மக்களிடையே கண்டோம். எங்களிடையே புதுமை குடிகொண்டது. இச் சந்தர்ப்பத்தை அளித்த இறைவனுக்கு மனமார்ந்த நன்றியைச் செலுத்தி அப்பேறு கிட்டாத ஆயிரமாயிர மக்களுக்காகப் பிரார்த்தித்தோம்.

அன்று மாலையே கோவாவுக்கு எங்கள் வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு மனமில்லாமல் மர்மகோவாவை அடைந்தோம். புண்ணிய நாட்டைவிட்டு போகின்றோமே எனப் புண்பட்டது எங்கள் உள்ளம். அன்றிரவு மர்மகோவா புகைவண்டி நிலையில் பொழுதைக் கழித்துவிட்டு மறுநாள் காலை, 19-ம் நாள் ஹூப்ளி செல்லப் புறப்பட்டோம். வழியிலே பூனாவுக்கும் பம்பாய்க்குமிடையே கண்ட காட்சிகளை ஒத்தவிதமாய் இங்கும் கண்டோம். 27 கற்குகைகளைக் கடக்கவேண்டியிருந்தது. அவைகளில் சில 2, 3 மைல் தூரமுள்ளதாய் இருந்தன. அவைகளிடமிருந்து விழுந்த அருவி எங்கள் மனத்தை மருவிநின்றது. அருவி விழும் தோற்றம் "பாலாவியன்ன ஆடை" போன்று இருந்தது.

மாலை ஐந்துமணி இருக்கும். எங்களை சுமந்துவந்த வண்டி ஹூப்ளியில் எங்களை இறக்கியது. சிறிதுநேரம் அவ்வூரைச் சுற்றிப்பார்த்தோம். அன்றிரவு வண்டியைத் தவறவிட்டதால், 20-ம் நாள் மைசூருக்குப் புறப்பட்டோம். ஒரு நாள் செலவிற்குப் பின் 21-ம் நாள் காலை மைசூரையடைந்தோம்.

**மைசூரின் மகிமைகள்!**

மைசூரில் நாங்கள் சாமுண்டேஸ்வரி பவனில் தங்கினோம். பிறகு அர்ச். பிலோமினம்மாள் கோவிலுக்குச் சென்றோம்.



அதன்பிறகு சாமுண்டேஸ்வரி மலையின் உச்சிக்கு, ஊர்தி எங்களை இட்டுச்சென்றது.

மலையின்மேல் இருந்த கோவிலைச் சுற்றி மின் விளக்குகளும் கோவிலின் வெள்ளிக் கதவுகளும் எங்கள் கவனத்தை காந்த மாக்கியதில் ஆச்சரியமில்லை. அங்கே அமைந் திருக்கும் மைசூர் மன்னனின் கோடைகால அரண்மனையையும், பார்வையிட்டோம். மலையைவிட்டு இறங்கியவுடன் மன்னனின் மற்றொரு அரண்மனையையும் தற்போது இருக்கும் ஆடம்பரமும், அழகும் பொருந்திய மனையையும் கண்ட எங்கள் கண்களின்முன் சரித்திர வரலாற்றின் சாயை படிந்தது. இவைகளிலிருந்து பழங்கால மன்னர்களின் ஆடம்பர வாழ்க்கையை ஊகித்துக்கொண் டோம். அடுத்தபடியாக, மிருகக் காட்சி சாலைக்குச் சென்று பலவித மிருகங்களைக் கண்டு எங்கள் புகைப்படக் (photo) கூண் டிற்குள் அடைத்துக்கொண்டோம்.

இரவு வந்தது. பிருந்தாவனம் விருந் தளிக்க பாவுறும் அன்பால் எங்களை வர வழைத்தது. பல நிறமுள்ள செயற்கை நீர்ச்சுனைகளுடனும் (Fountains) மின் விளக்குகளால் மெருகேற்றப்பட்டிருந்த கட்டிடங்களும், சுனையிலே மின்னொளி பட்டதும், அதனூடே எழும் வானவில் போன்ற தோற்றமும், பூலோக மோட்ச மென Paradise on Earth) இருந்தது. மூன்றுமணி நேரத்துக்குப் பிறகு அந்த இன்பப் பூங்காவுக்கு இறுதிப் புன்னகை தோய்ந்த புன்சிரிப்பு காட்டி சாயூண்டீஸ்வரி பவனுக்கு வந்தோம். அப்போதும் நினைத் தேன், இப்போதும் நினைக்கின்றேன் ஒவ் வொருவரும் அதைக் காணவேண்டுமென்று.

## ஏமாற்றம் கலந்த இன்பம்

மறுநாள் மாலை பங்களூரையடைந்தோம். சேசுபாலன் பிறந்த பொன்னுள் அண்மை யில் வந்ததால் நாங்கள் அந்நகரில் தங்க முடியவில்லை. மூன்றுமணிநேர பார்வைக் குப் பின் திருச்சி செல்லும் வண்டியில், அன்றிரவு ஏறினோம். வழியிலே சில நண்பர்கள் தங்கள் தங்கள் இல்லத்திற் கேகினர். கூட்டம் கரைந்துகொண்டே வந்தது. மிகுந்தவர்கள் 23-ம் நாள் காலை திருச்சி கோட்டை நிலையத்தையடைந் தோம். எங்கள் பாதங்கள் இத் தியாக பூமியில் பட்டது. எங்கள் இன்பச் செலவு இறுதியுற்றது.

எனினும் யாம் கண்ட அக்காட்சி இன்பங் களை நினையும்தோறும் எங்கள் உள்ளத்தில் தேன் சுரப்பதுபோன்ற உணர்ச்சி. கேட்பவர்களுக்கெல்லாம் சலிக்காமல் சொல்லிக்கொண்டிருந்தாலும், அவர்கள் ரசிக்க முடியவில்லையே என்றதொரு குறை எங்களைத் துன்புறுத்தியது. பம்பாயின் அமைப்பும், மைசூரின் மகிமையும், கோவா வின் காட்சியும் பூனாவின் புதுமையும் இன்றல்ல என்றுமே எங்கள் மனக் கண்ணை விட்டு மறையாது.

கடைசியாக இச் செலவிற்கு உறுதுணை நின்று எங்களை ஊக்குவித்த சங். தம்பியடி களுக்கும், சங். மரியநாயகமடிகளுக்கும், திரு. சூசைநாதனுக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றி.



# பெற்ற மனம்

அ. தாவீது நாதன் 5 அ.

1. ஐந்தாறு முறையளவாய்
தந்தையிட்ட சொல்மறுத்தும்
தாய் மறைந்த துயர் மறைக்க
தகப்பனது பொறுமைக்குந்தான்

2. முடிவுமொன்று உண்டென்று
அறியாத அச்சிறுவன்
ஏழாவது கட்டளைக்கும்
மாற்றமொன்று கூறிவிட்டான்.

3. சீறிவரும் நாகம்போல
சினத்துடனே அத்தகப்பன்
வசைமாரி பல பொழிந்து
நசையின்றி அடித்துவிட்டான்.

4. அன்புமுத்தம் ஒன்றுமின்றி
அனுப்பிட்டான் அம்மகவை.
கதியிழந்த சேயவனும்
அங்கிருந்து நீங்கிவிட்டான்.

5. ஒருசிறிது நேரத்தில்
வருத்தம் மிக மேலிட்டு
தவச் சேயைக் காணுதற்குச்
சென்றிட்டான் அத்தகப்பன்.

6. வசைபெற்ற அச்சிறுவன்
வருத்தம் நிறை தன்னிதயம்
ஒரு சிறிது நீங்கிவிட
கற்களையும் மணிகளையும்

7. இன்னும் சில பொருட்களையும்
தன்னருகி லுற வமைத்து
நல்லுறக்கம் கொள்வதையும்
நற்றுகப் பார்த்துவிட்டான்.

8. அதன்பின்னர் அக்கோமான்
அன்பு மே லிட்டதனால்
அருள் முத்தம் தந்திட்டான்
அருங் கண்ணீர் துடைத்திட்டான்.

9. அத்தகப்பன் தன் செபத்தில்,
“ அருள்நீதி நிறை இறையே
நானும் ஓர் தந்தை ; ஆயின்
தந்தையில் தந்தையாவீர்.

10. மரித்திடும் தருணமதில்
மன்னவா நின்மனதை
நோகவே முடியாது. அந்
நிலைமைதனில் நினைத்திடுவாய்.

11. மண்ணினின் றெழுப்பப்பட்ட
மனிதர்யாம் இவ்வுலகில்
அன்புநிறை உன்பணியை
அறிந்திட்டோம் குறைவுடனே.

12. குழந்தைபோல் பதுமைகளில்
குலவின்பம் காண்பதேன
நின்கோபம் தான்விடுத்து
நின்மலனே மன்னிப்பாய்.”



# கொய்னா

**A. லூயிஸ், 4 ஆ.**

1638-ம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள பெரு நாட்டின் பிரதிநிதியினுடைய மாளிகையில் ஒரு நாள். எல்லோருடைய முகத்திலும் சோகம் தாண்டவமாடுகிறது. ஒரு படுக்கையைச் சுற்றி பல வைத்தியர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக்கொண்டிருக்கின்றனர். இச்சமயத்தில் அறையின் வெளியே ஒரு அநாகரிகமான மனிதனுக்கும் அந்நாட்டின் பிரதிநிதிக்கும் தர்க்கம் நடக்கிறது. அந்த மனிதன் பல வைத்தியர்களால் கைவிடப்பட்ட அந்த சீமாட்டியைத் தான் குணப்படுத்துவதாக கூறுகிறான். அதற்கு அப் பிரபு தன்னுடைய மனைவிக்கு அவன் கொடுக்கும் மருந்தால் ஏதாவது ஆபத்து நேர்ந்தால் அவனை சித்திர வதை செய்வதாக பயமுறுத்துகிறார். அவன் அதற்கெல்லாம் பயப்படவில்லை. அவன் கொடுக்கப்போகும் மருந்து வெகுகாலமாக கைகண்ட மருந்து. ஜுரம் கண்டவர்களுக்கு அம் மருந்தைக் கொடுத்தால் குணமாகிவிடும் என்று அவனுக்குத் தெரியும். அந் நாட்டிலேயே வளர்ந்து வரும் ஒரு மரப்பட்டையின் தூளை அச் சீமாட்டிக்கு கொடுத்தான். அவளுடைய பெயர் சிஞ்சோன். சிஞ்சோன் அம்மருந்தை சாப்பிட்டதால் குணமடைந்தாள்.



ஸ்பெயின் தேசத்தார் தென் அமெரிக்காவிலுள்ள பெரு நாட்டின் செல்வங்களுக்கு ஆசைப்பட்டு அந் நாட்டை தங்களுடைய தந்திரத்தாலும் வீரத்தாலும் ஜெயித்தனர். அந் நாட்டுக்கு தங்கள் நாட்டு பிரபுக்களை ராஜ பிரதிநிதியாக நியமித்தனர்.

1638-ம் ஆண்டு ஒரு பிரதிநிதியின் மனைவிக்கு கொடிய ஜுரம் கண்டது. அவள் அச் ஜுரத்திலிருந்து தப்பியதைப்பற்றி முன்பே பார்த்துவிட்டோம். அந்த மனிதன் அச் சீமாட்டிக்கு தங்கள் நாட்டில் விளையும் ஒரு மரத்தின் பட்டையையே தூள்செய்து கொடுத்தான்,

சிறிது காலத்திற்கு பிறகு பிரான்ஸ் தேசத்து வான சாஸ்திரிகள் இருவர் பெரு நாட்டிற்கு வந்தனர். அச் சமயத்தில் பிரான்ஸ் தேசத்தில் 'லின்னியஸ்' என்ற ஒரு பிரபல தாவர விஞ்ஞானி இருந்தார். வான சாஸ்திரிகள் அம் மரப்பட்டையின் புகழை கேள்விப்பட்டு அதன் ஒரு துண்டை லின்னியஸுக்கு அனுப்பிவைத்தனர். லின்னியஸ் அம் மரப்பட்டையை நன்றாக பரிசோதித்து அது பல வியாதிகளுக்கு கை கண்ட மருந்து என்று கண்டார். அம் மருந்தினால் முதன்முதல் குணமடைந்த சீமாட்டியின் பெயராகிய சிஞ்சோனை அம் மருந்துக்கு பெயராக இட்டார். ஆனால் அதை உச்சரிக்கும்போது சிறிது சிறிதாக மாறி இப்பொழுது ஆங்கிலத்தில் அதை "சின்கோனா" என்று அழைக்கின்றனர்.

1655-ம் ஆண்டு இம் மரப்பட்டையை பொடிசெய்து ஐரோப்பியர் மருந்தாக உபயோகித்தனர். அக் காலத்தில் கத்தோலிக்க குருக்களே சகல கலைகளையும் கற்று சிறப்புடன் விளங்கினர். அவர்களே வைத்தியர்களாகவும் தேச சஞ்சாரிகளாகவும் இருந்ததால் இப்பொடியை அவர்களே அதிகம் வைத்திருந்தனர். ஆகவே இதற்கு "பாதிரி பொடி" என்ற பெயரும் உண்டு.

1660-ம் ஆண்டு இங்கிலாந்து அரசனாகிய இரண்டாம் சார்லஸுக்கு எவ்வகை மருந்துக்கும் குணப்படாத கொடிய ஜுரம் கண்டது. இம் மருந்தை அவன் சாப்பிட்டதினால் முற்றும் குணமடைந்தான்.

இந்த அரியபெரிய பொக்கிஷத்தை பெரு நாட்டினர் தங்கள் நாட்டு செல்வங்களுள் முதன்மையானதாக வைத்து பாதுகாத்தனர். நாளடைவில் அது உலகின் பல பாகங்களுக்கு பரவியது. நம் சுதந்திர இந்தியாவில் அம் மரங்கள் நீலகிரி மலையிலும் இன்னும் பல்வேறு இடங்களிலும் பயிரிடப்படுகின்றன,

இம் மரப்பட்டையிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துக்குதான் 'கொய்னு' என்று பெயர். "கொய்னு" என்னும் வார்த்தை அமெரிக்க கண்டத்து பாஷை ஒன்றில் மரப்பட்டை என்று பொருள்படும். கொய்னு நிறம் அற்றது. மிகவும் கசப்புள்ளது. கொசுக்களால் ஏற்படும் கொடிய மலேரியா ஜுரத்தை வெகு விரைவில் குணப்படுத்தும். இது மலேரியா ஜுரத்திற்கு மட்டுமன்றி இன்னும் பலவித வியாதிகளுக்கும் மருந்தாக உபயோகிக்கப்படுகிறது. கொய்னு வியாதிகளை நீக்குவதுமல்லாமல் நம் உடலின் தேகத் தளர்ச்சியை நீக்குகிறது. உடலை செம்மைப்படுத்துகிறது.

கொய்னு எல்லாவித நோய்களையும் குணப்படுத்துவதால் இதன் கசப்பை போக்க பலர் முயலுகின்றனர். இதை சர்க்கரையில் பொதிந்து மேலுக்கு தித்திக்கும் மாத்திரை ஆக்கியும், நீரில் கரைத்து இனிப்பு மருந்துகளோடு சேர்த்தும், பொங்கிவரும் மருந்துகளோடு கலந்து இதன் கொடூர கசப்பை போக்கி சுவையூட்ட பலர் முயல்கின்றனர். ஆனால் பலனளிப்பவை ஒரு சிலதான்.

உலகத்திலுள்ள எந்த நன்மையான பொருளிலும் மக்களுக்கு ஒரு தீமை இருக்கத்தான் செய்கிறது. கொய்னுவும் இதற்கு விதிவிலக்கல்ல. இம் மருந்தை அதிகம் சாப்பிட்டால் காது மந்தமாகிவிடும். ஆனால் நமது உயிரை சூரையாடும் மலேரியாவிலிருந்து நம்மை காப்பாற்றுகிறதே அது போதாதா?



தமிழ் ஆசிரியர்—டேய் சாமி, உப்பில்லாப் பண்டத்தை என்ன செய்ய வேண்டும்.

மாணவன்—உப்புப் போட்டுச் சாப்பிடவேண்டும் சார்.

—ஆ. இருதயசாமி, 5. ஆ.

உபாத்தியாயர்—(பையனைப் பார்த்து) டேய்! கோபு. உங்கள் அப்பா யார்டா?

பையன்—எங்கள் அப்பா I. C. S. சார்.

உபாத்தியாயர்—அப்படியானால் ஏன் கிழிந்த சட்டை போட்டிருக்கிறாய்?

பையன்—என்ன செய்யலாம் சார். எங்கப்பா ஐஸ்கிரீம் செல்லர்தானே

—P. கண்ணையன், 5. ஈ.

# ஏழை உள்ளம்

தெ. ஸ்தனிஸ்லாஸ், 4 அ.

வெண்ணிலா தன் ஒளியை மங்க வைத்தவண்ணம் மறைந்து கொண்டிருந்தது. தெற்குப் பார்த்த வீடு, ஏழை வீடாயினும் அவ்வீட்டில் வசிக்கும் ராமன் மிக நல்லவன். பொறுமைசாலி, கபடமற்றவன். கல்வியின்றினும் நுண்ணறிவுடையவன். தன் மகன் நாராயணன் ஒரே மகன். ஆகையால் ஏழை வாழ்விலும் அவன் செல்வமகனுய் வளர்ந்தான். நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து பையன் நாராயணனைப் பக்கத்துப் பள்ளிக்கு அனுப்பி வந்தான். ஆனல் நாராயணன் பள்ளி செல்லாமலேயே வழியிலுள்ள



கிணற்றில் உணவை உண்டு மாலை சுமார் 4 மணிக்கெல்லாம் வீடு திடும்பிவிடுவான். ராமனும் பிள்ளை கல்வி கற்று வருகின்ற தென்ற நம்பிக்கையிலே யிருந்தான். ஒரு நாள் பள்ளிக்கு மேல் அதிகாரி வருவதாக அறிக்கையிட்டபடியால், உபாத்தியாயர் ஒரு கடிதம் அனுப்பினர். கடிதத்தை ஒரு பையன் மூலமாய் ராமன் பெற்றான். ஆனல் ராமனுக்குப் படிக்கத் தெரியாது. தன் மகன் நாராயணன் வந்ததும் அக் கடிதத்தைக் கொடுத்து வாசிக்குமாறு கூறினன். நாராயணன் தான் நன்ருகப் படிப்பதாயும், வகுப்பில் நல்ல பையனுய் நடக்கின்ருன் எனவும் கடிதத்தில் எழுதி இருக்கிறதெனக் கூறினன். நுட்பமான அறிவுடையவன் தன் மகன் என மனப்பால் குடித்துவந்தான் ராமன்.

மற்றோர் நாள் உபாத்தியாயர் மற்றோர் பையனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தனுப்பினர். ராமனிடம் கடிதம் வரவே, அப் பையனையே வாசிக்குமாறு கேட்டான். ஆனல் அப் பையன் அக்கடிதத்தை வாசிக்கச் சிறிது தயங்கினன். ஆயினும் ராமன் கட்டளைப்படி கடிதத்தை வாசிக்கலானன்.

மாந்தூர், 5—10—52.

நாராயணனைப் படிக்கவைக்க எண்ணிய நீர் ஏமாற்றம் அடைந்துவருகின்றீர். உங்கள் பையன் பள்ளியில் சேர்ந்ததுமுதல் இன்னும் பள்ளிக்கு வரவில்லை. நடு வழியிலேயே உணவை உண்டபின் திரும்பி வருவதாகவும் தங்கள் ஊர் பையன்கள் மூலம் கேள்விப்பட்டேன்.

இங்ஙனம்,
**கடமையைக் காக்கும் ஆசிரியர்**

ராமன் மனதில் திகில் ஏற்பட்டது. ஏழை உள்ளம் பதை பதைத்தது. கோப ஆவேசத்தால் மனம் துடி துடித்தது. ஆனல் செல்வ மகன் அல்லவா! ஆகையால், இன்னும் சில நாள் சென்று பார்ப்போம் என அன்புகொண்டான் ராமன். ஒரு நாள் ராமன் இவன் சூழ்ச்சியைக் கண்டறியும் பொருட்டாக மகனை முன் அனுப்பி பையனுக்குத் தெரியாதவண்ணம் ஒளிந்து சென்ருன். நாராயணன் இரண்டு மைல்கள் சென்றதும் கும்மாளத்தோடே கிணற்றில் இறங்கி உணவு உண்டபின் பக்கத்து ஆற்றங்கரைக்குச் சென்று பாட்டுப்பாடிக் கொண்டிருந்தான். இதைக் கண்டதும் ராமன் நாராயணனை நன்ருக உதைக்கலாமென எண்ணி சிறிது சென்ருன். அன்பு மகன் அல்லவா? பெற்ற மனம் அல்லவா? பையன் கோபிப்பானே, தற்கொலை செய்து கொள்ளுவானே என்றெல்லாம் எண்ணியது அப்பேதையுள்ளம். ஆகையால், திரும்பவும் வீடு சென்று துக்கத்தால் வாடியவண்ணம் தலை குனிந்துகொண்டு தான் ஏமாற்றம் அடைந்ததை எண்ணித் துக்கித்தான். மாலையானதும் நாராயணன் படித்த

வன்போல் ஆனந்தமாய் வீட்டில் நுழைந்தான். ஆனால் ராமன் மிகவும் துக்கப்பட்டான். வாயாரத்திட்டி தண்டிக்கவும் எண்ணினன். ஆனால் அவ்வேழையுள்ளம் மதிக்கவில்லை. "அப்பா நாராயணா" என்று அழைத்தான். "அப்பா," எனக் கூறிக் கொண்டேவந்தான் ராமன். "அப்பா மகனே நீ தினமும் பள்ளிக்குச் செல்லுகிறாயா அல்லது...?" "ஏன் அப்பா, நான் தான் தினமும் பள்ளிக்குச் சென்று கல்வியைப் பயின்று வருகிறேனே," என்று பொய் சொன்னன். "அப்பா, பள்ளிக்குப் போகாது ஏமாற்றியதுபோக பொய் சொல்லவும் துணிந்துவிட்டாயா" எனக் குளரியவாரே கூறினன். நாராயணன் மனம் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போலானது. ஆயினும் குற்றத்தை வெளிக்குக் காட்டாவண்ணம் பேசாது வெளியே சென்றுவிட்டான். ஒரு நாள் இராக்காலத்தில் பெட்டியில் சுமார் 50 ரூ. இருந்ததை எடுத்துக்கொண்டு யாருக்கும் தெரியாமல் வெளிக்கிளம்பினன். துக்கம் எல்லை அற்று குடிகொண்டது ராமன் மனதில். காலையில் எழுந்து பார்க்கவே மகனைக் காணவில்லை. பெட்டியைப் பார்த்தான். தான் கஷ்டப்பட்டு சம்பாதித்த 50 ரூபாயில் ஒன்றையும் காணமல் மனம் நொந்தான். அப்பா! மகனே!! செல்வ மகனே!!! என்றவாறு ஓடினன் தெருவழியாக. எங்கும் காணவில்லை. மனமுடைந்த ராமன் அழுதுகொண்டே வீடு வந்தான். ஜீவிக்கப் போதிய ஊதியமின்றி ஒரு பணக்காரனின் வீட்டில் இருந்து வேலை செய்து பிழைப்பைத் தேடிக்கொண்டுவந்தான். ஆனால் மகன் காணவில்லை என்ற ஒரு கவலைமட்டும் அவனை வாட்டி வதக்கிக்கொண்டு வந்தது. ராமன் அச் செல்வர் மனையில் கஷ்டப்பட்டு ஜீவித்தான். ஆயினும் அவன் காதில் விழுவது பழி மொழியே அன்றி வேறல்ல. ஆயினும் மனந்தளராமல் உழைத்துவந்தான். மற்றவர் பொருமை கொள்ளுமாறு வேலை செய்தான். நல்லவர்கள் தன்னை விரும்பும்படியாகவும் வாழ்ந்து வந்தான்.

நாராயணன் தன் கையிலுள்ள 50 ரூபாயோடு பல ஊர்களுக்கும் சென்றான். அவனிடத்தில் உள்ள பணத்தைக் கண்டதும் தோழர்கள் கூடினர்கள். பல மோசமான வழிகளில் பணத்தை செலவழித்தான். அவனிடம் உள்ள பணம் குறைந்துவிட்டதைக் கண்டு தோழர்களும் குறைந்துகொண்டே வந்து நாளடைவில் அவனைக் கைவிட்டனர். ஆதலால் என்ன செய்வதென்று அறியாமல் பக்கத்தூரில் ஒரு முதலாளியிடம் வேலைக்காரனக அமர்ந்தான். ஒரு நாள் ராமனுடைய முதலாளிக்கு வியாதி கண்டமையால் தற்செயலாகவே இருவரும் சந்திக்க ஓர் வாய்ப்பு உண்டாகியது. கடைசியில் ராமன் இருப்பதை தன் முதலாளி வீட்டிலிருந்த நாராயணன் கண்டான். நாராயணனின் எண்ணம் பலவாராகத் துடித்தது. கடையில் நின்றுகொண்டிருக்கும் தன் தகப்பனை நோக்கி வேகமாக ஓடினன். கள்ளம் கபடமற்ற ராமன் உள்ளத்தில் அப்பா மகனே என புலம்பினன். நாராயணன் திடீரென்று காலில் விழுந்து "உம் பேச்சை மீறினேன் பள்ளிசெல்வதுபோல் உம்மை ஏமாற்றித் திரிந்தேன். அதுமட்டுமல்லாமல் நெற்றி வியர்வை நிலத்தில் விழ நீர் சம்பாதித்த 50 ரூபாயையும் திருடிவந்தேன். அப்பா நீங்கள் என்னை உங்கள் மகனுகப் பாவிக்க வேண்டாம். உங்கள் அடிமையாக பாவிக்க வேண்டும். இக்குற்றங்களை மன்னியு" மென்று உரத்த சத்தமிட்டு அழுதான். இவ்வலங்கோலத்தைக் கண்டு ஊரில் பலபேர் வந்து கூடினர். சிறிது நேரத்தில் கூட்டம் ஏகத் திரளானது. ஆகையால் நாராயணன் கூட்டத்தை விட்டு ஒருவருக்கும் தெரியாது வெளிக்கிளம்பி தன் சொந்த ஊர் சென்றான். தகப்பன் மருந்தைக் கொண்டுவந்து முதலாளியிடம் கொடுத்துவிட்டு தன் மகன் அகப்பட்ட நற்செய்தியைக் கூறினன். ராமனுக்கு சுமார் 90 வயதானதால் வேலை செய்ய முடியவில்லை. தந்தையின் வேலையை மகன் செய்தான். சில மாதங்களில் தன் மகனின் வாழ்க்கைக்கு விளக்கேற்றி வைத்துவிட்டு தன் பூதவுடலை நீத்தான்.

# செவ்வாய் யாத்திரை

சு. சம்பந்தம் 6 உ.

**செவ்வாயின் தோற்றம் :**—செவ்வாய் என்பது அதன் பெயருக்கு ஏற்ப செந்நிறமானது. அதன் குறுக்களவு சுமார் 4,200 மைல். அதன் பரப்பளவு பூமியின் பரப்பளவில் $\frac{1}{4}$ பங்கு. பூமியில் $\frac{3}{4}$ பகுதி கடலும், $\frac{1}{4}$ பகுதி நிலமுமாக இருக்கிறது. ஆதலால் இரண்டிலும் உள்ள நிலப்பரப்பு கிட்டத்தட்ட சமமாகவே இருக்கிறது. செவ்வாயின் பளு பூமியின் 9-ல் 1 பங்கு.

**சில விவரங்கள் :**—செவ்வாய் சூரியனிடமிருந்து சுமார் $14\frac{1}{4}$ கோடி மைல் தூரத்தில் இருக்கிறது. அங்கிருந்தவாறே சூரியனைச் சுற்றிவர அதற்கு 687 நாட்கள் ஆகின்றன. அது தன்னைத்தானே சுற்ற $24\frac{1}{2}$ மணியாகிறது. அதன் அச்சும் பூமியின் அச்சைப்போல் சாய்ந்து இருப்பதால், செவ்வாயிலும் பூமியைப்போல் பருவங்கள் உண்டு. ஆனால் ஒவ்வொரு பருவமும், பூமியின் பருவத்தைவிட 2 மடங்கு நீடித்திருக்கும். பூமியும், செவ்வாயும் ஒன்றையொன்று 26 மாதத்திற்கு 1 முறை நெருங்குகிறது.

**இரண்டு சந்திரன்கள் :**—செவ்வாய்க்கு 2 சந்திரன்கள் உண்டு. இவை இரண்டும் அளவில் மிகச் சிறியவை. குறுக்களவு சுமார் 10 மைல். இவற்றுள் ஒன்று செவ்வாய்க்கு அருகில் உள்ளது. அது ஒரே நாளில் சூரியனைச் சுற்றி வருகிறது. மற்றொரு சந்திரன் செவ்வாயை சுமார் $30\frac{1}{4}$ மணி நேரத்தில் சுற்றுகிறது.

**நிறங்கள் :**—டெலிஸ்கோப்பின் வழியாகப் பார்த்தால் அதன் பரப்பில் 3 வகையாக நிறங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் பிரகாசமானவைகள் தூய வெண்ணிறமான துருவங்கள். செவ்வாயின் பெரும் பகுதி செந்நிறமாகவும், செம்பழுப்பு அல்லது ஆரஞ்சு நிறமாகவும் தோன்றுகிறது. செவ்வாயின் மத்திய ரேகையை அடுத்த சில பிரதேசங்கள், நீலம், கரும் பச்சை, இளம் பச்சை, சாம்பல் முதலிய நிறங்களை உடையதாக காணப்படுகின்றன. பனிக்காலத்தில் பெய்யும் பனியில், துருவம் மூடப்பட்டு, வெண்ணிறமாகத் தோன்றுகிறது. ஆகவே செவ்வாயில் தண்ணீர் நிச்சயமாக இருக்கிறது. அங்கு பாலைவனங்களும் இருக்கின்றன. ஆனால் அவை அழகிய தோற்றமுடையவை.

**மலைகள் :**—செவ்வாயில் உன்னதமான மலைச் சிகரங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இரண்டு மைல் வரையுள்ள பீடபூமிகள் அங்கு இருக்கக்கூடும். தென் துருவத்தின் அருகிலே பனிமூடிய சிகரங்களைக் காணலாம்.

**கரு நிறம் :**—செவ்வாயிலுள்ள கரு நிறப் பிரதேசங்கள் கடல்கள் என்று எண்ணினார்கள் ஒரு காலத்தில். செவ்வாயை நன்கு கவனித்து வந்த ஷியாபரெல்லி, லவெல் என்பவர்கள் அங்கு ஆயிரக்கணக்கான மைல் நீளமுள்ள கால்வாய்கள் இருக்கின்றன, என்று கூறினார்கள். அவை, செவ்வாயிலுள்ள, அறிவிலும் முயற்சியிலும், சிறந்த மக்களால் இயற்றப்பட்டிருக்கவேண்டும் என்றும், அவைகளின் வழியாகப் பாயும் உருகிய பனிநீர் செவ்வாயின் நிலங்களை செழிக்கச் செய்து உயர்வு அளிக்கிறது என்று ஊகிக்கலாம்.

ஐரோப்பாவிலுள்ள, அன்டோனியாடி முதலிய வான சாஸ்திரிகள் இவை கால்வாய்கள் அல்ல என்றும், அமெரிக்காவிலுள்ள ஸ்லீபர் முதலிய வானசாஸ்திரிகள் இவை கால்வாய்கள் என்றும் கூறுகிறார்கள்.

1956-ம் வருடம் செவ்வாய் நமது பூமியை நெருங்கும் பொழுது பாலோமாரிலுள்ள 200" டேலிஸ்கோப்பினால் இதைக் கவனிக்கப் போகிறார்கள். அப்பொழுது உண்மை விளங்கலாம்.

**வாயுமண்டலம் :**—சில காலத்துக்கு முன்வரையில் செவ்வாயில் ஆக்ஸிஜன் இருக்கிறதென்று கூறி வந்தார்

கள். இப்பொழுது ஆக்ஸிஜன் இல்லை என்று உறுதியாகிவிட்டது. அதில் பூமியில் உள்ளதற்கு இருமடங்கு கரியமிலவாயுவும், சிறிது நீராவியும் இருக்கின்றன. அதன் வாயு மண்டலம் பெரும்பாலும் நைட்ரஜனுகவே இருக்கலாம். ஆர்கன், நியோன் முதலிய சில வாயுக்களும் இருக்கலாம்.

***பிராணிகள் :***—செவ்வாயில் பிராணிகள் இருப்பது சந்தேகம். அப்படி இருந்தாலும் அவை பூமியில் இருப்பதைப்போல் இரா. மீன்கள் தமக்கு வேண்டிய ஆக்ஸிஜனை நீரில் இருந்து பெறுவதுபோல், அப்பிராணிகள் தமக்கு வேண்டிய ஆக்ஸிஜனை நிலத்திலுள் துருவிலிருந்து பெறக்கூடும். இன்னும் தமது உயிர் வாழ்க்கைக்கு ஆக்ஸிஜனே தேவையில்லாத பிராணிகள் அங்கு வாழலாம். ஆனுல் நமது பூமியில் வாழும் பிராணிகள் பெரும்பாலும் அங்கே வாழமுடியாது. நாமும் இங்கு உலாவுவது போல் திறந்த வெளியில் வாழமுடியாது.

***மனிதர் :***—அங்கு உயிரனம் வாழ்வதற்கு உறுதியான அத்தாட்சி ஒன்றும் இல்லை என்று ஐரோப்பிய சாஸ்திரிகள் கூறுகிருர்கள். ஆனுல் அமெரிக்காவிலுள்ள வான சாஸ்திரிகள் சிலர், செவ்வாயில் தாவரங்கள் இருக்கின்றன, சிறந்த அறிவை உடையவராயும், நம்மைக் காட்டிலும் திறமைமிக்கவராயும் உள்ள உயர்ந்தவகை மக்களும் அங்கே இருக்கிருர்கள், என்கிருர்கள்.

***யாத்திரை :***—வேறு உலகங்களுக்கு யாத்திரை போவதைப் பற்றி, நெடுங்காலமாக, பல நாடுகளிலும் கூறப்பட்டு வருகின்றது. இக்காலத்தில் விஞ்ஞானிகள் இந்த யாத்திரை உண்மையில் இயலும் என்றே எண்ணத் துணிந்துவிட்டார்கள். அறிவிற் சிறந்த சில நாடுகளில் சில சங்கங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. அதன் அங்கத்தினராகிய விஞ்ஞானிகள் அயல் உலக யாத்திரைக்கு உரிய வழிகளையும், கருவிகளையும் ஆராய்ந்துவருகிருர்கள். அவர்களுக்கு வெற்றி கிட்டுவதாகுக!



*என்ன நன்மை செய்யமுடியுமோ அதையெல்லாம் செய். என்ன வழியில் செய்யமுடியுமோ அப்படியெல்லாம் செய். எந்த இடத்தில் செய்யமுடியுமோ அங்கேயெல்லாம் செய். எந்த நேரத்தில் செய்யமுடியுமோ அப்போதெல்லாம் செய். எந்த மக்களுக்குச் செய்யுமுடியுமோ அவர்களுக்கெல்லாம் செய். எவ்வளவு காலம் செய்யமுடியுமோ அவ்வளவு காலம் செய்.—ஜாண் வெஸ்லி.*

# Is He a Culprit?

**Boopalan, V**

NO. He is not a Culprit. At least some in the world may say so. He was rich before. He read many poems and began to write too. But the flood of times swept away his riches and left him alone and poor and now he was a beggar. His treasure was a bag which had innumerable holes. Where were his friends? They had slipped away. What could be in his bag? There were neither clothes, nor money, nor food. There were small pieces of paper in the bag. He had a pencil which was only half an inch long. You may say that he must be a fool. No, he was a poet. Yes, really he was a poet. If he saw pieces of white paper he would pick them up and put them into his bag.

He would go only once a day in search of food. At other times he would go in search of pieces of white paper. He would write on the paper. They were beautiful poems of good taste. His friends thought that he was a mad man. He did not want food. He had almost forgotten that he had to eat if he wanted to live. He would be always writing and writing. Having not enough food he looked like a skeleton.

One day his face showed that he was very glad. He took the bag and went to the publishing office of a popular English monthly magazine. There was a Gurkha at the entrance. He entered the office compound.

"Don't enter," he heard a voice like thunder. He turned back.

"Get out," the Gurkha said and came near.

"Please Sir, I want to see the editor," he spoke in a low voice.

"Why?" he asked.

"I have some poems. I want to give them to the editor" he said to the Gurkha.

"Oh, mad fellow," he cried and drove him out of the compound.

He ran in great fear and grief and fell near the gutter. The papers fell into the gutter. Though he got a wound he did not mind it. He picked up the pieces of paper quickly. The Gurkha laughed.

A man saw this. He was like a gentleman. He came near.

"What do you have?" he asked our beggar sympathetically.

"I wrote some poems. I want to publish them. But the guard does not give me permission to go into the office" said the poor poet to the gentleman.

"Have you? In that case give them to me. I will give them to the editor," he said and asked him to give his name.

The poor fellow said that his name was Brown. Brown saw the man enter the office. His heart jumped for joy.

"Sir, something" the Gurkha asked.

The man threw four annas into his hand and entered the office. Having waited for a while, Brown saw the man come out of the gate. He gave one rupee to Brown.

"Only this, Sir?" Brown said.


"The Editor gave me only one rupee. What can I do?" He went away with a smile.

Brown was pleased though he got only one rupee. He thought that his poems and his name would be published.

* * *

Two months passed away. He saw a sheet of paper in the street. He took and read it. There he saw his poem published. But his name was not there. He saw the photo of the man who took his poems to the Editor like a broker. Yes! he was deceived. He got angry. Unfortunately the broker came that way at that instant. Brown saw him coming with a smile.

Brown laughed like a mad man and at once pounced upon him like a hungry tiger. The broker cried and fell. Brown sat on his chest and began to strangle his throat. Two hands caught his hand. There stood a policeman who brought him to the police station. Then it was proved that he was guilty. He told them the true story. But they did not believe him. Why? because he was very poor. He was imprisoned for attempting to kill. He attempted to kill a man. It was true. But why? Why did he attempt? There was none to ask the question. Now he is in prison. Is he a Culprit? Yes, he is guilty. But the society and its evils that led him to do that, is more guilty.



அன்பு ஒன்றே ஆண்டவனைக் காட்டும்—கிறீஸ்துநாதர்.

உடலை வளர்க்க உணவு வேண்டும். அப்படியே உயிரை வளர்க்கப் பிரார்த்தனை வேண்டும்.—காந்தியடிகள்.

தூயமனதோடு செய்யும் பிரார்த்தனை கடவுளால் வரவேற்கப்படும்.
—தாகூர்.

நன்மை தின்மைகளை வேறுபாடு தோன்ற பகுத்துக் கூறும் உள்ளுணர்ச்சியே மனச்சாட்சி என்பது—விவேகானந்தர்.

கிறீஸ்துவை ஒத்துக்கொள்ளாவிடில் சரித்திரம் முழுவதுமே பொருள்படா ஓர் புதிராகும்.—ரெனன்.

புத்தியைவிட அன்பு எவ்வளவோ மேல் என்பதைக் கிறீஸ்தவம் மனிதருக்குக் கற்பித்திருக்கிறது.—மாரித்தேன்.

# பணப் பேய்

**T. A. லெஸ்லி, 4 ஈ.**

காட்சி 1

இடம் :—**தஞ்சைச்சாலே**

காலம் :—**மாலே 7 மணி**

பாத்திரங்கள் :—**மிராசுதார், வடிவேலு குடியானவன்**

[ஒரு இரட்டைமாட்டு வண்டியில் சென்றுகொண்டிருந்த குடியானவனே விளித்து]

***மிராசுதார் :***—யாரங்கே ?

***குடியானவன் :***—நான் பூதலூருங்க. என்ன விஷயம் ?

***மிராசுதார் :***—ஒன்னுமில்லே. என்ன சமாசாரமா வந்தே ?

***குடியானவன் :***—நாலஞ்சு வண்டி நெல்லு, பத்து கலம் தொவரை, பத்து மூட்டை கடலே, எல்லாத்தையும் கொண்டுவந்து வித்துட்டுப் போறேனுங்க. என்மவளுக்கு கண்ணாலம் கூடுது. இந்த தையிலே முடிச்சுட்டா தேவலாம். ஏதோ ஒரு ஐநூறு, அறுநூறு இருந்தாத் தானேங்க ஏதோ செய்ய முடியும் ? அதிலே வேறே எனக்கு ஒரே ஒரு பொண்ணு. கொஞ்சம் இதாத்தானேங்க நடத்தணும்.

***மிராசுதார் :***—ஆஹா ! செய்ய வேண்டியதுதானே. வேறு யாருக்குச் செய்யப் போறேம் ? என்ன கெடச்சிருக்கு கையிலே ?

***குடியானவன் :***—எல்லாம் ஐந்நூற்றைம்பது தேறிச்சுங்க.

***மிராசுதார் :***—ஏம்ப்பா ! இந்த இருட்டிலே இந்தத் திருட்டுப்பய ரோட்டிலேயே பணத்தோட போறியே !...........

***குடியானவன் :***—வாஸ்தவந்தானுங்க. இருந்தாலும் என்ன செய்யறது ? ஒண்ணுங்க. நீங்க யாருன்னு சொல்லவே இல்லீங்களே !

***மிராசுதார் :***—நானு ? நான்தான் வடிவேலு சோளவர். ஏதோ ஐம்பது, அறுபது வேலி நிலமிருக்கு.

***குடியானவன் :***—ஓகோ ! நீங்கதானுங்களா, சோளவர் என்கிறது !

***மிராசுதார் :***—அதெல்லாம் இருக்கட்டும். நான் சொல்றதே கேளு. எம் பங்களாவிலே ராத்திரி தங்கிட்டு, கருக்கலோட புறப்படலாம். அப்புறம் உன்னிஷ்டம்.



***குடியானவன் :***- நீங்க சொல்றப்போ நான் என்ன செய்ய முடியுமுங்க.........

[குடியானவனும் மிராசுதாரும் செல்ல வண்டிகள் பின்தொடர்கின்றன]

காட்சி 2

இடம் :— **மிராசுதார் வீடு**

காலம் :—**இரவு சுமார் 9 மணி**

பாத்திரங்கள் :—**மிராசுதார், சோமு, அருளானந்தன்**

***மிராசுதார் :***—ஏய் சோமு !

***சோமு :***—என்னங்க எஜமான் ?

***மிராசுதார்*** :—(குடியானவனைக் காண்பித்து) இவருக்குச் சாப்பாடு போடு.

***சோமு*** :—சரிங்க எஜமான்.

[சோமு குடியானவனை அழைத்துக்கொண்டு உள்ளே போகிறான்.]

***மிராசுதார்*** :—டேய் கோவிந்தா! யாருக்கும் தெரியாமே, பறச்சேரிக்குப்போய் நம்ப அருளானந்தத்தை அழைச்சுட்டுவா. (அவன் போனபின் தனக்குள்) சன்னமா முடிச்சுடணும். இவனைத் தீர்த்துட்டா சுமார் 600 ரூபாய் நம்ம கைக்கு...(இப்படி யோசித்துக்கொண்டிருக்கையில் கோவிந்தன் அருளானந்தத்துடன் வருகிறான்.)

***மிராசுதார்*** :—அருளா! உனக்கு ஒரு வேலை. நம்ம வீட்டுக்கு ஒருத்தன் வந்திருக்கான். ஒரு 6 ரூபாய் கையிலே இருக்கு. சுளுவா வேலையை முடிச்சுடு!

***அருளானந்தன்*** :—சாமி! என்னை என்ன வேணுமானாலும் செய்யுங்க. அது மட்டும் நம்மாலே முடியாதுங்க.

***மிராசுதார்*** :—(கோபத்துடன்) சீ நாயே! ஓடிப்போ! ஒண்ணு சொன்னா அதைச் செய்ய வக்கில்லே!! பணம்னா வந்துடறயே! (அருளானந்தம் வெளியே போய்விடவே, சோமுவை அழைத்து) டேய் சோமு! இங்கே வந்திருக்கிற ஆளு நாளைக் காலையிலே பொறப்படுவான். அவனை வழியிலே தீர்த்துட்டு பணத்தை எடுத்துட்டு வந்திடு. மற்றதை நான் பார்த்துக்கறேன்.

***சோமு*** :—அப்படியேங்க! எஜமான்.

## காட்சி 3

காலம் :—**மறுநாள் காலை 4 மணி.**

பாத்திரங்கள் :—**குடியானவன், மிராசுதார், சாமிக்கண்ணு**

***குடியானவன்*** :—ஐயா! ராத்திரி செஞ்சதை நான் மறக்கவேமாட்டேன். நான் போய் வறேனுங்க.

***மிராசுதார்*** :—சரி ஜாக்கிரதையாகப் போ.

[குடியானவன் போனபின் மிராசுதாரின் மகன் சாமிக்கண்ணு வருகிறான்.]

***சாமிக்கண்ணு*** :—அப்பா! நம்ம நிலத்தைச் சுத்திப் பார்த்திட்டு வரேம்பா!

***மிராசுதார்*** :—சரி சீக்கிரமா வந்துடு.

## காட்சி 4

காலம் :—**காலை**

இடம் :—**சாலை**

***அருளானந்தன்*** :—(தனக்குள்) பாவம்! ஒன்றுந் தெரியாத மனுஷனைக் கொல்லப் பார்க்கிறான். நான் எப்படியாவது காப்பாத்தினாதான் என் பிள்ளை குட்டி நல்லாயிருக்கும். (அப்போது குடியானவன் அவ்வழியே தன் வண்டிகளுடன் வரவே) யாரங்கே? அந்த வழியாய்ப் போவாதீங்க. அங்கே நிறைய நல்ல பாம்புகள் இருக்கு. அப்பாலே உள்ள ரோடிலே போங்க! (என்று எச்சரித்து அனுப்புகிறான்.)

[அப்போது "ஐயோ" என்ற சத்தம் கேட்கிறது. அங்கே சோமு நிலத்தைச் சுற்றிப் பார்க்கச் சென்ற சாமிக்கண்ணுவை குடியானவன் என்று எண்ணி மண்டையில் அடித்து கொன்றுவிடுகிறான். பிறகு சாமிக்கண்ணு என்று தெரிந்தவுடன் அலறிக் கொண்டு வீட்டிற்கு ஓடிவருகிறான்.]

## காட்சி 5

இடம் :—**பங்களா**

காலம் :—**8 மணி**

பாத்திரங்கள் :—**சோமு, மிராசுதார்**

***சோமு*** :—(பதறிக்கொண்டே) எஜமான்! எஜமான்!.........நான்......... என்னை....ம....ம....ம....மன்னித்து....வி....வி... வி.........விடுங்கள். நம்ப சின்ன......... எஜமான்.........என்று தெரியாமல்......... குடியானவன் என்று நினைத்து......... கொன்றுவிட்டேனுங்க.

***மிராசுதார்*** :—(இதைக் கேட்டவுடன்) ஹா! பணப் பேய் என்னை சரியாகத் தண்டித்துவிட்டது. எனது பாபத்திற்கு என் மகன் பலி. ஹா! சாமிக்கண்ணு! மகனே! மகனே!! மகனே!!! (சொல்லிக் கொண்டே பிரக்ஞை அற்று கீழே விழுகிறார். பணப் பேய் அவரைவிட்டு அன்றுடன் நீங்கியது.)

# The Cunning Fox

**A. Lourdusamy,** VI

ONCE upon a time there lived a fox, a tiger and a lion in a jungle. They were great friends. So they would always go together to get food. If they found any animal they would divide it into three parts and eat it.

One day they were roaming about the forest for a long time in search of food. But they did not find anything till they got tired. At last they found a sheep which was a fat one. They took it to their cave. They decided to divide it after their bath. The fox found out a means of eating the whole sheep without giving any share to the tiger and the lion. So the fox said to the lion to go North to take bath and to come back quickly. It asked the tiger to go South and to return as soon as possible. It would watch till they returned. Thinking that the fox was their true friend, they agreed to do so.



The lion went North and the tiger went South. The lion came back before the tiger. The fox pretending to be very friendly told it that the tiger had come immediately after the lion had left and suggested that they should eat the sheep without the lion. Of course the fox refused. The lion got wild and said, " He is a cunning fellow. I don't think that he can be my friend. I will kill him. Where is he ? " The fox pointed at a path and the lion went along it to kill the tiger.

After the lion had left, the tiger came. The fox told the tiger that the lion had proposed that they should eat the sheep without the tiger. The tiger also got wild and went in search of the lion to kill it.

The tiger and the lion went by different paths. They did not meet each other for a long time. At last the lion and the tiger met and without any delay they attacked each other with great anger. At last the lion killed the tiger after it had been itself mortally wounded.

The fox knew what would have happened and it was very happy over its victory, that of cunning over might. He ate the sheep alone and in peace. He came out of the cave jumping when a hunter came along and killed the fox. All its cunning was of no avail.


So also in the world there are many who rob others, but are in turn robbed by others ; or what they robbed become useless to them ; or they become unable to enjoy what they have robbed. Let us be satisfied with what God has given us We will find peace and joy.

# நூற்றாண்டு வாழ்வு

து. சி. பரமானந்தம், 6 உ.

நம் நாட்டின் சராசரி ஆயுள் 25 ஆண்டுகள்தான். மேனாட்டிலோ ஒரு மனிதன் சராசரி 40 ஆண்டுகளுக்குமேல் ஜீவிக்கின்றான். ஆனால் அங்கும் ஒரு காலத்தில் மனிதனின் சராசரி வயது 20 ஆகவேயிருந்தது. உயிருடன் பல்லாண்டு வாழ பல அரிய முறைகளை ஆராய்ந்து அவற்றின் வழி நடந்து அந்நாட்டினர் தங்கள் ஆயுளை இரு மடங்கிற்கு மேலாகப் பெருக்கிக்கொண்டார்கள்.

நமது முன்னோர்கள் கையாண்டுவந்த பழக்கவழக்கங்கள் இக்காலத்தில் நமக்கு வேடிக்கையாகத் தோன்றுகின்றன. சாணத்தில் அணுப்பூச்சிகளைக் கொல்லும் சக்தி இருப்பதாக அறிகிறோம். வாசலில் சாணம் தெளிப்பதாலும், வீடு மெழுகுவதாலும் தெருவில் நடப்போரது கால்களில் ஒட்டிக்கொண்டிருக்கும் நோய்க் கிருமிகள் அவர்கள் வீட்டினுள் நுழையும் போதே கொல்லப்படுகின்றன. வீட்டின் சுவர் ஓரங்களில் செம்மண் இடுவதும் நோய்ப்பூச்சிகள் சேராமல் இருப்பதற்காகவே. சமையல் செய்கையில் பொருள்கள் அடுப்பின்மேல் சிந்துகின்றன. மறுநாள் அவைகள் நோய்க் கிருமிகள் நிறைந்தனவாக இருக்கும். அடுப்பை சாணத்தாலும் செம்மண்ணாலும் மெழுகும் போது அவை கொல்லப்படுகின்றன. இவ்விதமே, நாம் இப்பண்டை வழக்கங்களை பயன் அறியாது செய்துவந்தபோதிலும் அவை நமக்கு நன்மை செய்து வந்திருக்கின்றன, வருகின்றன.



பல்லாண்டு வாழ நோயற்ற வாழ்வு தேவையாகும். ஆனால் நோய் வரும் விதம் நமக்குத் தெரியாது. நோய்க் கிருமிகள் என்றால் என்னவென்றே நாம் அறியோம். நோய்கள் வருமுன் அவற்றைத் தடுக்கும் முறைகளையும் வந்தபின் குணப்படுத்தும் முறைகளையும் நாம் அறியவேண்டும்.

நம் நாட்டில் சிசு மரணமும், சிசு ஈன்ற தாய்மார் மரணமும்தான் மிகுதியாக இருக்கின்றது. இவற்றைத் தடுக்க நமக்கு வழி தெரியவில்லை. மேனாட்டில் ஒரு குழந்தை பிறந்தவுடன் பார்க்க வருபவர்கள் அதன் எடை என்னவென்றுதான் முதலில் வினவுவார்களாம். ஆனால் நம் நாட்டிலோ பிறந்த குழந்தை ஆணா? பெண்ணா? கருப்பா? சிவப்பா? என்ற கேள்விகள்தான் சரமாரியாக முதலில் எழுகின்றன. ஆணாயிருந்தால் விரும்புவதும் பெண்ணாயிருந்தால் வெறுப்பதும், சிவப்பாயிருந்தால் மகிழ்வதும் கருப்பாயிருந்தால் வருந்துவதுமாக இருக்கிறார்களே தவிர குழந்தை எவ்வளவு திடமுடன் இருக்கின்றது என்பதைக் கவனிப்பதே இல்லை. இது நாம் அனைவரும் நேரில் கண்டதொன்றே.

குழந்தைகள் வயிற்றில் இருக்கும்போதே வசதிகள் யாவும் பெற்று நோய் நொடியின்றி வளர ஆவன செய்யவேண்டும். இளம் வயதில் மணம்புரிந்து தாய்மார் ஆகிவிடுகின்ற அக்கிரமம் நம் நாட்டில்தான் உண்டு. குழந்தையாகப் போற்றி வளர்க்கப்படவேண்டிய வயதில் தனக்கு பிறந்த குழந்தைகளை வளர்க்க கடமைப்பட்டிருக்கின்றனர் நம் நாட்டுப் பெண்கள். குழந்தைகள் வளர்ப்பு முறையும் அவர்களுக்கு பூரணமாய் தெரிவதில்லை.

நூற்றாண்டு வாழ்க்கைக்கு தேவையானவைகளையெல்லாம் போக்கிக்கொள்ள மக்களே முனையவேண்டும். மக்கள் முனைந்தால், அரசாங்கமும் மக்கள் அரசாங்கமாதலின் தானாகவே வேண்டிய உதவிகள் புரியும். அரசாங்கமே யாவற்றையும் செய்துவிடும் என்று எதிர்பார்ப்பது அறியாமையாகும். இயலவும் இயலாது. சுதந்திர நாட்டுக்கு அது அழகுமல்ல.

நம் நாட்டில் அனைவரும் நல்ல முறைகளைக் கையாளுவதில் ஒற்றுமையுடன் இருந்து "இந்தியாவில் மனிதனின் ஆயுள் நூறு ஆண்டுகள்" என்று அயல் நாட்டார் நம்மைப் போற்றும் சிறப்பான காலம் விரைவில் வர நாம் முயலுவோமாக! வருங்கால மந்திரிகளான குழந்தைகள் கல்விச் செல்வத்தோடு நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வத்தையும், அன்பு, நேர்மை, வாய்மை, ஒற்றுமை ஆகியவற்றை விரைந்து சிறக்கப் பெற்று விளங்க ஆவன செய்வோமாக! இந்தியர் ஒவ்வொருவரும் உயரமும், அழகும், மூளை வலுவும் சிறக்கப் பெற்று நூறு ஆண்டுகள் வாழ்வோமாக!



## The Hen

*Teacher*—What is the most useful animal in the world to mankind?

*Raman*—A hen! Sir.

*Teacher*—A hen, How do you make that out?

*Raman*—We can eat it before it is born and after it is dead.

## Refuse To Accept Defeat

It is said of Napoleon that once for a whole morning a battle went against his forces till his officers were nearly in despair. He pulled out his watch and said, "Gentlemen, it is now two o'clock. We have lost one battle. There is still time to win another".

The fool hath said in his heart, There is no God.

—*Old Testament. Psalms XIV. 1:*

# பிளாஸ்டிக்

A. ஜேம்ஸ் குழந்தைராஜ், 4 ஆ.

"பிளாஸ்டிக்" இன்று நம்மிடையே முக்கியமானதொரு ஸ்தானத்தை வகிக்கின்றது. எந்த சாமான்களைப் பார்த்தாலும் பிளாஸ்டிக் மயம். உதாரணமாக—சோப்புப் பெட்டிகள், சீப்புகள், பெல்ட்டுகள், தர்மாஸ் பிளாஸ்க்குகள், பர்சுகள், செறுப்புகள் இவைபோன்ற பல பிளாஸ்டிக் மயமாகவே ஜ்வலிக்கின்றன.

"பிளாஸ்டிக்" என்பது பொதுப்படையான பெயர். மூலப்பொருள்களைக் கொண்டும், உபயோகத்தை பொருத்தும் பலவித பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில ...—பேகலைட், பேகஸைட், பெனலைட், ரெவோலைட்...என்றும் இவை போன்ற எத்தனையோ ஐட்டங்கள் உள்ளன.

இது பத்தொன்பதாவது நூற்றுண்டில் தோன்றிய அற்புதப் பொருள். இதன் உற்பத்திக்குக் காரணமாயிருந்த இடம் அமெரிக்கா. ஒரு சமயம் அமெரிக்காவில் தந்தம் போன்ற விலையுயர்ந்த பொருட்களின் பஞ்சம் தீவிரமாக ஏற்பட்டது. செயற்கை முறையில் தந்தம் போன்ற கெட்டிப் பொருள்களைக் கண்டுபிடிப்பவருக்கு பதினுயிரம் டாலர் பரிசளிப்பதாக ஒரு ஸ்தாபனம் விளம்பரம் செய்தது. இதை செய்ய முன் வந்தவர்களுக்குக் கணக்கில்லை. ஆனுல்! எல்லாம் விழலுக்கு இறைத்த நீராயிற்று. கடைசியில் டாக்டர் 'பேக்லண்ட்' என்றவர் பீனுல் என்னும் சரக்குகளினின்று பேகலைட் எனும் "காஸின் பிளாஸ்டிக்"கைக் கண்டுபிடித்தார். புளித்துப்போன பாலின் ஏட்டில் இருக்கும் ஒரு பொடியை பார்மாலினைடுடன் கலக்கும் பொழுது ஒரு வித களிப் பொருள்உண்டாகிறது எனக் கண்டார். இதுவே இப்பொழுது பிளாஸ்டிக் எனத் திகழ்கின்றது.

இத்துறையிலும் அமெரிக்காதான் முன்னேறியிருக்கிறது. சுமார் நூறு வகைகளில் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இத் தொழிலில் முப்பது தொழிற்சாலைகள் ஈடுபட்டுள்ளன. ஒரு நாளுக்கு ஒன்பது கோடி பிளாஸ்டிக் சாமான்கள் அங்கு செய்யப்படுகின்றனவென்ருல் அதன் முன்னேற்றத்தை இதிலிருந்து பார்த்துக் கொள்ளுங்கள்.

"பிளாஸ்டிக்"கை மூன்று வகையாகப் பிரிக்கலாம். (1) சூட்டிலே இளகும் வகை, (2) சூட்டிலே கெட்டியாகும் வகை, (3) பிராண வாயுவினுல் கெட்டியாகும் வகை. தற்காலத்தில் ரஸாயன ஆராய்ச்சி மிகுதியாயிருப்பதால் மூன்ரும் வகையைப் பற்றி நாம் ஆராய்வோம்.

களிப்பொருள்கள் செய்வதற்கு காற்று அவசியம். காற்றிலுள்ள பிராணவாயுவின் உதவியினுல் இக்களிப் பொருளை இறுகச் செய்யலாம். நாம் கடைகளிலே வாங்கும் சாமான்கள் அனைத்தும் பசைத்தன்மையை இழந்தவை. தயாராகும்பொழுது இளகிய பசை போன்ற நிலையில் இருக்கின்றது. பின்பு அமுக்கத்தினுலும், தாக்குதலினுலும் பசைத்தன்மையை இழந்து கெட்டியாகி விடுகின்றது. மறுபடியும் இதன் உருவம் மாறுபடாது. இதற்கு ஒரு சீரான அமைப்பே கிடையாது.

இதன் செய்முறை:—"பார்மல்டிஹைட்" என்னும் வாயுவை தண்ணீரில் கலந்தால் "பார்மலின்" என்னும் திரவம் உண்டாகின்றது. 'கார்பாலிக்' அமிலத்தை இதனுடன் சேர்த்தால் உடனே ஒருவித கெட்டிப்பொருள் உண்டாகின்றது. இதுவே பசைப்பொருள். இதைப் பொடியாக்கி பலவிதக் கலரையும் சேர்த்து சூட்டைக்காட்டி அச்சுகளில் நிரப்பி பலவித பிளாஸ்டிக் சாமான்கள் செய்யப்படுகின்றன. 'காஸின்' பொடியோடு 'பார்மலிஹைட்'டை கலந்தால் களிப்பொருள் உண்டாகின்றது. இக்களிப் பொருட்களில் அநேக நன்மைகளிருப்பினும் ஒரு கெட்ட குணம் உண்டு. விரைவில் கருகிப்போய்விடும். சூரிய உஷ்ணம் பட்டால் இளகி எல்லாப் பொருளும் ஒன்ருகச் சேர்ந்து கொள்ளும். மேலும் உடல் ஆரோக்கியத்திற்கு நல்லதா என்பது பெரிய பிரச்சனை!

# "உதய கீதம்"


ஏ. ரெங்கராஜ், 5 உ.

ஆண்டான் ஒருவன் உண்டு—அவனியில்
யாவும் அவனாலே!
ஆண்டிக்கும் அவனே—புவியாள்
அரசர்க்கும் அவனே
பாலில் சுவை போலும்—நல்ல
பலத்தின் ருசி போலும்
நாலிலும் கலந்து—அவன்
நம்மைச் சுற்றியுள்ளான்
சாதி அவனுக்கில்லை—பொல்லாச்
சமய பேதம் இல்லை
நீதி வழிச் செல்வோர்—தம்மை
நிச்சயம் காத்திடுவான்
தினம் ஒரு கணமும்—அவனைச்
சிந்தையால் துதித்தால்
கனவேனும் வாழ்வில்—பல
சட்டங்கள் நீங்கும்
உறுதியுடன் என்றும்—அவனை
உளமுருகித் தொழுதால்
இறுதியில் இன்பம்—நமக்கு
ஈந்து காத்திடுவான்.






Pondicherry Beach



Mettur Dam




Snake Dancers




Mettur Dam Monument

PHOTOS by Fr. Benjamin, s.J.



Snake Dancer



ஆறும் படிவ மாணவர்களும், ஆசிரியர்களும் (1952—53)

# நாடோடி

நாதன், 5

நாடோடி. ஆம்! நாடோடிதான். உங்களைப்போன்ற மாணவனுய் இருந்து மகிழ்ந்த நாட்களும் என் வாழ்க்கைச் சம்பவங்களுள் உண்டு என்பதை மகிழ்வுடன் தெரிவிக்கின்றேன். ஆனுல்...... இன்று நான் ஓர் நடைப்பிணம். நயவஞ்சகச் சமூகத்தால் நாசமாக்கப்பட்ட ஓர் நடைப் பிணந்தான். என் வாழ்க்கை, வரலாற்றை எந்தப் பத்திரிகையும் வரையப்போவதில்லை. ஆம்! நானென்ன? நாடறிந்த நட்சத்திரமா? அல்லது பெரிய மனிதர் ஜாபிதாவைச் சேர்ந்த பெரும் புள்ளியா? இல்லை. நாள் முழுதும், நாயுடன் போராடி நாக்கைத் திருப்திப்படுத்தும் நாடோடிகளுள் நானும் ஒருவன். விதியின் விளையாட்டு என்பார்களே, வேதாந்திகள், இன்னும் விளக்கமாய்க் கூறவேண்டுமானுல், சமூகத்தின் சூழ்நிலை என்பார்களே அறிஞர்கள், அந்த புரையோடிப்போன பழம் புண்ணைத்தான் கிண்டப்போகின்றேன். ஆரும் படிவத்துடன் என் பள்ளி வாழ்வுக்குப் புள்ளி வைக்கவேண்டியவனுனேன். விளக்கம் தேவையா? வறுமையின் கொடுமையால்... ஆம்! கல்லூரியில் கால்வைக்கக்கூடத் தகுதியற்றவனுனேன் ஏழ்மையின் இரும்புப் பிடியில் சிக்கிய காரணத்தால்......வேலைக்காக அலுவலகங்கள் பலவற்றிலும் சுற்றித் திரிந்தேன். பெரும் பட்டதாரிகளே பணி மனையில் இடமின்றித் தவிக்கும்போது, பள்ளிப்படிப்புமட்டும் முடித்திருந்த பிச்சைக்காரனை யார் கவனிக்கப்போகிருர்கள்?

அலுவலுக்காக அலைந்த நேரத்தில்தான் பசிப்பிணியால் மாண்டனர் என் பெற்ருேர். பாழும் உலகில், "அனுதை" என்ற படு மோசமான பட்டத்தைச் சுமக்கவேண்டியவனுனேன். உதவிக்காக ஊரெங்கும் சுற்றினேன். பெரிய மனிதர்களிடம் சென்றேன். பேச்சைக் கேட்க மறுத்தனர். கட்சிக் கொள்கை பேசும் கனவான்களை அண்டினேன். கடுஞ்சொல் பேசினர். பரம ஏழைகளைப்பற்றிப் பக்கம் பக்கமாக எழுதும் பத்திரிகையாசிரியர்களைப் பேட்டி கண்டேன். "பொய்யன்" என்று புகழுரை தந்தனர். சிறந்த கருத்துப் போதிக்கும் சினிமாக்காரர்களைக் கண்டேன். சிவந்த கண்கொண்டு நோக்கினர். எட்டுத் திக்கிலும் ஏமாற்றத்தையே பரிசிலாகப் பெற்றேன். அப்போதெல்லாம் வறுமையே எனது வாழ்வின் வைரியாக விளங்கியது.

வேறு வழியில்லாத காரணத்தால், ஓடேந்தவேண்டிய நிலைமைக்கு வந்தேன். பிச்சை கேட்கப் புகுந்த இடங்களிலெல்லாம் "பெருந் தடியன்" என்ற பட்டத்தையே பரிசிலாகப் பெற்றேன். சில இடங்களில், சொல்லடிமட்டுமல்ல, கல்லடியும் பெற்றேன். அச் சமயங்களிலெல்லாம், வழியும் குருதியைக் கண்ணீரால் கழுவி வீட்டை விட்டு வெளியேறுவேன். என் அனுபவம் எனக்களித்த முடிவினுல், உடலில் உயிருள்ளவரை உலகஞ் சுற்ற எண்ணியுள்ளேன்.

நாசகாரச் சமூகத்தை அண்டி வாழ்வதை விட நாயுடன் நாள்தோறும் போராடி வாழ்வு நடத்தல் மேல் என்று துணிந்து விட்டேன். எங்கு செல்கிறேன் என எனக்கே தெரியாது. சமுதாயச் சூழ்நிலை சீர்திருந்தும்வரை என்னைப்போன்ற நாடோடிக்கு வாழ்வேது? ஆம்! உள்ளவனுக்கு ஒரு நீதி! இல்லாதவனுக்கு ஒரு நீதி. இம்மாதிரியான ஓரவஞ்சனை, இப்பாழும் உலகத்தில் நிலவியிருக்குமட்டும், மனிதன் மனிதனுக வாழமுடியாது.

# Music on the Piano

**J. Antoine Lourduraj, VI**

> "The man that hath no music in himself
> Nor is not moved with concord of sweet sounds
> Is fit for treasons, stratagems and spoils."
>
> *Shakespeare, Merchant of Venice V, I.*

MUSIC is the art of expressing or stirring one's emotions by melodious and harmonious combination of sounds. Man in his quest for discoveries wanted to discover some means or other to express his feelings in a way that will catch the ear, the heart and soul of his listeners.

God in his overflowing love for mankind has endowed nature with all that man needs. The only thing is that man should not abuse this great love of his supreme bounty. He has to use the things of nature in so far as it gives glory to God and satisfies the noble ideas of man. Music certainly gives glory to God, for as the great St. Augustine puts it: "To sing is to pray twice."



Music is found everywhere in nature in the birds of the air, in the waves of the ocean, in the gentle breeze whistling through the leaves of the forest; nay even in the frightful thunder there is music.

The piano is a fine musical instrument the modern world possesses. Everyone likes to listen to a good pianist and say within himself "Ha, if I could play like him!" It will be interesting to know how this master musical imstrument came into existence. Many hundreds of years ago men learnt from the bow with which they shot their arrows that a tight string makes a musical note when it is struck. They found out that a note is high if the string is tight, but low if the string is loose. From these small beginnings grew up the harp.

At first the harp consisted of a few strings stretched on a simple frame. It was hung in the trees and the wind made the music as it blew through the strings. But bit by bit men found out the way of getting tunes by plucking the strings with their fingers. The most beautiful harps were made by the Italians, but they say that they learnt a great deal from the harps of Ireland.

From the harp came the harpsichord, which was the father of our modern piano. A harp put into a case was called the harpsichord. It had a keyboard, like the black and white keys of our pianos. When they touched a key with their fingers a small guill rose inside the frame and plucked a string. The effect was very pretty, but the tone could not be varied, so that one never had a very loud or very soft note if one wanted it,


For three hundred years the harpsichord was the favourite instrument in Europe.

But man was not satisfied with this harpsichord, for this instrument could not give full vent to the throbbings of his heart. So he wanted to improve upon this and make out of this instrument an instrument which will produce sounds of all pitches with which a sweet melody could be played. Man began experimenting and as a result of labour and experiment of more than a hundred years, early in the eighteenth century the first real piano was made in Italy. As for anything good and useful, much labour, disappointments, hardships have gone into the making of our modern pianos which everyone loves to enjoy.

In a piano the note is struck by a little hammer. Every key that is touched makes a little hammer rise and hit the string to which it belongs. One can produce a loud or a soft note by pressing on a pedal and the instrument can be kept in tune easily, because the strings are attached to metal pegs which are turned to loosen or tighten the string. The piano case is made of wood, well-seasoned so that it will not split or shrink. The wood is chosen for its beauty. Rosewood and ebony are favourites for this work.

At this stage of the development of the piano man had not yet found out a way of writing down the notes in some way or other. But as time passed by the enthusiastic adventurer, man, found out a way of writing down the notes. At first all playing was by the ear. Now it is written. The notes are little circles with or without a line attached to it. They are placed on sets of lines. By means of the circles and lines one knows whether to play a high or a low note; and whether it should be long or short. So we see that years of experiment and hours of hard labour were necessary before we could have the pleasure of hearing the simplest song played on the piano.

"Music is the food of Love."



## தப்பு இல்லாத விடை

மாணவன்—(*பரீட்சை எழுதுகையில் எழுந்துநின்று*) *சார்! சார்!! இன்றைக்கு என்ன தேதி?*


ஆசிரியர்—*தேதி கிடக்கட்டும். பரீட்சைதான் முக்கியம். பேசாமல் கவனித்து எழுது.*

மாணவன்—*என் பேப்பரில் ஏதேனும் ஒன்றாவது தப்பில்லாமல் இருக்கட்டும் என்றுதான் சார் கேட்டேன்.*—**K. R.** இஞ்ஞாசிமுத்து, 4. *அ.*

# மறைந்த வாள்

A. S. ஜெயராஜ் பெர்னாந்து, 3 அ.

மதனபுரி என்னும் தேசத்தை மதனன் என்னும் அரசன் ஒருவன் நேர்மையுடன் அரசாண்டு வந்தான். அவனுக்கு நெடுநாளாகியும் புத்திர பாக்கியம் இல்லை. அவ்வரசருக்கு வீரசேனன் என்ற ஒரு நல்ல மந்திரி இருந்தார். அவரும் பிள்ளையிலாக் குறையினால் கவலைப்பட்டுக்கொண்டிருந்தார். அரசன் வேண்டுதலின் பயனாகச் சில மாதங்களுக்குப்பின் அரசிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இதே நாளில் மந்திரிக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. பிறகு கேட்கவேண்டுமா? ஊரெல்லாம் ஒரே ஆரவாரமாயிருந்தது. ஒரு நல்ல நாளில் அரச குமாரனுக்கு 'ஜீவநாதன்' என்றும்,



மந்திரி குமாரனுக்கு 'மகுடபதி' என்றும் பெயரிட்டுக் கவனமாய் வளர்த்து வந்தனர். குழந்தைகள் இருவரும் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்தனர்.

அன்றொரு நாள் .........காலை பத்து மணியிருக்கும். அரசன் தனது பரிவாரங்களோடு வேட்டைக்குப் புறப்பட்டான். ஜீவநாதனும், மகுடபதியும் அவர்களோடு சென்றனர். உல்லாசமாக வேட்டையாடிக்கொண்டிருக்கையில் ஓர் அழகிய மானைக் கண்டனர். அடுத்த நிமிஷம் துள்ளியோடும் மானைத் துரத்தி ஓடினர்.

ஆனால், இவர்களது ஓட்டம் மானுடைய ஓட்டத்திற்கு நிகராகுமோ? மான் எங்கேயோ ஓடி மறைந்தது. நண்பர்கள இருவரும் சோர்வுடன் திரும்பிச் செல்ல நினைத்தனர்.

ஆனால்.........அவர்கள் வழி தப்பிவிட்டனர். எங்கெல்லாமோ சுற்றி அலைந்தனர். எங்கு செல்வதென்று தெரியவில்லை.

பாலும், பழமும் உண்ட அவர்கள் பசியினால் வாடினர். பஞ்சு மெத்தையில் சாய்ந்த அவர்கள் கல்லும், முள்ளும் நிறைந்த இடத்தில் உட்கார்ந்திருந்தனர். அழகிய பூஞ்சோலையில் உல்லாசமாய் உலாவினவர்கள் கொடிய காட்டில் திகைத்து நின்றனர். பகலவன் அக்காட்சியைக் காண முடியாமல் எங்கோ சென்று மறைந்தான். இருள் கவ்வ ஆரம்பித்தது. அதுபோலவே, நண்பர்களிருவரின் உள்ளத்திலும் பயம் கவ்வ ஆரம்பித்தது. என்ன செய்வது?

இப்படியாக அவர்கள் இங்குமங்கும் அலைந்துகொண்டிருக்கையில் மகுடபதி கனிகள் நிறைந்த மரம் ஒன்றைக் கண்டான். உடனே, 'கிடுகிடு'வென்று மரத்திலேறினான். அடுத்த நிமிஷம் அம்மரத்திலிருந்து மாங்கனிகள் உதிர்ந்தன. இருவரும் அவற்றை உண்டு பசியைத் தீர்த்துக் கொண்டனர். பசி தீர்ந்ததும் அவர்களுடைய முகத்தில் சிறிது உற்சாகம் காணப்பட்டது. அவர்கள் தண்ணீர் குடிப்பதற்

க்காக அருகிலிருந்த அருவிக்குச் சென்றனர். சென்றுகொண்டிருக்கும்பொழுது முன்னே சென்றுகொண்டிருந்த மகுடபதியை ஜீவநாதன் சடக்கென்று பிடித்திழுத்தான். மகுடபதி திரும்பி ஜீவநாதன் காட்டிய அத்திசையைப் பார்த்தான்.

ஆ! அங்கே ஒரு வேங்கைப் புலி சென்றுகொண்டிருந்தது. அதைக் கண்ட மகுடபதி "ஜீவநாதா, பயப்படாதே! இவ்வேங்கைப் புலியை ஒரு கை பார்க்கலாம்," என்றான். அடுத்த நிமிஷம் இச்சிறுவர்களின் சப்தம் கேட்டுத் திரும்பிய அவ்வேங்கை குபீரென்று அவர்கள்மீது பாய்ந்தது.

ஆ! ஜீவநாதன் மூர்ச்சித்துக் கீழே விழுந்துவிட்டான். மகுடபதி தன் கையிலிருந்த வாளினால் வேங்கையின் வலது கண்ணில் நறுக்கென்று குத்தினான். காயம்பட்ட அவ்வேங்கை வேதனையுடன் முழங்கிக்கொண்டு ஓடியது. மகுடபதியும் அதைத் துரத்திக்கொண்டு ஓடினான். ஓடிக்கொண்டிருந்த வேங்கையின்மேல் தன் வாளை ஓங்கி வீசினான். "சதக்." அவ்வாள் வேங்கையின் விலாப்புறத்தைத் துளைத்துவிட்டது. வேங்கை மண்ணில் வீழ்ந்து துடித்தது. அதே நேரத்தில் மகுடபதியின் கையில் ஓர் அம்பு பாய்ந்தது. அடுத்தகணம் பயங்கரச் சிரிப்புடனும், கொடூரப் பார்வையுடனும் ஒரு காட்டு ராஜா அவன்முன் தோன்றினான். மகுடபதி உடனே தாவி வேங்கையின்மேற் பாய்ந்திருந்த தன் கத்தியை உருவிச் சண்டைக்கு ஆயத்தமானான்.

அடுத்த நிமிஷம் இருவரும் போர் புரியலானார்கள். அந்த முரட்டுக் காட்டு ராஜா ஓங்கி மகுடபதியின் வாளை, தன் வாளினால் அடித்தான். மகுடபதியின் வாள் கண்காணா இடத்தில் போய் விழுந்து மறைந்தது. மகுடபதியின் நிலைமை தான் என்னே! திகைத்தான். அவனது எதிரியின் வாளோ அவன் மார்பை நெருங்கிக்கொண்டிருந்தது. இன்னும் ஒரே க்ஷணந்தான். பிறகு மகுடபதியின் கதி?

இதே சமயத்தில்தான் மகுடபதியின் இரத்தத்தை உறிஞ்சச் சென்ற வாளை ஒரு கரம் தடுத்தது. காட்டு ராஜா திரும்பிப் பார்த்தான். வேறு யாருமில்லை அவனது அருமை மகன்தான். ஆனால் அக்காட்டு இளவரசனின் கரம் ஜீவநாதனின் கரத்தைத் தழுவிக்கொண்டிருந்தது.

ஆம்; மூர்ச்சை அடைந்து விழுந்துகிடந்த ஜீவநாதன் மூர்ச்சை தெளிந்து மகுடபதியைத் தேடுவதற்கு வந்துகொண்டிருந்த போதுதான் அக் கத்தியை தடுத்தனர்.

தாங்கள் இருவரும் சண்டை செய்துகொண்டிருக்க, காட்டு இளவரசனும், ஜீவநாதனும் கைகோத்துக்கொண்டிருக்கின்றனர். தன் மகனிடத்திலிருக்கும் அன்புகூட தன்னிடமில்லை என்று காட்டு ராஜாவின் மனம் இளகியது.

அடுத்தக்ஷணம் அவன் கத்தியைத் தூரத்தில் எறிந்தான். நால்வர் முகத்திலும் அன்புக் குறி தென்பட்டது. காட்டு ராஜாவின் அரண்மனையில் தங்கள் வீட்டைக்கூட மறந்து எல்லையிலா மகிழ்ச்சியுடன் விருந்து உண்டுகொண்டிருந்தனர் ஜீவநாதனும், மகுடபதியும்.



உரிமையும் கடமையும் என் தாய் வயிற்று சேய்கள். நாட்டின் இரு கண்கள் நாணயத்தின் இரு பக்கங்கள்போல, நாணயத்தின் எப்பக்கம் தேய்ந்தாலும் அது செல்லாக் காசாகிவிடும்.—பாரதிதாசன்.

# PONGAL

**Edward Xavier,** V

PONGAL is a very ancient feast. It is celebrated throughout the whole world in some form or other. In India we call it Pongal. But in Western countries it takes the form of harvest festivals. Farmers work very hard till the end of the year. At last they get fresh grains from their fields. They feel happy. Their happiness leads them to God, the source of their joy. They want to thank God who has made everything.

On a fixed day the people take some fresh grains and cook them. They place the food before God and make an offering of it so that God may be pleased with them. This celebration is called Pongal. On that day the girls decorate the house. Boys go hither and thither and play happily. Their mothers cook pongal and make many sweet cakes. Their fathers give rest to the cows and bulls. Men and women wear new clothes and have a good dinner, after they had made the sacrifice. The cows and bulls are also fed well and left free. In India we celebrate it in the month of January.



There are three kinds of Pongal; one Bogi Pongal, another Mattu Pongal and the last Pongal proper. Nowadays Pongal plays an important part in diverting the people's mind from this world to the other. The aim of Pongal is to remember the goodness of God and thank Him for what he has done. We realise that without His help we will not get food. Hence we learn to rely on God rather than on ourselves.

Perhaps some may never think about God. But on the feast of Pongal they get a chance to think about God and pray to Him with all the members of their family. So Pongal turns the mind of the people to God. It helps people to become pious. But some may still ask why we celebrate it. Pongal is not for mere joy. Besides being joyful we have to think of God on that day.

So on the feast of Pongal each and every one of us must think if we have fulfilled our duty during the past year. we must promise to be diligent and do work better than the previous year. We must start the new year praying God that He may give us better harvest in the year to come.



# நாகரிகம்

S. ஜெயராமன், 6 இ.

"முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்"

என்பது நற்றிணை.

தன் நண்பன் ஒருவன் மனம் மாறுபட்டு பகைமையால் தனக்கு நஞ்சு கலந்த உணவை அளிக்கிறான் எனத் தெரிந்தும், அவனை இன்புறச் செய்தற்காக அவ்வுணவை உண்ணத் துணியும் இனிய நண்பன் ஒருவனைப்பற்றி இவ்விரண்டடிகள் கூறுகின்றன.

நாகரிகம் என்றால் என்ன? அன்பு, அருள், அடக்கம், அறிவு, தன்னல மறுப்பு ஆகியவற்றின் உருவமே நாகரிகம். இது 'நகர்' என்ற சொல்லினடியிலிருந்து பிறந்தது. தற்கால நாகரிக, மக்கள், தங்கள் தேவைகளை மிகுவிக்கும் இயந்திரப் பெருக்கத்தையும் செல்வப் பெருக்கத்தையும் 'நாகரிகம்' எனக் கூறுகின்றனர். ஆனால் தமிழகத்திலோ, நாகரிகம் எனும் சொல்லுக்கு மற்றொரு பொருளும் கூறுவர். மனிதப் பண்புகளான, நன்றி மறவாமை, இன்னா செய்யாமை, விருந்தோம்பல் போன்றவை அரிய குணங்களாம்.

"இன்னாசெய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்துவிடல்"

தனக்கு தீங்கு விளைவித்தவருக்கும் அவர் நாணும்படியாக நன்மையைச் செய்து, அவர் முன்பு தனக்குச் செய்த தீமையையும் மறக்கவேண்டும். இதனைச் செய்தற்கு சிறந்த உயர்குணம் வேண்டும். "என்னே! தமிழரின் குண வியல்பு"!

"இன்னா செய்தார்க்கு இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

என்பது குறள்.

"தனக்கு தீமை செய்தவருக்கும், நன்மை செய்யாவிடில் நிறை குணங்களால் ஒரு பயனும் விளையாது" என்பதே மேற்கூறிய குறளின் கருத்து.

மேற்கூறிய சீரிய மனப்பான்மையைக் கொண்டவர் தமிழர். இதனையே 'நாகரிகத்தின் உயிர் நாடி' என்பர். இத்தன்மை பிறவியிலேயே ஒருவரிடம் காணப்பட வேண்டுமேயன்றி, பிறரைப் பார்த்து ஒழுகுதலால் வருவதன்று.

ஓர் காலத்தில், எல்லோரிடமும், எந்நாட்டினரிடமும் இப்பண்பு காணப்பட்டது. ஆனால் மேலை நாடுகளில் பேராசை பொறாமை போன்ற தீக்குணங்கள் வேரூன்றின. அதனால் கொடை, கருணை போன்ற உயிர்ப் பண்புகள் மண்ணோடு மண்ணாயின. அதற்கு மாறாக இயந்திரப் பெருக்கத்தின் வளர்ச்சி மனப்பான்மை ஆங்கு குடியேறியது.

"இரும்பு பிடித்தவன் கைகள் சும்மா இருக்குமா?" என்பர் பெரியோர். ஆதலின் அவை தங்கள் இராணுவ பலத்தினை பிற நாடுகளின்மீது சோதித்தன. இவ்வரக்கத் தன்மைபூண்ட பேராசையும், பொறாமையுமே ஹிட்லர், ஹனிபால்போன்ற சர்வாதிகாரிகளையும் தோன்றச் செய்தன. ஆகவே இவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் "உலகத் துன்பங்கள்" பெருக்கெடுத்து வருகின்றன.

உண்மையில் நிறத் திமிர், இயந்திரப் பெருக்கம், செல்வப் பெருக்கம் இவை நாகரிகச் சின்னங்களாகா. ஆயின் பணப் பேராசை, நாட்டு நன் மக்களின் தூய உள்ளத்தைவிட்டுப் பிரியும் அந்நாளே, நாகரிக உதயத்தின் நன்னாள் ஆகும். நம் நாட்டிலும் சிலர், ஏன்? பலர், மேனாட்டு, வெளிப்பகட்டுகளில் மனதினைப் பறிகொடுத்திருக்கின்றனர். எனவே உயரிய நோக்கங்களைக்கொண்ட இந்தியத் தாயும், தன்னலமுடைய ஒரு சிலரால், தலை குனிந்து, நாணி உலகமென்னும் வீதியில் உலாவுகிறாள்.

இன்றைக்கு இந்திய மக்களின் மிக்க வளர்ச்சியால் ஆத்ம சிந்தனை, அஹிம்சை, விருந்தோம்பல், இன்னா செய்யாமை போன்றவை மண்ணோடு மண்ணாய் மக்கி விட்டன.

எனவே மக்கள் நாகரிக வாழ்க்கையை நடத்த விரும்பினால், மேற்கூறிய உயரிய கொள்கைகளைக் கடைப்பிடிக்கவேண்டியது இன்றியமையாதது. வாழ்க ஆத்ம சிந்தனை! வளர்க நாகரிகம்! வளர்க!! வளர்க!!!


# கள்ள மார்க்கெட்

T. வெங்கடாசலபதி, 4 ஈ.

கோபால் முதல் படிவத்துப் பையன். அவனோடு ராமுவும் படித்துக் கொண்டிருந்தான். இவர்கள் இருவரும் இணைபிரியாத ஆத்மநண்பர்கள். கோபால் எங்கு இருக்கின்றானோ அங்கே ராமுவையும் பார்க்கலாம். இவர்களுடைய நட்பைப் பார்த்து அவர்களின் உபாத்தியாயர் மிகவும் சந்தோஷம் அடைந்தார்.

ஒருநாள் கோபால் பள்ளிக்கூடம் வரவில்லை. மறுநாளும் வரவில்லை. மூன்றாம் நாளும் வரவில்லை. கோபால் பள்ளிக்கூடத்திற்கு வராததனால் ராமுவுக்குப் படிப்பின் மேல் கவனம் செல்லவில்லை. 'கோபால் ஏன் வரவில்லை? அவன் வராமலிருப்பதற்குக் காரணம் என்ன?' என்ற ஓரே நினைப்புடன அன்றையப் பொழுதை மிகக் கவலையுடன் கழித்தான்.

அன்று பள்ளிக்கூடம் விட்டதும் நேரே கோபாலின் வீட்டிற்குச் சென்றான். அங்கு கோபால் ஒரு கட்டிலில் படுத்துக்கொண்டு வாய்க்கு வந்தவாறு கண்டபடி பிதற்றிக்கொண்டிருந்தான். அவன் தாய் மிக்க வருத்தத்துடன் அருகில் உட்கார்ந்துகொண்டு இருந்தாள்.



ராமு வந்தவுடன் கோபாலனின் தாய், "வா, அப்பா ராமு, கோபாலுக்கு மூன்று நாட்களாகச் சுரம். அதனால்தான் பள்ளிக்கூடம் வரவில்லை" என்று கூறினாள். பின் ராமு, கோபாலனின் முகத்தைத் தூக்கி, "கோபால், கோபால்," என்று கூப்பிட்டவுடன் கோபால் கண்ணைத்திறந்து பார்த்து விட்டு மறுபடியும் கண்ணை மூடிக்கொண்டான்.

பின் ராமு, "அம்மா, கோபாலுக்கு எந்த டாக்டர் மருந்துகொடுக்கிறார்" என்றான். அவள் அங்கிருந்த டாக்டரின் பெயரைச் சொல்லி அவர்தான் மருந்துகொடுப்பதாயும் அன்று காலையில் டாக்டர் ஒரு மருந்தை எழுதிக்கொடுத்து அதை வாங்கி வரும்படியும், அதன் விலை 10 ரூபாய் என்றும் அதை வாங்கத்தான் கோபாலின் தந்தை வெளியே சென்றிருப்பதாயும் கூறினாள். அச்சமயம் கோபாலின் தகப்பனார் அங்கு வந்து, "10 ரூபாய் மருந்திற்கு 50 ரூபாய் கேட்கின்றனர்" என்றார். அக்கடை முதலாளி ராமசாமி முதலியார் என்றும் சொன்னார். பிறகு ராமு, 'ஐயா! ராமசாமி முதலியார் என்ற பெயருடைய என் மாமா ஒருவர் மருந்துக்கடை வைத்துக்கொண்டிருக்கிறார். அவரிடம் இம்மருந்து இருந்தால் நமக்கு 10 ரூபாய்க்குக் கிடைக்கும்" என்று சொன்னான். உடனே கோபாலின் தகப்பனார் ராமசாமி முதலியாருடைய கடையில்தான் அம்மருந்து இருக்கிறதென்றும் அவர்தான் 50 ரூபாய் விலை கேட்கின்றார் என்றும் கூறினார். இதைக்கேட்ட ராமுவுக்கு வியப்பாக இருந்தது. 'நம் மாமாவா இப்படி கள்ளவியாபாரம் செய்கிறார். இது தெரிந்தால் போலீஸார் பிடித்துக்கொள்வார்களே' என்று நினைத்தான். பின் வெகு நேரம்வரையில் இதற்கு என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்தான்.

பின் அவன் ஒரு முடிவிற்கு வந்தவனாய்க் கோபாலின் தகப்பனாரை அழைத்துக்கொண்டு தன் மாமாவின் மருந்துக்கடைக்குச் சென்றான். ராமுவைப் பார்த்த அவன் மாமா அவர்களை வரவேற்றார். பின் அவன் கோபாலின் தகப்பனாரிடமிருந்து அக்காகிதத்தை வாங்கி தன் மாமனிடம் கொடுத்துஅம்மருந்து இருக்கிறதா? என்று கேட்டான். அதற்கு அவன் மாமா இம்மருந்து கிடைப்பது மிகவும் அரிது. அது என்னிடம் மட்டும்தான் உள்ளது.. அதன் விலை 50 ரூபாய் ஆகுமென்று சொன்னார். உடனே! ராமு, "அம்மருந்தைக் கொடுங்கள் பணம் தருகிறேன்" என்று கூறினான். பின் அவர் அம்மருந்தைக் கொண்டுவந்துகொடுத்தார். பின் அம்மருந்தைக் கோபாலனின் தந்தை

யிடம் கொடுத்துவிட்டு 10 ரூபாய் வாங்கி அவன் மாமாவினிடம்கொடுத்தான்.

. பத்து ரூபாய் கொடுப்பதைக்கண்டு அவன் மாமா மிகவும் கோபமடைந்து பணத்தை வாங்கமுடியாதென்று கூறி மருந்தைத் தரும்படி கேட்டார். உடனே ராமு மாமாவினிடம் சென்று, "மாமா, ஜாக்கிரதையாய் இருங்கள். நீங்கள் கள்ளமார்க்கட்டில் மருந்து விற்பதாகப் போலீஸாருக்குத் தெரிந்து உங்களைப் பிடிப்பதற்காக வந்திருக்கின்றனர். அதற்காக நான் உங்களை எச்சரிக்கும்பொருட்டே இம்மருந்துக் காகிதத்தைக் கொண்டுவந்திருக்கிறேன். இப்பொழுது அதிகப் பணம் வாங்கினுல் வெளியில் இருக்கும் போலீஸார் உங்களைப் பிடித்துக்கொள்வார்கள்" என்று கூறினுன். ராமுவின் மாமாவிற்கு இதைக்கேட்டதும் பயம் ஏற்பட்டுவிட்டது. அந்தப் பத்து ரூபாயைக் கொடுத்து "நீ எனக்கு ஆபத்தில் உதவியதற்காக இந்தப் பத்து ரூபாயையும் எடுத்துக்கொள்" என்று சொன்னுர்.

ராமு தன் மாமா கொடுத்த 10 ரூபாயைக் கோபாலின் தகப்பனுரிடம் கொடுத்து கோபாலுக்கு மருந்து கொடுக்கும்படியும் சொல்லிவிட்டுத் தன் வீடுசென்றுன். மேற்சொன்ன சம்பவம் நடந்த மூன்றும் நாளன்று கோபாலும் ராமுவும் **கள்ள மார்க்கட்டின் கடுந் தண்டனையைப்** பற்றிப் பேசிக்கொண்டனர்.

★

# எல்லாம் நன்மைக்கே

**S. பாலு, 3 அ.**

ஆனந்தன் என்ற அரசன் ஒருநாள் ஒரு ஆப்பிளை எடுத்துக் கத்தியால் நறுக்கும்போது அஜாக்கிரதையினுல் அவனது சுண்டுவிரல் நறுக்குண்டது. அதனுல் வேதனையடைந்த அரசன் ஓ.... என்று கத்தினுன்.

மந்திரி இதைப் பார்த்துவிட்டு, "எல்லாம் நன்மைக்கே" என்றுன். இதைக் கேட்ட அரசன் சினம்கொண்டு மந்திரியை சிறையிலிட்டான். இதைக்கேட்ட மந்திரி "அதுவும் நன்மைக்கே" என்றுன். மறுநாள் அரசன் தன் பரிவாரங்களுடன் வேட்டையாடக் காட்டை அடைந்தான். திடீரென்று மழைபெய்ய ஆரம்பித்தது. அரசனுடைய பரிவாரங்கள் ஆளுக்கொரு பக்கம் ஓடிவிட்டனர். அரசன் காற்றிலும், மழையிலும் படாதபாடு பட்டுக்கொண்டிருக்கையில், காளிக்குப் பலிகொடுக்க ஒரு ஆளைத் தேடிவந்த கள்வர்கள் அரசனைப் பிடித்து தங்கள் குகைக்கு இழுத்துச் சென்றனர்.

அரசனைக் காளிக்குப் பலிகொடுக்கப் போகையில் அவன் விரல் நறுக்குண்டதைப் பார்த்து அவனை விடுதலைசெய்தனர்.

அப்போதுதான் தன் விரல் வெட்டுண்டது நன்மைக்கே என்பது அரசனுக்குத் தெரிந்தது. உடனே மந்திரியிடம் சென்று எல்லாவற்றையும் சொல்லியபின், தான் அவனைச் சிறையிலிட்டதற்காக வருந்தினுன். அதற்கு மந்திரி, "நீங்கள் என்னைச் சிறையிலிட்டதும் நன்மைக்கே. ஏனெனில் நான் சிறையிலிடப்படாவிட்டால் உங்களோடு வந்திருப்பேன். திருடர்கள் கையிலகப்பட்டுப் பலியிடப்பட்டிருப்பேன்" என்றுன். எல்லோரும் சந்தோஷமாய் அரண்மனைக்குச் சென்றுர்கள். எல்லாம் நம் நன்மைக்கே கடவுள் அனுப்புகிருர்.

# THAT'S LIFE

**Rajkumar,** V

THE Golden Eagle entered the class and sat in the chair. He was our Moral Instruction teacher. His head was bare as a cricket field during the interval. There were six hairs on his head like the six stumps. His head was reflecting the sunlight. He had a spectacle frame with only one glass. His nose was as fierce looking as that of an eagle. But he had a heart of gold. Hence he got the name Golden Eagle. Two of his teeth were jutting out of his mouth showing that they were whiter than any other part of his face. He was wearing an old black coat without any pocket or button. He was wearing a pair of shoes without heals. Two toes came out of the shoe showing that it was air-conditioned.

I have not yet told you the story. He came and sat in the chair. Then he began to teach us about patience. His speech was so interesting that one third of the class began to sleep. Another one third began to read books, which certainly were not text books. He said that we must be always patient. We must not get angry for anything. Even if any one strikes us we must not get angry. If one strikes us on one of the cheeks we must show him the other. Then he would be moved by our action and come to ask pardon. Thus he went on teaching.

I was moved by his speech. I determined not to get angry for anything. I came out of the school and walked along the road. At that time a fellow came to me and gave me a good slap on the cheek. At once I got angry; but according to the Golden Eagle's advice I showed him the other also. But that fellow gave the same slap on the other cheek. I got angry. I forgot the advice of the teacher and ran to strike him. But he was big. So I was patient.


The next day was a holiday. I went to the Golden Eagle's house. I reached his house and suddenly stopped near the door. There was a roaring noise. I listened. It was our teacher scolding his wife and beating his boy. His eyes were red. The chief thing was that he was really angry. He saw me and asked me to come in. I went in and asked him why he was angry. He said that his snuff box was not to be found. Then I said to him, "Sir, yesterday you told us not to get angry for anything. But to-day you......" I could not finish the sentence. He was so angry that he came to beat me. But I was not a fool to stand there. I ran to the courtyard of his house. But the door was locked. Suddenly I turned. He also turned. But he slipped down and fell. I got out of the house, ran along the road laughing all the time. If any one had seen me then, he would have thought that I was mad.

But life is like that. We fail in the very things which we order others to do... So let us be very sympathetic towards the failings of others.

# பெற்றோர் ஒத்துழைப்பு

**S. வின்சென்ட், 3 இ.**

**கல்வியென்னும்** அறிவுக் களஞ்சியம் ஒவ்வொரு சிசுவினிடத்திலும் பொதிந்துகிடக்கிறது. இதைப் பூரண தத்துவத்துடன் வெளிப்படுத்த, பயிற்றுவோர்கள் அக் குழந்தைக்கு ஒரு கருவியாக அமைகிறார்கள். இம் மாபெரும் பணியில் பெரும்பாகம் ஆசிரியரைச் சார்ந்ததெனினும் பெற்றோர்களும் இவ்விஷயத்தில் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள். மாணவர்கள் பள்ளியில் ஒருசில மணிநேரம் ஆசிரியர்களின் கண்காணிப்பில் இருந்துவருகின்றனர். அவர்கள் வாழ்க்கையில் பெரும் பகுதி பெற்றோர்களின் மேற்பார்வையில் தான் இருந்துவருகிறது. பள்ளியில் பயிலும் பல கலைகளும் அவர்களிடத்திலே! பரிபூரண பலனை அளிப்பது வீட்டிலே. அவர்கள் திறமை, அவர்களைப் பெற்றோர் கவனம் செலுத்தும் விதத்தைப் பொறுத்துள்ளது. ஆகவே கல்வித் துறையில் முன்னேறுவதற்குப் பெற்றோர் ஒத்துழைப்பு இன்றியமையாதது.




பள்ளியில் படிக்கும் படிப்பே கல்வியென்று நம்மவரில் பலர் தப்பிதமாக எண்ணுகிறார்கள். தவழ்ந்து திரியும் குழந்தை, தன் தாய் மடியிலிருந்துகொண்டே கல்வித் தொழிலை ஆரம்பித்துவிடுகிறது. பெற்றோர்களோடே நடமாடித் திரிந்து சரமாரியான கேள்விகளைத் தனது பெற்றோர்களிடம் கேட்டுப் பல விஷயங்களைக் கற்றுக்கொள்ளுகிறது. இளமைப் பருவத்தில் மற்றவர்களைப் பார்த்துப் பின்பற்றும் பண்புடையது. பெற்றோர்கள் மக்களுக்கு வார்த்தை, நடத்தை, ஒழுக்கம் முதலானவற்றில் ஒரு மேல்வரிச் சட்டமாக இருக்க வேண்டும். பெற்றோர்கள் கல்வி அறிவுடையவர்களாய் இருப்பார்களெனில் குழந்தைகள் பள்ளி வயதை அடையுமுன்னே அவர்களுக்கேற்ற சில ஆதாரமான விஷயங்களைப் போதிக்க முடியும்.

நமது ஜென்ம பூமியாகிய இந்தியாவில் பெற்றோர்களின் பிற்போக்கினாலும் ஒத்துழையாமையாலும் மாணவர் முன்னேற்றம் பெரிதும் தடைபடுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விக்கு வேண்டிய பண உதவி செய்வதுடன் தங்களின் கடமை முடிந்தது என்று வீணாக இருந்துவிடுகிறார்கள். படித்த சில பெற்றோர்கள் பாடசாலை நிர்வாக ஊழலையும் அதன் பிற்போக்கையும், குறிப்பாக ஆசிரியர்களைக் குறை கூறுவதிலேயே அவர் காலத்தைச் செலவழிப்பார்கள். பள்ளியில் நடைபெறும் சாரண இயக்கம், உல்லாசப் பிரயாணம், விளையாட்டுப் போட்டி, பெற்றோர் தினக் கொண்டாட்டம் ஆகியவைகளெல்லாம் ஆசிரியர்களின் பணம் திரட்டும் இரகசியத் திட்டமென சிலர் விளம்பரம் செய்கின்றனர். பாடசாலைவிட்டு வீடு திரும்பவிருக்கும் மாணவர்களுக்கென, பல வேலை ஜாபிதாக்களை அவர்கள் வீட்டையடைந்தவுடன் சமர்ப்பிப்பார்கள். பாடசாலைக்குப் புறம்பான நேரங்களில் பிள்ளைகள் ஆசிரியருக்கோ, பாடசாலைக்கோ ஒரு சிறிய வேலை செய்துவிட்டால், எழும் ஆவேசத்தில் ஆசிரியர் மாணவர்களுக்கு ஆற்றும் அரும் பணியையும் மறந்து, ஆசிரியர்களின் மீது வசைமாரி பொழிய ஆரம்பித்துவிடுவார்கள். இத்தகையோர்கள் பாடசாலைக்கு உதவியாயிராவிட்டாலும் பாடசாலை வேலைக்கு எந்த விதத்திலும் இடையூறின்றி இருக்கவேண்டும்.

தன்னுடைய பிள்ளைகளின் முன்னேற்றத்தையே குறிக்கோளாகக்கொள்ளும் ஒவ்வொரு பெற்றோர்களும் ஆசிரியர்களை அலட்சியம் செய்யாது, அவர்களை அண்டிச்சென்று நெருங்கிப் பழகவேண்டும். தன் பிள்ளைகளின் குற்றங் குறைகளை அவர்கள்மூலம்

அறிந்து அவைகளைத் திருத்தி அமைக்கும் பணியில் ஆசிரியர்களோடு ஈடுபடவேண்டும். மாணவர்கள் வகுப்பில் கற்றுக்கொள்ளும் விஷயங்களை அன்று இரவு பெற்றோர்கள் தமது மேற்பார்வையின்கீழ் படிக்கச் செய்ய லாம். பெற்றோர்கள் படித்தவர்களாயின் அதில் அவர்கட்கு வேண்டிய உதவி புரிய லாம். ஆசிரியர்களோடு அடிக்கடி தம் பிள்ளைகளின் தேர்ச்சியையும்பற்றி அளவளாவி பிள்ளைகளின் தேர்ச்சியை விருத்தி செய்யலாம். பிரதி தினமும் பெற்றோர்கள் பிள்ளைகளை வகுப்பிற்காகக் குறிக்கப்பட்ட நேரத்தில் தவருது வரும்படி கவனிக்கலாம். கலியாணமென்றும், திருவிழாவென்றும் அடிக்கடி அயலூர்களுக்குப் பிள்ளைகளை அழைத்துச்செல்லும் வழக்கத்தைக் கைவிட வேண்டும். அனுவசியமாக பாடசாலை நேரங் களில் மாணவர்களுக்கு வேலை கொடுப்பது வரவேற்கத்தக்கதல்ல. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் தோழர் விஷயத்தில் வெகு விழிப்பாக இருந்துகொள்ளவேண்டும்.

பெற்றோர்களின் இவ்வாறுன ஒத்துழைப் பால் மாணவர்கள் மகத்தான நலனை அடை கிறுர்கள். ஆகவே கல்வியில் கருத்துள்ள பெற்றோர்கள் மாணவனின் கல்வித் தேர்ச் சிக்குப் பாடசாலையிலும் வீட்டிலும் ஒரே விதமான பயிர்ச்சியும் பழக்கமும் அத்தியாவசியமானது என்பதை உணர்ந்து ஆசிரியர்களோடு ஒத்துழைப்பார்களாக!



## இங்கே வாருங்கள்

ஒரு கடைக்கு முன்னல் கீழ்க் கண்ட விளம்பரம் போடப்பட்டிருந்தது.
"வேறு கடைகளில் போய் ஏமாருதீர்கள். இங்கே வாருங்கள்"—

✳

அச்சமற்று இருப்பது மாத்திரம் தைரியம் என்பது சரியல்ல. உண்மையான நீதிக்காக போராடும் உள்ள உறுதியே தைரியம் எனப்படும்.—ப்ளூட்டார்க்.

சரி எனக் கண்டதை செயலில் காட்டாமலிருப்பதற்குத் தைரியம் இல்லாமையே காரணம்.—கன்பூஷியஸ்,

விதி விதி என்பதெல்லாம் வீணர் வகுத்த சதியேயாகும். விதியை வெல்ல மதியைப் பயன்படுத்து. வாழ்க்கையில் வெற்றி காண்பாய்.—வால்டேர்.

✳

தகப்பனுர்—(பையனைப் பார்த்து) டேய் பாலு, 5-ம் 5-ம் எத்தனை?

பாலு—10 அப்பா.

தகப்பனுர்—சரி. இந்தா 10 மிட்டாய்.

பாலு—போங்கப்பா. முந்தியே மிட்டாய் தருவதாகச் சொல்லியிருந்தால் இன்னும் 10 சேர்த்துச் சொல்லியிருப்பேனே.—S. தங்கவேலு, 3. ஈ.

# Man Is Man


**A. X. Felix Adaikalaraj** V

TO err is human" is an old saying. There is no one who never makes a mistake. To illustrate this we have a proverb in Tamil 'யானைக்கும் அடி சறுக்கும்'. We shall explain this by means of an example.

Mr. Jawaharlal Nehru, the Prime Minister of India was then studying in London. One day his teacher used a wrong word. So, all the students began to laugh. The teacher told them a story to show that man is a man and so he makes mistakes at times.

Henry VIII was the king of England. He ruled over his people well and his subjects were happy. One day the king went on a hunt. In a wood he saw a deer. He wanted to catch it. The deer ran away and the king chased it. Finding that he could not catch it he threw a bow at it. But the bow struck a man who was hewing a tree and killed him. The king was afraid and he went to the palace sadly. The next morning when he woke up he heard noise outside his palace. He went to the second storey and looked down. There was the angry crowd demanding why he killed the man. There was the fire of revenge and murder reflected in their eyes. The king was not angry. He went to them and said, "Friends! Man is a man. Which man has not made mistakes? I am also a man. I killed the man by mistake. If there is anyone among you who has never committed any mistake, let him come forward and punish me." There was silence. One by one, all slowly went away from that place.

If we realise the truth of this saying, how happy the world would be!



# பள்ளிக் கழகங்களின் ஆண்டு அறிக்கைகள்: 1952-'53

## இலக்கிய சொற்போர்க்கழகம்

எமது பள்ளி சங். தலைமை ஆசிரியர் சுவாமி அவர்களின் சீரிய தலைமையில், அலிகார் சர்வ கலாசாலையைச் சேர்ந்த திரு. S. N. டாங்கே அவர்கள் சொற்பொழிவு செய்ய 14–6–52-ல் இக்கழகத்தின் ஆரம்பக் கூட்டம் லாலி மன்றத்தில் மிக விமரிசையாய் நடைபெற்றது. இரண்டாம் கூட்டத்தில் நம் கல்லூரி வரலாற்று நூல் விரிவுரையாளர் திரு. இருதயராஜ் M. A. அவர்கள், "இந்தியா முன்னேற்றத்திற்கு மாணவர் பணி" என்ற பொருள் பற்றி அழகாகப் பேசினார்கள். சங். முருயிஸ் சுவாமி M. A., அவர்களின் தலைமையில், "மாணவர் நற்பழக்கங்கள்" என்ற பொருள் பற்றி சென்னைத் தமிழாசிரியர் முருகசிவம் சிறந்த சொற்பொழிவு ஆற்ற மூன்றும் கூட்டம் முடிவுற்றது.

இக்கூட்டங்களைத் தவிர பல்வேறு படிவப் பிரிவுகளில் பலவகைப்பட்ட பேச்சுகளும், உரையாடல்களும், சொற்போர்களும் நடைபெற்றன. வழக்கம்போல் கட்டுரைப் போட்டிகளும், பேச்சுப் போட்டிகளும் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

## பாரத சாரண இயக்கம்

சென்ற ஆண்டு போலவே இவ்வாண்டிலும் எம் பள்ளியில் 64 சாரணர்கள் வாரந்தோறும் கூடி இவ்வாண்டிற்கு வகுக்கப்பட்டுள்ள திட்டத்தின்படி பயிற்சி பெற வேண்டிய நற்பண்புகளில் பயின்று பொது நலத் தொண்டர்களாக விளங்கி வருகிறார்கள்.

இவ்வாண்டில் எம் சாரணர், பள்ளி விழா, தலைமைச் சுவாமியார் விழா, பள்ளி விளையாட்டுப் பந்தய விழா, குடியரசு தின விழா, சாரண வார விழா, நம் நாட்டுத் தலைவர் ராஜேந்திரப் பிரசாத் அழைப்பு விழா, பள்ளியின் பல் கலைக் கழக ஆண்டு விழா







முதலியவைகளில் சிறந்த பங்கெடுத்துக் கொண்டதுடன் திருச்சி ஜில்லா சாரணர் போட்டிப் பந்தயத்தில் எம் படை "Message Relay"-ல் முதலிடம் அடைந்துள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. நவம்பர் மாத ஆரம்பத்தில் உத்தமர் கோவிலுக்கு ஒரு நாள் சென்று தங்கள் பாடி வாழ்க்கையை திறம்படச் செய்துவந்ததுடன் நற்குடிமக்களாகத் திகழ ஒழுக்கப் பயிற்சியையும் பெற்று வருகின்றனர்.

## குருளை மந்தை


24 குருளையர்கள் வாரந்தோறும் நடைபெறும் கூட்டங்களில் தவறாமல் பங்கெடுத்து



*K. Ganesan IV D.*




*Sashider Nayak V F.*



*Sathappan V E.*

கருமமே
கண்ணாகி
முடிவை
நோக்குமின்.



*K. Natarajan*



Grand Anicut

*P. Augustin VI A.*



*K. Ganesan IV D.*

# நம் பள்ளி
# வீரர்கள்
# 1952–53



← M. தாமஸ்
3-ம் வகுப்பு வீரன்



R. இக்னேஷியஸ்
முதல் வகுப்பு வீரன்

L. ஜோசப் →
2-ம் வகுப்பு வீரன்



பயிற்சி பெற்று வருகின்றனர். திருச்சி ஜில்லா பாரத வார விழாவில் நடந்த குருளைப் போட்டி பந்தயத்தில் எம் குருளையர்கள் சிறந்து விளங்கி இரண்டு நற்சாட்சி பத்திரங்கள் பெற்றுள்ளனர். எம் குருளையர் ஆடலிலும் பாடலிலும், பல்வேறு விளையாட்டுகளிலும் பயிற்சி பெறுவதுடன் பிற்காலத்தில் சிறந்த குடிமக்களாக விளங்குவதற்கு அடிப்படையான ஒழுக்கப் பயிற்சியையும் நன்கு பெற்றுவருகின்றனர்.

## உடற் பயிற்சி

"All study and no play makes Jack a dull boy"—என்றபடி உள்ளத் தெளிவுக்கு



உடல் நலம் இன்றியமையாத தன்றோ? எனவே எம்மாணவர்களுக்கு முறையாக உடற் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருவதுடன் மாலையில் வகுப்புகள் முடிந்த பின்னும் பல்வகை ஆட்டங்களில் பங்கெடுத்துக்கொள்ள உற்சாகமும், பயிற்சியும் அளிக்கப் படுகிறது. கல்லூரி ஆண்டு போட்டிப் பந்தயத்தில் வெற்றி பெற்ற பலருக்கும், முதல், இரண்டாம், மூன்றும் வகுப்பு வீரர்களுக்கும், காரைக்குடி அழகப்ப கல்லூரித் தலைவர் உயர்திரு தம்பி அவர்களின் தலைமையில் வெள்ளிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

திருச்சி மாவட்டப் போட்டிக் குழுவினரால் நடத்தப்பட்ட ஹாக்கி, கால் பந்து விளையாட்டுக்களில் எமது மாணவர்கள் கலந்துகொண்டதுடன் இண்டர் ஸ்கூல் கிரிக்கெட் ஆட்டத்திலும் எமது ஜூனியர் டீம் பங்கெடுத்துக்கொண்டது. ஆனால் ஹாக்கி, ஜூனியர் கால் பந்துகளில் திடீரென இறுதியிலும், கிரிக்கெட்டில் முதலிலும் தோல்வியுற்றன. பொது விளையாட்டு மைதானம் கொடுக்க மாவட்டக்குழு மறுத்ததால் சீனியர் கால் பந்து டீம் போட்டியில் கலந்துகொள்ளாததுடன், எமது பள்ளி, உயர்நிலைப் பள்ளி மாணவர்களும்,



டீம்களும் ஏனைய போட்டிகளிலும் கலந்து கொள்ளாமல் இருந்துவிட்டன.

## நாடகக் குழு

எம் பாடசாலை நாடகக் குழுவின் திறப்பு விழா எமது கல்லூரி தமிழ் விரிவுரையாளர் திரு. சம்மனசு M.A., அவர்களின் தலைமையில் சிறப்புடன் கொண்டாடப்பட்டது.



எமது பள்ளி விழாவின்போது "ஊழியன்" என்னும் நாடகத்தை மிகத் திறமையாய் எம் குழுவினர் நடித்துக்காட்டினதுமல்லாமல் T. D. A. A. நிதிக்குப் பொருள் சேகரிக்க 5–11–52-ல் நடத்தப்பட்ட கதம்பக் காலச் சேபங்களில் சிறந்த பங்கெடுத்து "ஆப்த நண்பன்," "அரவ நர்த்தனம்" என்பவைகளை யாவரும் மகிழ்ச்சியுற நடித்தனர். எம் பள்ளி பல் கலைக் கழக ஆண்டு விழாவின்போது "புரட்சி வீரன்" என்னும் நாடகத்தை மிகத் திறமையுடன் எம் குழு நடத்திக் காட்டியது.

இவ்வாறாக எமது அங்கத்தினர் மேடை மீது ஏறிப் பேசவும், நடிக்கவும், பாடவும், சங்கீதக் கருவிகளைக் கையாளவும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

## தேசிய மாணவர் படை

எமது பள்ளியில் நிறுவப்பட்டுள்ள இரண்டு தேசிய மாணவர் படைகளில் 66 மாணவர்கள், இரண்டு ஆசிரியர்களின் கீழ் இராணுவப்பயிற்சி பெற்று வருகின்றனர். இப்பயிற்சியானது மாணவர்களின் உடற்பயிற்சிக்கு உரிய வாய்ப்புகள் அளிப்பதுமன்றி வாழ்க்கையின் வெற்றிக்கு மிகவும் இன்றியமையாததான நேர்மை, ஒழுக்கம், கட்டுப்பாடு, கீழ்ப்படிதல், ஒற்றுமை, தன்னலமற்ற சேவை முதலிய சிறந்த குணங்களை மாணவர்களிடையே

தோற்றுவித்து வளர்க்க ஏதுவாகவுள்ளது என்று கூறின், அது மிகையாகாது.


எமது காடட்டுகளுக்கு கொடுக்கப்படும் பயிற்சியின் சிகரமாக விளங்குவது வருடாந்தர பாடி வாழ்க்கை. இவ்வாண்டில்தான் முதன் முறையாக எமது பள்ளி மாணவர் அப்பாடி வாழ்க்கையில் பங்கெடுத்துக்கொண்டனர். அந்த முகாமானது திருச்சி ஜங்ஷனை அடுத்துள்ள "ஆண்டிப்பட்டி விடுதி" என்னும் பரந்த தோப்பில் செப்டம்பர் மாதத்தில் 10 நாட்கள் மிகச் சிறப்புடன் நடைபெற்றது. தஞ்சை, திருச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 14 பள்ளிகளிலிருந்து 540 மாணவர்களும் 18 ஆபீசர்களும் இப்பாடியில் பங்கெடுத்துக்கொண்டனர். இப்பாடி வாழ்க்கை மாணவரிடையே உள்ள ஜாதிமத வேற்றுமை, சுயநலம் முதலிய தீக்குணங்களைப் போக்கிஅவர்கள் யாவரும் ஒரு குலம், ஒரு குடும்பத்தைச் சார்ந்த சகோதரர்கள்போல் வசிக்கத்தக்க சந்தர்ப்பத்தைக் கொடுத்தது, என்பதில் ஐயமில்லை. இப்பாடியில் பற்பல பள்ளிகளுக்கிடையே நடந்த ஓட்டப்பந்தயங்களிலும் கால்பந்து போட்டியிலும் எமது மாணவர் வெற்றிபெற்று எமது பள்ளியின் புகழ்குன்றாது விளங்கச்செய்தனர்.




இவ்வாண்டில் இராணுவ அதிகாரிகளால் நடத்தப்பட்ட A I தேர்வில் 46 காடட்டுகள் பங்கெடுத்துக்கொண்டனர். அவர்கள் யாவரும் சிறப்புடன் வெற்றிபெற்றது பெரும் மகிழ்ச்சிக்குரியதே! அடுத்த ஆண்டில் இதைவிட இன்னும் அதிக சிறப்பாக நல்ல மதிப்பு எண் பெற்று தேர்ச்சியடைவர் என்று எதிர்பார்க்கிறோம்.

சென்ற ஆண்டுபோலவே, ஜனவரி 26-ம் நாள் எமதுபள்ளியில் நடந்த குடியரசுவிழாவில் எமது காடட்டுகள் அணிவகுத்துச் சென்று தேசியகொடிக்கு வணக்கம் செலுத்திய காட்சி பாராட்டத்தக்கது.






The School Excursion Party



" ஊழியன் "



நம் [illegible] தேசிய மாணவர் படை (1952—53)